155

Regd. No. 2569

SEP 1932

ஹிபாஜத்துல் இஸ்லாம்

حفاظة الاسلام

HIFAZATH - UL - ISLAM

உயர்தர செந்தமிழ் மாத சஞ்சிகை

மலர் 3. | ஹிஜ்ரி 1351 ரபீஉல் ஆகிர் 1932 ஆகஸ்டு மீ | இதழ் 8

உள்ளடக்கம் — பக்கம்

1.	ஸூரத்துல் பலத் தொடர்	...	229
2.	நாயக வாக்கியம்	...	332
3.	குத்பஜீலானீ (ரஹ்.)	...	334
4.	முஸ்லிம்களும் குர்ஆன்ஷரீபும்	...	336
5.	ஹஸ்ரத் உதுமான் (ரலி.)யின் ஆக்ஷியும், இப்னுஸபாவின் சூக்ஷியும்	...	339
6.	அரும்நிக்ஷிகள்	...	343
7.	சாத்தன்குள மகாநாடும், தா. இ. யும்	...	346
8.	நஞ்சிரூர்கட்கு	...	350
9.	சுகாதாரம்—இந்தியரின் ஆகாரம்	...	353
10.	மாதர் பகுதி	...	356
11.	செய்தித்திரள்	...	358
12.	பா. தா. வின் பகற்கனவு	...	361
13.	பா. தா. கோட்டார் விஜயமும், பரிதாப நிலைமையும்	...	363
14.	திருநபி தினக்கொண்டாட்டங்கள்	...	364
15.	இஸ்லாமிய வாழ்க்கை	...	369
16.	இஸ்லாமிய உலகம்	...	372
17.	மனிதனும் செய்நன்றி யறிதலும்	...	374
18.	ஆசிரியர் குறிப்பு	...	376

சென்னை, ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரின் வெளியீடு.

சந்தா நண்பர்களுக்கு

நம் அரும் மாசிகையின் சந்தாவை இதுவரை செலுத்தாமலிருக்கும் நண்பர்கள் தங்கள் சந்தாவை தாமதியாது அனுப்பிவைப்பார்களென்று நம்புகிறோம். இதுபொழுது ரிஜிஸ்டர் சார்ஜ் 3 அணாவாக உயர்த்தப்பட்டிருப்பதால் வி. பி. அனுப்புவதானல் நேயர்களுக்கு 5 அணா வீண்செலவு ஏற்படுகிறது. ஆதலின் நமது பழைய சந்தா நேயர்களும் புதிதாக சேரும் கனவான்களும் தங்கள் சந்தாத் துகையை மணியாடர் மூலம் அனுப்பிக் கொடுக்கும்படி கோருகிறோம்.

நமது மாசிகைக்கு ஏற்படுத்தப் பெற்றுள்ள சந்தாத்தொகை மிகவும் சொற்பமாயிருப்பதால் அதனை மணியார்டர் அனுப்புவது வெளிதேச நண்பர்களுக்கு சிரமமாகயிருக்கும்; ஆதலின், நமது சந்தா நண்பர்களாய,

சிங்கப்பூர் வாசிகள் ஆங்கு "77, மார்க்கட் ஸ்ட்ரீட் மெஸ்ஸர்ஸ் A. M. அப்துல்லா சாஹிபு, 67, அரப் ஸ்டிரீட், M. M. ஷரீப் இவர்களிடமும்,

பினங் வாசிகள் 119, சோலியா ஸ்டிரீட்,
N. K. முஹம்மது கவ்து சாஹிப், அவர்களிடமும்,

பெட்ரேட் மலாய் எஸ்டேட் வாசிகள் "கிள்ளானிலுள்ள ஜனப் K. A. பகீர் முஹம்மத் ஸாஹிப்" அவர்களிடமும்,

ரங்கூன் வாசிகள் "385, மங்கமாரி ஸ்டிரீட் தர்கா மஸ்ஜித் பேஷ் இமாம் மௌலவீ சுல்த்தான் அஹ்மத் சாஹிப்" அவர்களிடமும்,

கோளும்பு வாசிகள், 220-ஸகிண்ட் கராஸ் ஸ்ட்ரீட்டிலுள்ள மெஸர்ஸ் A. M. K. ஆலிம் ஸாஹிப் அவர்களிடமும் அவரவர்கள் சந்தாத் தொகையை செலுத்துமாறு கோருகின்றோம்.

அவ்வாறே புதிதாகச் சேரும் அன்பர்களும் செய்வார்களென எதிர்பார்க்கின்றோம்.

"மானேஜர்,"

ஹிபாஜத்துல் இஸ்லாம்,

48, அங்கப்பன் தெரு, G.T., மதருஸ்.

حفاظة الإسلام مدراس

ஹிபாஜத்துல் இஸ்லாம்

நிச்சயமாக நாம் அ(ந்த இஸ்லாம் மதத்)தைக் காப்பாற்றுவோம் [குர்ஆன்]

ஆசிரியர்:—மௌலவீ A. R. அப்துர்றஹீம் ஸாஹிப் (பாக்கவி)

மலர் 3	ஹிஜ்ரி 1351 ரபீஉல் ஆகிர் ௴ 1932 ௵ ஆகஸ்டு ௴	இதழ் 8

SEP 1932

ஸூறத்துல்பலத்

(சென்ற ஜூன் ௴ தொடர்)

இதன் நான்காவது வாக்கியத்தில் நிச்சயமாக மானிடனை நாம் கஷ்டத்தில் படைத்திருக்கிறோமெனக்கூறியிருக்கின்றான். அதாவது:— மானிடனது ஆரம்பமானது மண்ணும் அருவருக்கத்தக்க (நுத்பா) இந்திரயமுமாகும். இவ்விரண்டினின்றும் மானிடன் படைக்கப்பட்ட பின் அவனடையும் கஷ்டசங்கடங்களைகவனிப்போமாயின் அவைகளனந்தமாகும். ஆனால் அவைகளின் சுருக்கத்தை ஈங்கு குறிப்பிடுவாம். மானிடன் உஷ்ணம் குளிர்ச்சி சூடு சீதோஷ்ணம் ஆகிய இந்நான்கின் கலப்பைக்கொண்டே படைக்கப்பெற்றிருக்கின்றான். இவைகளில் ஒவ்வொன்றும் மற்றவைகளை மிகைத்து மானிடனது சுகத்தைக் கெடுத்துவிடவே முயற்சிக்கின்றன. இந்நிலைமையில் அவன் அநேக நாள் கருப்பப்பையில் சிறைவைக்கப்பட்டிருக்கின்றான். பின்னர் சிலகாலம் யாதொன்றும் செய்வதற்கு சக்தியற்றவனாய் தொட்டியில் செத்த பிணத்தைப்போன்று படுத்துக்கொண்டிருக்கின்றான். அதுபோது அவன் தன் மனதிலுள்ளதை வெளியிட்டுக் கூறவும் தன் கைகால்களைக் கொண்டு தனக்குத் தேவையுள்ளவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளவும் இயலாதவனாகயிருக்கின்றான். அதற்குப்பின் பல் முளைக்கும் வேதனையையும் பால்குடியை விடுவதிலுள்ள கஷ்டத்தையும் அனுபவிப்பதில் ஈடுபடவேண்டியிருக்கின்றது. பிறகு ஆரம்பப் பாடசாலைக்குச் சென்று உபாத்தியாயர் மூலம் பலவாறான கஷ்ட சங்கடங்களைச் சுமந்து கொள்ளவேண்டியதிருக்கிறது. இத்தியாதி கஷ்டங்களையும் சகித்துக்கொண்டு அறிவு - புத்தியுடையவனாக ஆய்விடுவானாகில் அதற்குப் பின்னும் பலவாறான கஷ்டசங்கடங்களில் சிக்குண்டு போகிறான். அதுபொழுது அவனிடமுள்ள மிருக சக்தியானது அவனை ஐவாய்மிருகங்களைப்பார்க்கினும் தாழ்மையாக ஆக்கிவைத்து அவனது மனோ இச்சைகளில் விழுத்தாட்டிவிடுகின்றது. சொற்பக் கூலிக்காகத் தலையில் சுமை தூக்கிச் செல்கின்றான்; அற்பகூலிக்காகப் பகல் முழுதும் கஷ்டப் படுகின்றான்; சிறிய சம்பளத்திற்காகப் பகல் முழுதும் சிறைப்பட்டவனே போன்று ஒரு இடத்தில் உட்கார்ந்திருக்கின்றான்; சொற்ப ஆதரவைநாடி தண்ணீரிலும் சேற்றிலும் மாட்டிற்குப்பின் செல்லுகின்றான். தவிர

இவனுக்கேற்பட்டுள்ள துற்குணங்களின் காரணமாய் மிருக இனத்தில் சேர்ந்து மானிடர்களுக்குத் தொந்திரை கொடுக்க முற்படுகின்றான். இவைகளன்றி இவனது மனோ இச்சையும் மார்க்கக் கட்டளையும் இவன்முன் நிற்கிறது. மார்க்கமோ மனம் விரும்புவதற்கு மாறான பாதையைக் காண்பிக்கின்றது; மனமோ நப்ஸிற்கு வழிப் படும்படி செய்து, ஆண்டவனுக்கு வணக்கம் புரிவதை விட்டுத் தடை செய்கின்றது. மானிடனோ வணத்கம் புரிவதற்கு ஏவப்பட்டிருக்கிறதுடன் வணக்கம் புரிவதன்றி விடுதலை கிடைக்க மாட்டாதெனவும் அறிவிக்கப் பட்டிருகின்றான். இவ்வாறான கஷ்ட சங்கடங்கள் ஒவ்வொரு வருடனும் சம்மந்தம் வைத்திருக்கின்றன. ஆனால் இதைவிட இதரர்களால் மானிடனுக்கேற்படும் கஷ்டங்களோ அனந்தமாகும். உதாஹரணமாக மானிடன் சதா காலமும் ஒரு அரசனுக்கு அடங்கி நடக்கும் கஷ்டத்தை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அரசனோ குடிகளை நியாயமானவும் ஒழுங்கானவுமான முறையில் நடத்துவதற்கு நிற்பந்தப்படுத்தப்பட்டிருக்கின்றான். பிள்ளைகளோ தாய்தந்தையர்களுக்குப் பணிவிடை செய்ய வேண்டிய கவலையிலும், தாய்தந்தையர்கள் மக்களின் மீது அன்பு கொள்ளும் விஷயமாகவும் இதுபோல் புருடன் பெண்சாதிக்கும், பாரியாள் புருடனுக்கும், எஜமான் வேலைக்காரனுக்கும், வேலைக்காரன் எஜமானுக்கும் அயல்பாகக்காரன் மற்றவனுக்கும் ஆற்றவேண்டிய தொண்டுகள் விஷயமாயுள்ள கஷ்ட சங்கடத்தைப் பெற்றுக் கொள்ளும்படி நேரிடுகிறது. இதுவன்றி உயிருக்கு ஆபத்து வருவது, தம்மிடமுள்ள ஐஸ்வரியங்கள் கைவிட்டுப் போய் விடுவது, பிள்ளைகளின் மரணம், கபர்வேதனை, அதன் இருள், அந்த இடத்தில் தனியாக யிருக்க வேண்டு மென்னும் பயம், முன்கர் நகீரின் கேள்விகள், (கியாமத்) மறுமை நாளினுடையவும் ஸூர் ஊதுவதினுடையவும் முந்தியவர் பிந்தியவர்சளுக்கு முன் எழுந்து அவமான மடைந்து தலை குனிந்து நிற்க வேண்டியதினுடையவும், கணக்குக் கேள்வி ஏற்பட்டு நன்மை தீமைகளை நிறுக்கும் நேரத்தினுடையவும், சங்கை பொருந்திய ஆண்டவனது சன்னிதானத்தில் நிற்கவேண்டியது னுடையவும் பயம் அவனுக் கேற்பட்டு விடுகிறது. (ஆண்டவன் காப்பாற்றிக் கொள்ள வேண்டும்) அதிலும் நரகத்திற்குப் போகும்படி நேர்ந்துவிட்டாலோ தழுமையும்அவமானமுமடைவதுடன் அவனுக்கு ஏற்பட்ட கஷ்ட சங்கடங்கள் அளவுகடந்து விடுகின்றன. ஆரம்ப முதல் இவ்வாறான கஷ்டசங்கடங்களை அனுபவித்துக் கொண்டிருக்கும் மானிடன் அகப் பெருமை கொண்டு தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக அதிகமான ஐஸ்வரியங்களைச் செலவு செய்திருப்பதாகக் கூறுவது முழுமுட்டாள்தனமே யாகுமென்று நம்மவர்களுக் கறிவிக்கின்றான்.

இவ்வாறு மானிடன், பலவாறான கஷ்ட சங்கடங்களைச் சகிப்பதற்காகப் படைக்கப் பட்டிருக்கிறான் என்பதை சதா பார்த்துக் கொண்டிருந்தும் தம்மீது யாருக்கும் அதிகாரஞ் செய்வதற்கு சக்தி கிடையாது; தாம் செய்யும் நன்மை தீமைகளுக்கு யாராலும் கூலி கொடுக்க முடியாது; தாம் நாடியதைச் செய்யமுடியும் எனவும், அப்படி ஒருக்கால் ஏதாகிலும் நிகழ்ந்துவிடுமாயின் அதை விட்டுத் தம்மைக்காப்பாற்றிக் கொள்வதற்காக அநேக ஐஸ்வரியங்களைச் செலவிட்டிருப்பதாகவும்,யுத்தித்திற்கு வேண்டிய அநேகக் குதிரைகளையும் ஆயுதபாணிகளையும் சேகரித்து வைத்திருப்பதாயும், சம்பளம் கொடுத்து அநேகரைத் தயார் செய்து வைத்திருப்பதாயும், சமயம் நேருங்கால் உதவி புரிவதற்காக அன்னோரைச் சேகரித்து வைத்திருப்பதாயுங் கூறுகின்றான். முடிவாக அவன் செலவு செய்திருப்பவைகளெல்லாம் தமக்குப் பிரயோசன மழிப்பவைகளென்றும், தாம் எக்காலமும் இப்பூ உலகிலிருப்பதற்கு உதவி அழிப்பவைகளென்றும் நினைக்கின்றான். எனவே மகா சக்தியும் வல்லமையும் பொருந்திய ஆண்டவனது சக்தி எவ்வளவிருக்கிறதென்பதை நினைத்து ஆதியில் என்ன வாகயிருந்தான் பிறகு எப்படியாய் விட்டான் என்பதை அவன் யோசிக்க வேண்டாமா? அவன் ஆரம்பத்தில் ஒரு துளி இந்திரியமாகயிருந்து பிறகு, பலவாறான ஸ்திதிக்கு வந்து தன்கையில் எவ்விதமான ஐஸ்வரியங்களுமில்லாதிருக்கும் நிலைமையில் அவனை புஜபல பராக்கிரம சாலியாகவும், ஐஸ்வரியனாகவுமாக்கி வைத்த நாயன் அதை மாற்றி விடுவான்

என்பது அவனுக்குப் புலனாகாது போனதேனோ?

இதன் 17-வது வாக்கியத்தில் "ஸப்ர்" பொருமையைப் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. "ஸப்ர்"என்பது நப்ஸை மனோ இச்சைகளிலீடுபடாது தடுத்து நேரான சன்மார்க்கப் பாதையில் செல்லும்படி செய்வதாகும். இவ்வாறான ஸப்ரைக் கைகொள்ளும்படியும், அதனைச் சிலாகித்தும் குர்ஆனின் அநேக இடங்களில் கூறப்பட்டிருக்கின்றது. சுருங்கக் கூறின், மானிடர்களிடையே மூன்று வித சக்திகள் காணப்படுகின்றன. அவைகள் மிகைத்து விடுமாயின் அது பொழுது மானிடனைப் பல வழிகளிலும் திருப்பிச் செல்ல முற்பட்டு விடுகின்றது. ஆதலின் அதில் சிக்கிக் கொள்ளாது அதைவிட்டுத் தவிழ்ந்து நடப்பதற்குத்தான் "ஸப்ர்" எனச் சொல்லப்படும்.

(1) "குவ்வத்த ஷஹ்வானிய்யா" வென்னும் இச்சை, அபிலாஷைகளின் சக்தியாகும். இஃது உண்ணல் பருகல் புணர்ச்சி செய்தல் முதலியவைகளுடன் சம்மந்தப்பட்டதாகும். இம் மூர்க்க குணம் படைத்த குதிரையின் கடிவாளத்தைப் பிடித்து சீராக நடத்திச் செல்வது ஒருவித சப்ராகும். இப்படிச் செல்வதற்குப் பத்தினித்தனமென்றும், இதற்கு மாறான நடப்பிற்கு பாவமென்றுங் கூறுகின்றனர். ஆதலின் எவ்வஸ்துவை உண்பது தின்பது பருகுவது கூடாதென சன்மார்க்கம் கட்டளையிடுகின்றதோ அவைகளை உண்ணாமலும் பருகாமலும் விட்டொழித்துவிடுவது அத்தியா அவசியமாகும். உதாஹரணமாக கள், சாராயம், வட்டி, இன்னும் தகாதவழியில் சம்பாத்தியஞ்செய்தமுதல், எதீம்களின் பணம் முதலியவைகளைச் சாப்பிடாதிருப்பதும், பரஸ்திரீகளிடம் சம்மந்தம் வைய்யாதிருப்பதும் இவை என்ன? பரஸ்திரீகளின் முகத்தைப் பாராமலும் அவர்களுடன் கலந்துறவாடாமலு மிருப்பதுமாகியவைகளைக் குறிப்பிடலாம்.

(2) "குவ்வத்த களபிய்யா" வென்னும் அகங்கார சக்தியாகும். இதனால் அனியாயம் அதிக்கிரமம் மோசம் இவைகளேற்படுகின்றன. இதன் கடிவாளத்தைப் பிடித்துச் சீராகச் செலுத்திக் கொண்டு போவதும் ஒரு வகையான சப்ராகும். கோபத்தை அடக்கிக் கொள்வதும், பழிக்குப் பழிவாங்காது விட்டு விடுவதும் ஆண் பிள்ளைத் தனமேயாகும். எனவே யாராகிலுமொருவன் தன்னை ஏசுவது கொண்டும், தன்னைக் கெடுதி சொல்வது கொண்டும் மனதிலேற்படும் ஆத்திரத்தைச் சகித்துச் சமாளித்துக் கொள்வதும் ஸப்ராகும். ஆதலின்உயர்குணம் படைத்தோர் பழிக்குப் பழிவாங்குவதை விடுத்து இன்புற்று விளங்கா நிற்பது காணலாம்.

(3) "குவ்வத்த தமய்யா" வென்னும் பேராசையின் சக்தியாகும். இதுவும் மானிடனை வெகு தூரம் கொண்டு செல்கின்றது. இம் மூர்க்கக் குதிரையின் கடிவாளத்தைப் பிடித்துச் சமாளிப்பதும் ஸப்ராகும். தவிர நல்ல விஷயங்களிற் செலவு செய்யாதிருப்பதும் அச் சக்தியின் பிரயோசனத்திலுள்ளவையே. இச் சக்தியானது சதி செய்வதற்கும், பிறரின் பாத்தியதைகளை அபகரித்துக் கொள்ளுவதற்கும் தூண்டுகின்றது அதனைக் கைகொள்ளாது அதை விட்டு விலகியிருப்பதும் ஒருவகை சப்ராகும்.

இதுவன்றி பலவாறான கஷ்ட சங்கடங்களைச் சகித்துக் கொண்டு எதற்கும் பயப்படாது சன்மார்க்கத்தின் மீது ஸ்திரமாகயிருப்பது நான்காவதான சப்ராகும். உதாஹரணமாக அல்லாஹ்வுக்காக தூரதேசயாத்திரை செல்வது, பிரயாணம், வெயில், பசி, தாகம் முதலியவைகளால் ஏற்படும் கஷ்ட நஷ்டங்களைப் பொருட் படுத்தாதிருப்பது, மார்க்க விரோதிகளுக்குப் பயப்படாது அவர்களுடன் எதிர்த்துத் தர்க்க மாடுவது போலொற்றவைகளைக் குறிப்பிடலாம். ஐந்தாவதாக துர்நடத்தையுடைய நப்ஸானது எதை நாடுகின்றதோ அதை விட்டு விலகி வணக்கம் புரிவதிலீடுபடும்படி பழக்குவதும் ஸப்ராகும். உஹாஹரணமாக நோம்பு நோற்குங்கால பசிதாகம் முதலியவைகளை சமாளித்துக் கொள்வதையும், தூக்கம் மிகைத்திருக்கும் போது தொழுகைக்காகச் செல்வதையும், ஸ்நானம் முதலியவைகளினின்று மனச் சடவு ஏற்படும்போது அதற்கு மாற்றமாய் ஸ்நானம், ஒளுச் செய்வதையும் குறிப்பிடலாம். ஆறுவதாக யாவற்றும் ஆண்டவனது கட்டளைப்படி நடக்கிறதெனக் கொண்டு அவைகளைப் பொருந்திக் கொள்வதும் சப்ராகும்.

இவ்வாறே கிருபை செய்தலென்னும் சிறந்த குணமும் பல நூற்றுக் கணக்கான சற்குணங்களின் முக்கிய அங்கமாய் விளங்குகின்றது. எதீம் (அகதி) களின் மீது பக்ஷம் வைத்தல், சிறார்கள்மீது கிருபை செய்தல், சக்தி அற்றோர் வாயில்லாதோருக்கு உதவி புரிதல், தேசத்தினுடனும் சமுகத்தினுடனும் நலன் புரிதல், பசித்தோர்க்கு அன்னமளித்தல், வியாதியஸ்தருக்கு சிகிச்சை புரிதல், நிர்வாணிகளுக்குப் பிடவை கொடுத்தல் வழிதவறி நடப்பவர்களுக்கு நேர் வழி காண்பித்தல், கஷ்ட திசையிலிருப்போருக்கு உபகாரம் புரிதல் முதலியவைகளெல்லாம் கிருபை செய்வதிலுள்ளதாகும்.

"மானிடர்கள் மீது கிருபை புரிபவர்களுக்கு ஆண்டவன் கிருபை செய்கின்றான்; ஆதலின் நீங்கள் பூமியிலுள்ளவைகள் மீது கிருபை புரிவீர்களாயின் வானத்திலுள்ளோர் உங்கள் மீது கிருபை செய்வார்கள்" என எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக அபூ தாவூத், திருமதீ போலொற்ற ஹதீது கிரந்தங்களில் கூறப்பட்டிருப்பது காணலாம்.

ஆதலின் எவர்கள் இச்சற்குணங்களைக் கொண்டு சிறந்து விளங்குகின்றனரோ அவர்கள் தான் பரகத் (நற்பாக்கியம்) பெற்றவர்களாகும். இவர்கள் சப்ர், கிருபை இவைகளிலீடுபட்டிருந்ததின் பயனாய் ஏற்பட்ட பிரயோசனமானது இவர்களின் வாணாட்களிலும் அதற்குப் பின்னும் இவர்கட்கும் மற்றனையோர்க்கும் கிடைத்துக் கொண்டேயிருக்கும். எவர்கள் ஆண்டவனுடைய அத்தாக்ஷிகளை மறுத்து அதில் பலவாறான கெடுதிகளிருக்கிறதெனக் கூறினரோ அன்னோரை நெருப்பினாலுண்டான முகமூடி அணியச் செய்து விடுவோமென அறிய பெரிய நாயனை ஹக் சுப் ஹானஹூவதஆலா கூறுகின்றான் (வல்ஸாஹ் அஃலம்.)

நாயக வாக்கியம்.

ஸலாம் சொல்வது ஒவ்வொரு வகுப்பினரின் வழக்கத்திலுமிருந்து வருகிறது. ஆனால் இஸ்லாம் மார்க்கமானது அதனை சகோதர வாஞ்சை, சமத்துவம் முதலியவைகள் சிறந்து விளங்குவதற்குள்ள முக்கிய காரணமாக ஆக்கி வைத்திருக்கின்றது. இக்கடமையை இராஜர் முதல் தோட்டி வரையிலுள்ள யாவரும் ஒன்றுபோல் நிறைவேற்றக் கடமைப்பட்டிருக்கின்றார்கள்.

ஒரு. மனிதர் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடம் வந்து, முஸ்லிம்களின் எச்செய்கை மிகமிகச் சிறந்ததென வினவியமைக்கு, "அறிமுகமுள்ளவர் அறிமுகமில்லாதோர் யாவருக்கும் 'ஸலாம்' சொல்வது மிகச் சிறந்ததாயிருக்குமென, திருவாய்மலர்ந்தருளியதாக புகாரி முஸ்லிமில் கூறப்பட்டிருக்கின்றது.

ஸலாம் சோல்லும் முறை

சிறியவர் பெரியோருக்கும், வாகனத்தின் மீது வீற்றிருப்பவர் நடந்து செல்பவருக்கும், நடந்து செல்பவர் உட்கார்ந்திருப்பவருக்கும், சிறிய கூட்டத்தோர் மிகுதமாக இருப்பவர்களுக்கும் "ஸலாம்" சொல்லவேண்டுமென உலக ரெட்சகர் (ஸல்) அவர்கள் அறிவித்ததாக அபூஹுரைரா (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது. இந்த ஹதீதில் ஏழைகள் சீமான்களுக்கும், தாழ்ந்தோர் உயர்ந்தோர்க்கும், தகுதியற்றவர் தகுதியுடையோருக்கும் ஸலாம் சொல்லவேண்டுமென குறிப்பிடப்படவில்லை என்பது நன்கு புலனாகின்றது. தவிர இந்த ஹதீதினால் இஸ்லாமிய சமத்துவமும் நன்கு புலனாகின்றது. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாய் முஸ்லிம்கள் அதிலும் மகான்களெனத் தங்களை மதித்துக் கொண்டிருப்போர்கள், நாளுக்குநாள் அகப்பெருமையில் சிக்கிக்கிடப்பதின் காரணமாய் முதலாவதாக ஸலாம் சொல்வதைக் கேவலமாக மதித்திருக்கின்றனர். இதுவும் காலத்தின் கோலமன்றோ? "உங்களிலெவரும் ஒரு இடத்திற்குச் செல்வாராயின் உடனே செல்பவர் ஸலாம் சொல்லவேண்டும். பிறகு அவ்விடத்தில் உட்கார நாடுவாராயின் உட்கார்ந்து கொள்ளட்டும்; இல்லாவிடின்

செல்லுவதற்குப் புறப்படும் சமயம் ஸலாம் சொல்லிவிட்டுச் சென்று விடவும்'' என நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியதாக அபூஹுறைரா (ரலி) அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஸலாமில் முந்துதல்

ஸலாம் சொல்வதில் ஒழுங்கிருக்க வேண்டுமென்பதற்காக ஒரு சட்டதிட்டம் ஏற்பட்டிருந்த போதிலும், எம்பிரான் (ஸல்) அவர்கள் எவ்விதத் தாமிதமுஞ்செய்யாது சிறியோர், பெரியோர், உயர்ந்தோர், தாழ்ந்தோர், சீமான், ஏழை என்னும் வித்தியாசம் பாராட்டாது யாவருக்கும் முதன் முதல் ஸலாம் சொல்வதுடன், ஆரம்பமாக ஸலாம் சொல்பவன்தான் மானிடர்களில் மகா சிரேஷ்டமானவனுகுமெனவுங் கூறியிருக்கின்றார்கள். ஒரு நாளன்று ஸமத்துவத்தூதர் (ஸல்) அவர்கள் சிறு பிள்ளைகள் கூடியிருக்கும் வழியாகச் செல்ல நேர்ந்தகால் அவர்களுக்குச் சலாம் சொல்லிச் சென்றதாக புகாரீ முஸ்லிமில் கூறப்பட்டிருக்கின்றது.

ஸலாமின் பிரயோசனம்

ஒருவர் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்களினது சன்னிதானஞ்சென்று "அஸ்ஸலாமு அலைக்கும்" எனக் கூறினர். தாங்கள் பதில் சொன்னவுடன் உட்கார்ந்து விட்டார். இவருக்கு 10 நன்மைகள் கொடுக்கப்பட்டதெனக் கூறினர்கள். பிறகு மற்றொருவர் விஜயஞ்செய்து "அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹ்" என்று கூறினர். இதற்கும் பதில் சொல்லி இவருக்கு 20 நன்மைகள் கொடுக்கப்பட்டிருக்கிறதெனத் தெரிவித்தார்கள். மூன்றாவதாக ஒருவர் சமுகங்கொடுத்து "அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மத்துல்லாஹி வபரகாத்தஹு" எனக் கூறினர். இது கேட்டு பதிலளித்துவிட்டு இன்னேருக்கு 30 நன்மைகள் அழிக்கப்பட்டிருப்பதாகச் செப்பினர்கள் என திருமதீ அபூதாவூத் இவைகளில் கூறப்பட்டிருக்கின்றது.

அன்புற்ற நேயர்காள் !

இஸ்லாமிய மதமானது சலாம் சொல்வதில் எவ்வழியை நமக்குக் கற்பித்துக் கொடுக்கின்றதோ நிச்சயமாக அது உலகத்தார் அனுஷ்டித்து வரும் சகல பழக்கங்களைப் பார்க்கினும் மேலான — உயர்வானதாகக் காணப்படுகின்றது. முஸ்லிம் என்னும் ஹோதாவில் உயர்பதவியிலுள்ள ஒருவன் எத்துணை மரியாதை அடைய உரிமையாளனுகையிருக்கின்றேனே அத் தன்மை போல் தாழ்ந்த பதவியிலுள்ள ஒரு முஸ்லிமும் அம் மரியாதையை அடைய உரிமை யுடையவனுகையிருக்கின்றான். ஸலாம் சொல்வது கொண்டு இஸ்லாமிய சகோதரத்துவம் நல்ல முறையில் அனுஷ்டிக்கப்படுவதுகொண்டு மானிடர்கள் ஒற்றுமையாக வாழ்வதற்குள்ள ஹேதுக்களேற்படுகின்றன. நம் முஸ்லிம்கள் ஒருவருக்கொருவர் சந்திக்கும் போது எந்த "ஸலாம்" என்னும் வார்த்தையைக் கையாள ஏவப்பட்டிருக்கிறேமோ அதே "ஸலாம்" என்னும் வார்த்தை ஆண்டவனுடைய திருநாமங்களிலொன்றாகவு மிருக்கிறது. இதுவன்றி முஸ்லிம்களுக்கு மறுமையில் தருவதாக வாக்களிக்கப்பட்ட வீட்டிற்கும் "ஸலாம்" என்னும் பெயரே கொடுக்கப் பட்டிருக்கிறது.

இவ்வாறு ஸலாம் சொல்லும் வழக்கமானது ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் கால முதல் இன்று வரை நம் முஸ்லிம்களின் அனுஷ்டானத்திலிருந்து கொண்டே வருகிறது. ஹஸ்ரத் ஆதம் (அலை.) அவர்கள் படைக்கப்பட்டு வெளியில் வந்ததை மலக்குகள் பார்த்து தங்கள் சந்தோஷத்தை வெளியாக்குவான் வேண்டி "ஸலாம்" என்னும் காணிக்கையைத் தான் முற்படுத்தினர்கள். இதற்கு மறுமொழியாக "வஅலைக்குமுஸ்ஸலாம் என்று கூறும்படி ஆண்டவன் கட்டளையிட்டான். இவ் வழக்கம் அவர்களது சந்ததிகளிலுமேற்பட்டு விட்டது.

இவ்வாறான மகத்துவமும் மேம்மையும் வாய்ந்த இஸ்லாத்தின் உன்னத முக்கியக்கடமையை நாம் அசட்டை செய்து உட்கார்ந்திருப்பதுடன், சலாம் சொல்பவர்களைக் கேவலமாகவும் மதிக்க முற்படுகின்றோம். ஈதெல்லாம் நம் அறியாத் தன்மையையும், சன்மார்க்கத்தை நாம் அலக்ஷியஞ் செய்வதையும் தெரிவிக்க வில்லையா? இனியாகிலும் நம் நேயர்கள் ஸலாம் சொல்வதின் முக்கிய கைங்கரியத்தைக் கைகொண்டு சிறுப்புற்று விளங்குவார்களாக.

ثقافة الإسلام مدراس

குத்ப ஜீலானீ (ரஹ்)

ஏகவல்லமை பொருந்திய அல்லாஹ்வின் உண்மை அடியாரும், தாஜுல் அவ்லியாவுமாகிய சையதுஸ்ஸாதாத் முஹையித்தீன் அப்துல்காதிர் ஜீலானீ (ரஹ்) அவர்கள் இம்மாதந்தான் இப்பூவுலகின்கண் ஜனனமானார்கள். அப்பெரியாரவர்கள் சிறுபிராய முதல் சிரிய சுபாவம் நல்லொழுக்கம் முதலியவைகளைப் பற்றிப் பூண்டு சிறப்புற்றுத் திகழ்ந்தமை நம்மனோருக்குச் சிறந்த படிப்பினையாகவிருந்ததென்பது வெள்ளிடை. அம்மகானவர்கள் இவ்வுலகின்கண் தோன்றி மார்க்க சமூகத்தொண்டாற்றியிருப்பதற்கு எல்லை குறிப்பிடுவதும் தகுமோ? பொதுவாக மகான் அவர்களில் அமைந்திருந்த இறைவது பக்தி, அவனுக்காக வாழ்க்கையை நடத்தல், தியாகம் புரிதல் முதலிய தூய்மைவாய்ந்த அம்ஸங்களானது, அவர்களை உன்னத ஸ்திக்குக் கொண்டுவந்து விட்டதெனக் கூறல் மிகையாகா. அவர்களது வணக்கணமும், தியாகமும், ஜீவியமும், மரணமும் சர்வலோக கர்த்தாவான ஆண்டவனுக்காக ஆயிருந்ததென்பது அவர்களினது நிகட்சிகளிலிருந்து நன்கு புலனாகும். மகான் அவர்கள் பக்தாதில் கல்வி பயின்ற பின்னர் இராக் தேசத்தைச் சார்ந்த வனங்களில் தனிமையாக வதிந்து, ஞானியாகவும் தபஸியாகவும் கந்த மூலங்களைப் புசித்து ஊற்று நீரை அருந்தி ஆண்டவனை வணங்கி வருங்காலை, இரவு முழுதும் வணங்கும் நபில் தொழுகையில் குர்ஆன் ஷரீப் முழுதையும் பாராயணஞ்செய்து முடிப்பார்கள். அநேக ஆண்டுகள் வரை இஷாத் தொழுகைக்காகச் செய்த ஒளுவைக் கொண்டே பஜர் தொழுகையை நிறைவேற்றியிருக்கின்றார்கள். 40 வருடங்கள் வரை இரவில், தங்களது இஷாவின் ஒளுவைக்கொண்டே பஜர் தொழுகையை நிறைவேற்றியிருக்கின்றார்களென்றால் மகான் அவர்களின் தெய்வவழிப்பாட்டை என்னென்று கூறுவது? இஃதன்றி மகானவர்களின் திருஉபதேசத்தைக் கேட்டுக் கரையா மனத்தினரும், உருகா உளத்தினரும் இல்லை என தைரியமாய்க் கூறலாம். எனவேஇவர்களது திருஉபதேசத்தைக்கேட்டு நேர்வழிபெற்று உத்தமர்களானோர் பல்லாயிரம்பேர் எனக் கூறல் மிகையாகாது. இவர்கள் உபதேசம் புரியுங்கால் அதைக் கேட்கும் மகாஜனங்கள் மெய் மறந்து ஆனந்ப்ரவசமாய் மிக பக்தி சிரத்தையுடன் திகழ்வர். முஸ்லிம்களும் முஸ்லிமல்லாதாரும் பிரசங்கத்தைக் கேட்டு இன்புறுவார்கள். இவ்வரும் பெரும் பிரசங்கங்களைக் கேட்டு எண்ணற்ற காபிர்கள், முஷ்ரிகீன்கள், நாஸ்திகர்கள், வழிகேடர்கள், மதப்பிரஷ்டர்கள் முதலானோர் தங்கள் தீய கொள்கைகளையும், துன்மார்க்கங்களையும் விட்டொழித்து தௌபாச் செய்து ஆயிரக்கணக்கானோர் இஸ்லாம் மதத்தைத் தழுவிய விபரமும், ஒரே பிரசங்கஸ்தலத்தில் மட்டும் 500 பெயர் தூய்மை வாய்ந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பின்பற்றினரென்பதும் அவர்களது ஜீவிய சரிதவரலாற்றை உற்று நோக்குவோர் நன்குணர்வர்.

இவ்வாறு மதோபன்னியாசம் புரிந்து மட்டில்லா ஷிர்க் பித்அத்களை அழித்தொழிப்பதில் மகான் அவர்கள் அளவற்ற கஷ்ட சங்கடங்களடைந்தும் தங்களது ஓயாமுயற்சியின் காரணமாகவும், சீர்திருத்த நோக்க அவா மேலீட்டாலும் அனேக ஜனங்கள் சீர்திருத்தமடைந்து நேர்வழிக்கு வந்து இஸ்லாமியபந்தத்தின் கீழ் சிறப்புற்று விளங்கினர். அதனால் இஸ்லாத்திற்குப் பெரும் புத்துணர்ச்சி எற்பட்டது; பல தேய மன்னரும் குத்பவர்களின் கட்டளைக்கும் உபதேசத்திற்கும் சிரம்பணிந்து ஜெய சீலர்களாகத் திகழ்ந்தனர். சுருங்கக்கூறுமிடத்து மகான் அவர்கள் இஸ்லாமியப் பிரசாரத்திற்குத் தீண்டா மணிவிளக்காகவும், ஷிர்க் பித்அத்களை ஒழித்து நாசமாக்கும் சம்ஹாரியாகவும் விளங்கி வந்தார்களென்பது திண்ணம். எனவே வலிகள் நாயகம் (ரஹ்) அவர்கள் தாங்கள் கல்வி பயின்ற இளமைப் பருவந் தொடுத்து இறுதி வரை சன்மார்க்கத் துறைக்காகவும், ஜன

சமூக சீர்திருத்தத்திற்காகவும், இஸ்லாத்தின் பாதுகாப்பிற்காகவும், துன்மார்க்கத்தை அகற்றி சன்மார்க்கத்தைப் பரத்துவதற்காகவும், அல்லாஹ், ரசூலின் திருநாமங்களை இத்தரணியின் கண் ஓங்கச் செய்வதற்காகவும் அரும்பெரும் பாடுபட்டு பெரும்பயன் விளையச் செய்தார்களென்பது உண்மையே. ஆதலின் நம்மனோர்க்கு இத்தியாதி அரும்பெரும் பிரயோசன மழித்துச் சென்ற வலிகள் நாயகம் அவர்கள் இத்தரணியை விட்டு நீத்து விண்ணுலகேகிய ரபீஉல்ஆகிர் மாதம் 11-ந்தேயன்று அவர்களது ஆன்ம சாந்திக்காக குர்ஆன் ஷரீப் முதலியவைகளை ஓதி ஆண்டவனிடம் பிரார்த்தனை புரிவது கொண்டும், மகான் அவர்களின் ஜீவிய வாழ்க்கை உலகத்தொண்டு சன்மார்க்க சேவை உதாரத்தன்மை நற்குண நல்லொழுக்கம் பரோபகார உணர்ச்சி முதலியவற்றைப் பொதுஜனங்களுக்கெடுத்துக் காட்டுவது கொண்டும், மகான் அவர்கள் பெயரால் ஏழை எழியோருக்கு விருந்தளித்து தானதர்மம் புரிவது கொண்டும் நாம் நன்றியறித லுள்ளவர்களாக ஆய்விடுவோம். இவ்வாறான கிரிகைகள் தான் நாயகமவர்கள் அடக்கமாயிருக்கும் பக்தாத் ஷரீபிலும் நடைபெற்று வருகின்றன.

நம்மவர்களோ இம்மேன்மை பொருந்திய தினத்தில் இதைத்தவிர்த்து வலிகள் நாயகமவர்கள் அரும்பெரும் பாடுபட்டு விலக்க முயற்சித்த ஷிர்க் பித்அத் களிலீடுபட்டு அவர்களுக்கே பொருத்தமற்றவாறு அவர்கள் பெயரால் கூடு, கொடியேற்றம் நடத்த முற்படுகின்றனர்; அவைகளுக்காக நேர்ச்சியும் செய்து கொண்டு அவைகளை நிறைவேற்றவும் முற்படுகின்றனர்; அவ்வாறு செய்யாவிடின் அபாயம் நேரிடு மெனவுங் கருதுகின்றனர். என்னே இன்னோரின் அறியாமை! என்னே மூடபக்தி!! என்னே மடமை!!! மூட பக்திகளினு லேற்பட்ட கொள்கைகளெல்லாம் விரண்டோடும் இக் காலே, துர்ச்செயல்களெல்லாம் இவ்வாறு தாண்டவமாடுமாயின் இதைவிட முஸ்லிம்களுக்கு வேறு இழிவு வேண்டுமோ? இவ்வாறு இம்மூடமாக்கள் நினைப்பதால் இவர்களது ஏக தெய்வக் கொள்கை சிதைந்து ஷிர்க்கன்றோ வந்து சேர்ந்து விடுகின்றது அந்தோ பரிதாபம்? ஷிர்க்கைவிட கொடியது இவ்வுலகில் வேறு ஏதாகிலுமிருக்கின்றதோ? உஷார்! உஷார்!! உஷார்!!! எனவே இக்கெட்ட காரியங்களை நிகழ்த்துவோர் ஹஸ்ரத் அவர்களின் கோபப் பார்வைக்கு ஆளாகுவார்களேயன்றி ஒருபோதும் அவர்களது அன்பிற்குப் பாத்திர வான்களாகார் என்பது திண்ணம். ஆதலின் நாம் ஒவ்வொருவரும் ஷிர்க் பித்அத்களை ஒழித்து அப் பெருந்தகையார்களின் அடிச் சுவட்டினைப்பின் பற்றி இஸ்லாத்தின் பாதுகாப் பிற்காகவும் இஸ்லாமியப் பிரசாரத்திற்கு முழைக்க முன் வருவோமாக. எனவே, மகான் அவர்கள் பால் விசுவாசம் வைத்திருப் பவர்களாகிய நாம் அந்நாளை கெளரவப்படுத்தி சன்மார்க்கத்திற்கு ஆகுமான முறையில் கொண்டாடுவதோடு மகான் அவர்கள் இஸ்லாத்திற்காகவும், முஸ்லிம் சமுகத்திற்காகவும் எவ்விதத் தொண்டு, சீர்திருத்தம், பரோபகாரம் முதலியவை புரிந்து வந்தார்களோ அத் தகைய அருஞ்சேவைகளை நாமும் அத்தியா அவசியமாய்ப் புரிந்து தற்கால நெருக்கடியான நிலைமையில் இஸ்லாத்தின் கண்ணியத்தையும் கீர்த்தியையும் ஓங்கச் செய்வோமாக. இக்காரியங்கள் இனிது ஈடேற இறைவன் திருவருள் புரிவானாகவும்.

மதிப்புரை.

ஜவாரிஷே ஷாஹீ என்னும் இராஜபேதி ஹல்வா:—இப்பெயர் கொண்ட அரும் சுகபேதிச் சஞ்சிவியின் டின் ஒன்று வரப் பெற்று நாம் உபயோகித்துப் பார்த்ததில் அதைத் தக்கப் பிரயோசன மளிக்கவல்ல திவ்வியசஞ்சியாகவே கண்டோம். இது உபயோகிப்பதில் எவ்வாறான கஷ்ட சங்கடனுமின்றி சாதாரணமாக நாம் காலையில் பருகும் தே நீருடன் உபயோகிக்கலாம். எந்தவித உமட்டலோ, வாந்தியோ ஏற்படுவதற்குள்ள வாடை அதிலில்லாது திவ்விய மதுரம் பொருந்திய ஹல்வாவைப் போன்றே இருக்கின்றது. இதனை ஒரு முறை கையாண்டோர் பிறகு எக்காலமும் கைவிடாரென்பது திண்ணம் டப்பி 1க்கு ரூ. 1.

கிடைக்குமிடம்: மானேஜர் இல்மீ தவாகானா,
ஆம்பூர் பேட்டை, வாணியம்பாடி N. A. Dt.

முஸ்லிம்களும் குர்ஆன் ஷரீபும்.

சகலவணக்கங்களிலும் மிகமிகமேலானதும் இகபர சாதனங்களை அளிக்க வல்லதுமானது, தொழுகையில் நிற்கும்போது மேன்மை வாய்ந்த திரு குர்ஆன் ஷரீபை ஓதுவதாகும். தொழுகையில் குர்ஆன் ஷரீபைப் பாராயணஞ் செய்வதனால் ஒவ்வொரு வார்த்தைக்கும் அளவற்ற நன்மை கிடைக்கிறதெனவும், ஒளுவில்லாமல் குர்ஆன் ஷரீப் ஓதுவதைப் பார்க்கினும் ஒளுவுடன் ஓதுவது அளவற்ற பிரயோசனத்தை அளிக்குமெனவும் ஹஸ்ரத் அலீ (ரலி.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். தவிர இறுதித் தீர்ப்பு நாளில் நபிமார்கள், மலக்குகள் முதலியோரின் சிபாரிசைப்பார்க்கினும் குர்ஆன் ஷரீபின் சிபாரிஷானது ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப்படுமென எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் கூறியிருக்கின்றார்கள். ஒருவன் குர்ஆன் ஷரீபைப் பாராயணஞ் செய்து அதன் கருத்துக்களை அறிந்து கொள்வதில் மூழ்கி விட்டதின் காரணமாய் தனக்கு வேண்டியனவற்றை அல்லாஹ் தஆலாயிடம் கேள்க்கா விட்டாலும் கேட்டுக் கொள்பவர்களுக்கு அளிப்பதைவிட இரட்டிப்பாக இன்னோருக்கு அளிக்கிறான் என்பதாக கீமியா ஸஆதத்தில் கூறப்பட்டிருக்கின்றது. நமது உலக ரெட்சகர் காத்த மந்நபிய்யின் (ஸல்.) அவர்கள், சஹாபாக்களை நோக்கி இரும்பில் துருப்பிடிப்பது போன்று கல்பிலும் அழுக்கேற்படுகின்றது ஆனால் குர்ஆன் ஷரீபைப் பாராயணஞ்செய்வதுகொண்டும், மரணத்தை நினைப்பது கொண்டும் அத்துரு நீங்கி விடுகின்றது எனக் கூறினார்கள்.

துர் அதிர்ஷ்ட வசமாய் நம்முஸ்லிம்கள் இதுகாலை குர்ஆன் ஷரீபின் பக்கல் அறவே திரும்பிப் பார்ப்பதுங் கூடக் கிடையாது நம் மூதாதையர்களும் முன்னோர்களும் காலைத் தொழுகைக்குப் பின் குர்ஆனின் அத்தியாயங்களைப் பாராயஞ் செய்து அதன் கருத்துக்களை அறிந்து கொண்டிருந்ததால் அவர்களது ஹிருதயங்கள் கண்ணாடிபோல் இலங்கிக் கொண்டிருந்தன. அதனால் அவர்கள் சீதேவித்தனம் பெற்றவர்களாக விளங்கினார்கள். இக்காலத்திலோ குர்ஆனைப் பாராயணஞ் செய்வதென்ன? அனேகர் அசல் தொழுகையே விட்டு உட்கார்ந்திருக்கின்றனர். ஒருக்கால் தொழுதாலும் தம்முழு கவனத்தையும் அதில் செலுத்தாது தொழுகையின் முறைகளில் குறைவு செய்து விடுகின்றனர். அதனால் அவர்கள் தொழுகையை ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என நன்கு புலனாகின்றது. எனவே ஒரு நாளன்று ஒரு முஸ்லிம் தொழுகையை நிறைவேற்றினார்; இதைப்பார்த்து எம்பிரான் (ஸல்.) அவர்கள் “ உமது தொழுகை நிறைவேறவில்லை மறுமுறையும் தொழுமெனக் கூறினார்கள். மறுபடியும் தொழுதார் அதைப்பார்த்தும் அவ்வாறே கூறினார்கள்; மூன்றாம் முறையாகத் தொழுகை நிறைவேற்றியதைப் பார்த்தும் “உம் தொழுகை நிறைவேறவில்லை” எனக்கூறினார்கள். இதைக் கேட்டு அன்றோர் வேறு எந்த விதமாக நிறைவேற்றுவதென வினவியமைக்கு “அமர்க்கையாகவும், ஒழுக்கம் கவனம் முதலியவைகளோடும் நிறைவேற்றப்படும் தொழுகை தான் ஆண்டவனிடம் ஒப்புக்கொள்ளப்படுகிறதென” சத்தியத்தூதர் (ஸல்.) அவர்கள் திருவாய்மலர்ந்தருளினார்கள். ஆகவே நாம் தற்காலை காணும் தொழுகாளிகளிலனேகர் தங்களுக்குப் பின் பகைவன் நிற்கின்றான் என நினைத்துக்கொண்டும், ஏதோ அபாயகரமான சம்பவம் அதிசீக்கிரம் நிகழப் போகிறதை பயப்படுபவர்கள் போலும் தொழுகையை நிறைவேற்றுகின்றனர். இவ்வித நிலைமையில் இன்னோருக்கு எங்கிருந்து தொழுகையில் இன்பமுண்டாகப் போகிறது? முடிவில் தொழுகையில் சோம்பலேற்பட்டு கடாசியாக அதைக் கை விடுவதற்குள்ள சந்தர்ப்பமுமேற்பட்டு விடுகிறது. ஆதலின் நஞ்சோதர்கள் தங்கள் மீது கடமையாகவுள்ள தொழுகையை உள்ளச்சம் மன ஓர்மை முதலியவைகளோடு நிறைவேற்றி இகபர இன்ப சாதனங்களைப் பெற்றுய்வார்களாக.

முஸ்லிம்கள் சீர்திருத்தமடை வதற்குள்ள இருவழிகள்.

“ நான் உங்களுக்குப் பிரயோசன மளிக்க வல்ல இரு வஸ்த்துக்களை அறிவிக்கின்றேன்;

அதனைப் பின்பற்றி நடந்து வரும்வரை உங்களை எந்த வஸ்த்துவும் வழி சறுக வைத்து விடமாட்டாது; இருபதியின் காரியாதிகளும் உங்களுக்குக் கைகூடிவரும் அவைகளாவன:- மரணத்தை நினைப்பதும், குர்ஆன் ஷரீபு மாகும்'' என எம்பிரான் (ஸல்.) அவர்கள் திருவாய் மலர்ந்தருளியிருக்கின்றார்கள்.

மரணத்தை நினைப்பது கொண்டு மானிடன் அநேகப் பாவங்களை விட்டுத் தவிழ்ந்து கொள்கின்றான். இதற்கு மாற்றமாய் மரணத்தை மறந்து பற்பல சுவண்டிகளிலும் மறுமையை மறந்திருப்பதிலும் ஈடுபட்டிருப்பதானது மரணத்தின் ஞாபகமேயில்லாதுசெய்து விடுகின்றது. சில காலம் வரை குர்ஆன் ஷரீபைப் பின்பற்றி நடந்து வந்ததின்பயனாய் அநேகமகான்கள்சிறப்புற்று முன்மாதரியாய் விளங்கினார்கள். வலீத் ஹிஷாம், இவர்களது காலத்திலுள்ள இராஜங்கமானது ரோமர்களுடைய அரசாங்கத்தைவிட சிறப்புற்று விளங்கிற்று. சுருங்கங் கூறுமிடத்து பூஉலகத்தின் நான்கிலொரு பாகம் முஸ்லிம்களின் அதிகாரத்தின் கீழ் சிறப்புற்று விளங்கிக் கொண்டிருந்ததெனக் கூறுவது மிகையாகாது. இவ்வாறு முஸ்லிம்கள் சிறப்புற்று விளங்கியதற்குக் காரணம் அவர்கள் குர்ஆனைப் பின்பற்றி நடந்ததேயாகும். குர்ஆன் ஷரீபே அவர்களுக்கு நேர்வழி காண்பிப் பதாகவும், அதுவே அவர்கள் தீர்ப்பளிக்கும் சட்டமாகவும், அதுவே அவர்கள் முன்னேற்ற மடையும்வழியைக் காண்பித்துக் கொடுப்பதாயும், அதுவே அவர்களுக்கு ஜெயத்தை அளிக்கத் தக்கனவாயுமிருந்தது. ஆனால் எதுபொழுது அவர்கள் குர்ஆன் ஷரீன் கட்டளையை முதுகிற்குப் பின் வைத்து விட்டுத் தங்கள் காரியாதிகளை நடத்திச் செல்ல ஆரம்பித்தார்களோ அதுமுதல் பற்பல வாறான சங்கடங்களும் கஷ்ட நஷ்டங்களும் ஏற்பட்டு விட்டதைக் கண் கூடாகக் காண்கின்றோம். இதற்குப் பின்னுங்கூட இன்னோரின் கண்கள் விழித்துக்கொள்ளாது ஐரோப்பிய நாகரீகத்தையே தேடி அலைவதின்பயனாய் இகபரசாதனங்களை இழந்து உட்கார்ந்தி ருக்கும்படி செய்து வைத்திருக்கின்றது.

குர்ஆன் ஷரீபானது தன்னைப் பின் பற்றி நடப்பவர்களை நோக்கி "இது ஒரு கடினமான வேதமல்ல; வெகு சுழிவானதாகயிருக்கின்றது. இதனை அறிந்து கொள்வதில் எவ்வித கஷ்ட சங்கடங்களுங் கிடையா; ஆனால் மானிடர்கள் இதன் பக்கல் திரும்பிப் பார்க்காது, வழி கேட்டில் மூழ்கிக்கிடக்கின்றனர்'' என நன்கு விளக்கிக்காண்பிக்கிறது. இவ்வறிவிப்பானது நம்மனோருக்கு எவ்விதப் பிரயோசனத்தையும் அளித்ததாகத் தெரியவில்லை. இதற்காகத்தான் ஆண்டவன் "இவர்கள் குர்ஆனின் போதனைகளை சிந்தித்துப் பார்ப்பதில்லையா; இவர்களினது ஹிருதயத்தில் பூட்டுப் போடப்பட்டிருக்கின்றதா?'' என வினவுகின்றான். எனவே நமது ஹிருதயங்கள் முத்திரை வைக்கப்படா திருக்குமாயின் நாம் குர்ஆன் ஷரீபின் கட்டளையை அசட்டை செய்யாது நடந்து வருவோமென்பது திண்ணம். ஆதலின் நமது ஹிருதயத்தின் வாசற்படி பூட்டப் பட்டிருப்பதினால் தான் நம் முஸ்லிம்கள் ஆண்டவனது ஏவல் விலக்கல் களைப் பொருட் படுத்தாது பாவமென்னும் படுகுழியில் விழுந்து தவிக்கின்றனர். ஆனால் இற்றைக்கு அவர்கள் குர்ஆன் ஷரீபைப் பின் பற்றி நடப்பார்களாயின் அவர்களது பிற்போக்கைவிட்டு முன்னணிக்கு வந்து சிறந்து விளங்குவார்களென்பது திண்ணம்.

இற்றைக்கு நம்மில் சிலர் குர்ஆன் ஷரீபை ஓதுகின்றனர். ஆனால் அதன் வார்த்தைகளைத் தங்கள் வாயினால் உச்சரிக்கின்றார்களே யன்றி அதன் கருத்துக்களை சற்றேனும் நோட்டமிட்டுப் பார்க்கின்றார்களில்லை. அதனால் தாங்கள் இன்னது தான் பாராயணஞ் செய்கின்றோம் என்பதையும், எதற்காக ஓதுகின்றோமென்பதையும், ஆண்டவன் அதில் என்ன கட்டளை பிறப்பித்திருக்கிறான் என்பதையும் சிந்தனை செய்து பார்க்கின்றார்களில்லை. தவிர, குர்ஆன் ஷரீபுக்கு சங்கை மரியாதை செய்து அதனை கண்ணில் வைத்துக் கொள்ளவும், கிளிப்பிள்ளையைப் போன்று ஓதிவிட்டு உயரமான இடத்தில் வைத்து விடுவதற்காகவு மட்டும் அவை அனுப்பப்படவில்லை என்பது நமக்கு புலனாவதில்லை. மேலும் அதனை பறக்கத்திற்காகவும் ஏதாவது வியாதிக்காகவும் ஓதுவதற்காகத்தான் அனுப்பப்பட்டிருக்கிற தென்பது நமது நோக்கமா? ஆதலின் ஆண்டவன் குர்ஆன் ஷரீபில் என்ன கட்டளை பிறப்பித்திருக்கின்றான்; அது நமக்கென்ன நேர்வழி காண்பிக்கின்றது என்

பதை நன்குணராது, அதனை ஓதுவது கொண்டு, குர்ஆன் ஷரீப் இறக்கி வைக்கப் பட்டதின் முழுப்பிரயோசனத்தை நாம் பெற்றுக்கொண்டவர்களாக மாட்டோமென் பது வெள்ளிடை. நான் இதனைதக்க ஆதார மில்லாது கூறிவிட்டதாக நஞ்சோதரர்கள் கருதிவிடலாகாது "குர்ஆன் ஷரீபை அதன் கருத்துக்களை மனதிலமைத்து அதனைக் கவ னமாக ஓதாதவரை பூர்ணப் பிரயோசனம் கிட்டாதென" ஹஸ்ரத் அலீ (ரலீ) கூறியிருக் கின்றுர்கள். "நீங்கள் குர்ஆனின் கருத்து மனதிலமைந்தாலுஞ் சரி இல்லாவிட்டாலுஞ் சரி, தீபரமாக ஓதி முடித்து விடவேண்டு மென்று நினைக்காதீர்கள். அதன் ஒவ் வொரு வாக்கியத்தின் கருத்தையும் விளங் கிக் கொள்வதற்கு இரவு பகல் பிரயாசை எடுப்பதானது அனேகந் தடவை குர்ஆன் முழுதையும் பாராயணஞ் செய்வதை விட மேலானதாகும்" என ஹஸ்ரத் இமாம் கஜ் ஜாலீ (ரஹ்) அவர்கள் கூறியிருக்கின்றுர்கள்.

ஒருதடவை எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்)அவர்கள் பிஸ்மில்லாஹ்வை 20 தடவை மடக்கி மடக்கி ஓதி அதன் கருத்துக்களைக் கவனித்தார்களெனக் கூறப்பட்டிருக்கிறது. எனவே ஈரானில் முஸ்லிம்களின் கூட்ட மொன்று பிரயாணஞ் செய்து கொண்டு போகுங்கால் ஒரு இடத்தில் வழிப்பறிக் கொள்ளைக் காரர்கள் அக்கூட்டத்தினர்களைச் சூழ்ந்து கொண்டனர். அதுபொழுது அக் கூட்டத்தின் கடைசியாக வந்த ஒருவர் குர் ஆன் ஷரீபை மெள்ள ஓதிக்கொண்டு வந்தார். வழிப் பறிப்போர் திருட ஆரம்பித்தவுடன் சப்தமிட்டு ஓத ஆரம்பித்து "ஆண்டவனது பயத்தால் ஹிருதயங்களில் நடுக்க மேற்படும் நேரம் இன்னும் வரவில்லையா? என்னும் வாக்கியத்தோடு நிப்பாட்டி விட்டார். அத் திருடர்களின் தலைவர் அரபிப் பாஷையில் தக்கப் பாண்டித்திய முடையவரா யிருந்தா ராதலின் அவர் வழிப்போக்கர்களை மறித்து கொள்ளையிடுவது ஒரு இழித் தொழில்லல வா? என சிந்தித்துக் கொண்டிருக்கும் சம யம் ஆண்டவனது இவ்வாக்கியத்தின் பேரோ சையானது அவரது செவிக் கெட்டியவுடன் அவரது ஹிருதயத்தில் பயமேற்பட்டு தேரேக முழுதிலும் நடுக்க முண்டாகி "அந்த நேரம் இதோ வந்துவிட்டதென சப்தமிட்டவராகக் கொள்ளையிட்ட ஐஸ்வரியங்களை எல்லாம் திரும்பக் கொடுத்து விடும்படி உத்திரவிட்டு விட்டுத் தம் பிற்கால வாழ்க்கையிலும் இவ் வாறுன துற்செய்கையி லீடுபடுவதில்லை என மனதில் உறுதி கொண்டு ஆண்டவனது ஞாபகத்தில் சதா ஈடுபட்டுத் தம் காலத்தைக் கழித்து வந்தார். ஆஹா! குர்ஆன் ஷரீபின் தெய்வீக சக்தியின் மகிமை தானென்னே? குர்ஆனின் ஒரு சிறிய வாக்கியத்தை சற்று சிந்தனை செய்வது கொண்டு எவ்வளவு தூரம் பிரயோசன மேற்பட்டிருக்கிற தென்பதை யும், அதற்குப்பின் அவருக்கு சற்றும் மனோ நிம்மதி ஏற்படவில்லை என்பதையும் சிந்தனை செய்து பாருங்கள்.

ஒரு பெரியார் ஒரு நாளன்று வெளியில் போய்க் கொண்டிருக்கும் சமயம் ஒரு சிறு வன் மதரஸாவின் வாயலில் நின்றுகொண்டு கையிலிருக்கும் பலகையைப் பார்த்துப் பார்த்து அழுது கை சேதப்பட்டுக் கொண்டி ருப்பதைக் கண்டு இறக்க மேற்பட்டு அவ னிடம் சென்று மகனே! எதற்காக இவ்வளவு தூரம் அழுகின்றுய் எனக் கேட்டதற்கு, தம் கையில் வைத்திருந்த பலகையை முன்னு லாக்கி இதில் கூறப்பட்டிருக்கும் ஆண்டவ னது திருவஸனத்தைப் பார்த்து மானிடன் எவ்வாறு உயிர் வாழ்வது, உலகத்தை வெறுத்து அழாமல் என்ன செய்வது எனக் கூறினுன். இதுகேட்டு அப்பெரியார் அப்பல கையை வாங்கி வாசித்துவிட்டு இதில் ஒரு அத்தியாயத்தின் முற்பகுதிமட்டும் வரையப் பட்டிருக்கின்றது; நாளையதினம் உபாத்தியா யர் மற்றொரு பகுதியை எழுதிக் கொடுப்பா ராயின் அதனைப் பார்த்து இன்னும் அதிக துக்கமடைவாய் எனச் சொல்லிச் சென்று விட்டார். மறுநாள் அப்பெரியார் அவ்வீதி வழியே வருங்காலை அப்பலகையில் அவ்வத் தியாயத்தின் பிற்பகுதி எழுதப்பட்டிருப்ப தையும், அச்சிறுவன் அவ்விடமே கீழே விழு ந்து மரணமடைந்து கிடப்பதையும் பார்த்து பேராச்சரியமடைந்து சென்றதாகக் கூறப் படுகிறது. இச்சம்பவம் அச்சிறுவனுக்கு ஆண் டவனது தூய்மை வாய்ந்த கலாமைப் பார்த்த தாலேற்பட்டதாகு மென்பது திண்ணம்.

(தொடரும்)

ஹஸ்ரத் உதுமான் (ரலி.)யின் ஆக்ஷியும், இப்னு ஸபாவின் சூழ்ச்சியும்

முஸ்லிம்களுக்கு இரண்டு ஹிஜ்ரத்கள் நிகழ்ந்திருக்கின்றன. முதலாவது ஹபஷாவின் பக்கல் சென்றது. இரண்டாவது மதீனாவுக்குப் பிரயாணமானது. இவ்விரு ஹிஜ்ரத்தின் பாக்கியமும் ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களுக்குக் கிடைத்திருக்கின்றன. எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் தங்களது அருமை குமாரத்திகளிலிருவரை ஒருவருக்குப் பின் ஒருவராய் ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களுக்கு விவாகஞ் செய்து கொடுத்திருந்தார்கள். இதன் காரணமாக, ஹஸ்ரத் அவர்கள் “ தின்னூரைன் ” (இரு ஒழிவுகளை அடைந்தவர்கள்) என்னும் சிறப்புடன் அழைக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் உதுமான் (ரலி.) அவர்களின் ஐஸ்வரியங்களானது, எம்பிரான் சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்களினது மதீனா வாழ்க்கையின் பொழுது அளவற்ற பிரயோசனத்தை அளித்திருக்கின்றது. மதீனாவில் இற்றைக்கும் ஹஸ்ரத் அவர்களது மூன்று ஞாபக சின்னங்கன் சிறப்புற்று இலங்கா நிற்பது காணலாம். (1) 35 ஆயிரம் தீனார் கொடுத்து ஒரு கிணற்றை விலைக்கு வாங்கி முஸ்லிம்களின் உபயோகத்திற்காக விட்டிருக்கின்றார்கள் (2) மஸ்ஜிதநபவிய்யின் விஸ்தீரணத்திற்காக இடம்வாங்கி மஸ்ஜிதுடன் சேர்த்துவிட்டிருக்கின்றார்கள். (3) கஷ்டத்திலிருக்கும் சேனைகளின் சௌகரியத்திற்காக ஆயிரம் தீனாரும், 300 ஒட்டகமும் இனாமளித்தார்கள் இஃது அன்னோருக்குப் பெரும் உபகாரமாகயிருந்தது.

தாங்கள் கியாதி வாய்ந்த மாபெரும் தலைமைவாய்ந்த வியாபாரியாக இருந்தார்கள். எனவே வியாபாரிகளுக்கு ஐஸ்வரியங்கள் மீது அளவற்ற பற்றிருப்பது சகஜமே ஆனால் ஹஸ்ரத் அவர்கள் அவ் ஐஸ்வரியங்களை ஆண்டவனுடைய பாதையில் செலவிடுவதில் தாராள சிந்தையுடையவர்களாகக் காணப்பட்டார்கள். துர் அதிர்ஷ்டவசமாக தற்காலை, பொதுஸ்தானங்களுக்காகமிதமான தனங்களைச் செலவிடும் முஸ்லிம்களைக்காண்பது மிகமிக அறிதாயிருக்கின்றது. ஆனால் ஹிந்துக்களோ தாங்கள் நலவான காரியங்களிற்செலவு செய்வதாக எண்ணிக் கொண்டு கோடிக் கணக்கான ரூபாய்களை பொது விஷயங்களுக்காக தருமமளித்து விடுகின்றனர். உதாஹரணமாக சமீபத்தில் மிஸ்டர் டாடா என்பார் மூன்று கோடி ரூபாய்களை பொது நிதிக்கு ஒதுக்கி வைத்திருக்கின்றார். நம் முஸ்லிம் சோதரர்களோ பெரும்பெரும் தனவந்தர்களாகயிருக்கின்றனர், தயாள சிந்தை என்பதுஅவர்களின் மனதைவிட்டு அகன்றே போயிருக்கின்றது. ஒரு காலத்தில் முஸ்லிம்களில் பெரும் பெரும் கொடையாளிகள் காணப்பட்டனர்; இதுபொழுதோ ஆண்டவனது பாதையில் கொடுப்பதைப் பயப்படுகின்றவர்களையே காண்கின்றோம். இவர்கள் ஐஸ்வரியங்களைச் செலவு செய்து விடுவது கொண்டு பின் சந்ததியினருக்குக் கஷ்டத்தைக் கொடுத்து விட்டவர்களாவோமென பயப்படுகின்றனர் போலும். எத்தனையோ தனவந்தர்கள் கோடிக் கணக்கான ரூபாய்களைத் தங்கள் பின் சந்ததிகளுக்கு வைத்துப் போயும் அவர்களது அறியாத் தனத்தால் அவ் ஐஸ்வரியம் முழுதும் பாழாய்ப் போனது இன்னோருக்குத் தெரியாது போனதேனோ? அவர்களது சகல ஐஸ்வரியங்களும் இருந்த இடந் தெரியாது மறைந்து போய்விட்டது. ஆனால் அல்லாஹ்வின் பாதையிற் செலவு செய்தவைகளை மட்டும் உலகம் இற்றைக்கும் நினைத்துக் கொண்டிருக்கிறது.

ஹஸ்ரத் அவர்கள் ஹிஜ்ரீ 23-ம் ஆண்டு முஹற்றம்மீ 1ங்வ கலீபாப் பதவி வகித்தார்கள். ஆறு மாதத்திற்குப் பின் ஈரானில் சதி நடந்தது. அது சமயம் ஈரான் அரசருக்குத் தோல்வி ஏற்பட்ட போதிலும் ஹஸ்ரத் அவர்களின் ஆக்ஷி காலத்தில் அவர் உயிருடனேயிருந்தார். அவருடைய காலத்தில் சதி நடப்பது சாதாரண விஷயமாகவே யிருந்தது. ஹஸ்ரத் அவர்கள் அச்சதி யாவற்றையும் ஒழித்ததுடன் கிழக்குத்திசையில் துருக்கிஸ்தான் வரையிலுள்ள இடங்களை தங்களது

ஆக்ஷியின் கீழ் கொண்டு வந்துவிட்டார்கள். அது பொழுது முஸ்லிம்கள் சைனா வரை சென்று விட்டார்கள். கஸ்னீ, காபல், ஹிராத் முதலிய இடங்களிலுள்ள அதிகாரிகளும் ஹஸ்ரத் அவர்களுக்கு வழிப்பட்டு நடக்க முற்பட்டு விட்டனர். தென் பாரிஸத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் காலத்தில் ஷாம் தேசம் வரையில்தான் ஜெயிக்கப்பட்டிருந்தது. ஆனால் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் தலைமைத்தனம் வகித்த இரண்டாம் ஆண்டே ரூம்தேச கைஸரானவர் ஷாம்மீது படைஎடுத்தார். தாங்கள் அப்படை எடுப்பைத் தடுத்ததோடு நில்லாது முன்னேறிச் சென்று ரஷியாவிலுள்ள கோஸக், திப்லஸ் முதலிய இடங்களையும், அரிமினியாவிலுள்ள சகலபாகங்களையும் ஜெயித்து விட்டார்கள். இவ்வாறு முஸ்லிம்கள் ஒரு பக்கல் ஈரான்வரையும் மறுபக்கல் குஸ்தந்தனியாவின் வாசற்படிவரையும் சென்று விட்டார்கள். கைஸரிடம் கடல் பலம் அதிகமாக யிருந்ததால் அவர் இஸ்கந்தரிய்யாமீது படை எடுத்ததைக்கண்ட ஹஸ்ரத் அவர்களின் படையானது இஸ்கந்தரிய்யாவை மறுமுறை ஜெயித்ததுடன் பர்கா, தராபுலிஸ் இவைகளையும் ஜெயித்துக்கொண்டு கடைசியாக முராகஷ் அல்ஜேரியா வரை வந்து இஸ்லாத்தின் கொடியை நாட்டிவிட்டது.

ஹஸ்ரத் அவர்கள் விண்ணுலகேகுவதற்கு இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன் ஏற்பட்ட பித்னாவானது முஸ்லிம்களின் அபஜெயத்திற்கும், ஹஸ்ரத் அவர்களினது ஷஹாதத்திற்கும் காரணமாயிற்று. அதாவது எமன் வாசியான "அப்துல்லாஹிப்னுஸபா" என்னும் பெயருள்ள எஹூதி ஒருவன் யமனிலிருந்து கிளம்பி முஸ்லிம் நாடுகளாகிய பஸ்ரா, கூபா, மிஸர் முதலிய தேசங்களிற் புகுந்து புறப்பட்டான். ஷாம் தேசத்தில் மட்டும் ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் வல்லமை பொருந்திய கவர்னராக யிருந்ததால் அவர்களிடஞ் செல்வதற்குள்ள தைரியம் அன்னோனுக்கேற்படவில்லை. அந்த இடந் தவிர்த்து மற்றப் பகுதிகளிளெல்லாம் பித்னாவென்னும் வித்தை விரைத்துவிட்டு பலம் பொருந்திய கூட்டத்தைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான். இவ்வாறு ஏற்பட்டுள்ள பித்னாவுக்கு வெளிரங்கமான காரணம், ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கவர்னர்களை தாஷிப்பதாக யிருந்தது. அந்தரங்கத்தில் மார்க்க சம்மந்தமான காரணமாக கலீபாப் பதவி வகிப்பதற்கு பாத்தியஸ்தர் ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களாகும்; ஹஸ்ரத் உதுமான் (ரலி) அதை அபகரித்துப் பிடிங்கிக் கொண்டார் எனச் சொல்ல முற்பட்டான். இவ்வாறான சந்தேகம் ஏற்கனவே சிலரின் மனதிலேற்பட்டிருந்தது. இதனாலேயே ஹஸ்ரத் அபூபக்ர் ஸித்தீக் (ரலி) அவர்கள் காலத்திலேயே ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பைஅத் (அறுதிமானம்) செய்யாதிருந்தார்கள். இது தவிர ஹஸ்ரத் பாத்திமா (ரலி) அவர்களுக்கு அனந்தர பாத்தியதையில் தீர்ப்பளித்த விஷயமாய் ஹஸ்ரத் அவர்கள்மீது மனஸ்தாபமுமேற்பட்டிருந்தது. இவ்வாறான அற்பசொற்ப விஷயங்களை எல்லாம் ஒன்று சேர்த்து இப்னுஸபா ஓர் பெரும் மாளிகை அமைத்துவிட்டான்.

எனவே இந்த பித்னா பரவ ஆரம்பித்து நானாபக்கங்களிலுமிருந்து கவர்னர்கள் விஷயமாய் தூஷணிப்பான ரிபோர்ட்கள் வர ஆரம்பித்தது இதைப் பார்த்து ஹஸ்ரத் அவர்கள் சஹாபாக்களை அழைத்து எந்த விதமான தூஷணிப்புகளும் கவர்னர்களிட மிருப்பதாக எனக்குத் தெரியவில்லை எனத் தெரிவித்து, அவர்களையும் கலந்து ஆலோசித்து அதனை விசாரிப்பதற்காக நான்கு பெயர்களை ஒரு கமிட்டியாக நியமித்தனுப்பினார்கள். இந்நால்வரும் ஒவ்வொரு மாகாணங்களுக்குஞ் சென்று விசாரணை புரிந்த பின்னர் அதில் முவ்வர் திரும்பிவந்து கவர்னர்கள்மீது சுமத்தப்பட்டவைகளெல்லாம் வீண்படுதூர்களே யாகுமென ரிபோர்ட் செய்துவிட்டனர். ஒருவர் திரும்பவராது அங்கேயே தங்கிவிட்டார். இந்நிலையிலும் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள், சகல கவர்னர்களும் ஹஜ்ஜுடைய காலத்தில் தங்களிடம் வந்து சேரவேண்டுமென்னும் ஓர் சுற்றறிக்கையைவெளியாக்கியதுடன், யார் யார் எந்தெந்த கவர்னர்கள் மீது குற்றம் சொல்லுகின்றார்களோ அவர்களும் அது சமயம் வந்து குற்றத்தைத் தெரிவித்துக் கொள்ளலாமென்று ஆட்கள் மூலம் செய்தி அனுப்பிவிட்டார்கள். எவரும் ஒரு குற்றத்தையேனும் சொல்லிக்கொண்டு முன் வரவில்லை. இதனால் அவன் கவர்னர்கள் விஷயமாய் ஏற்படுத்தப் பார்த்த படுதூர்களெல்லாம் பொய்யென யாவருக்கும் நன்கு புலனாய்விட்டது.

ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் நுண்ணறிவுள்ளவர்களாதலின் இச்சம்பவங்களைப் பார்த்து ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்களினது உயிருக்கு ஆபத்து வந்துவிட்டதெனக் கருதி, நான் ஷாமிலிருந்து சேனைகளை அனுப்பி வைக்கின்றேன்; அவைகளைத் தங்களுக்குக்காவல் புரிவதற்காக வைத்துக்கொள்ளுங்கள் ; அல்லது தாங்கள் மதீனாவை விட்டு திம்ஷகை ராஜதானிப் பட்டணமாகச் செய்துகொள்ளுங்களென அறிவிக்கவே, ரசூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள் எந்த இடத்தைத் தங்கள் குடியிருப்பாகச்செய்து கொண்டார்களோ அதை விட்டு ஒருக்காலும் நான் செல்லேன்; தவிர என் உயிரைக் காப்பாற்றுவதற்காக பைத்துல்மால் (பொதுநிதி)யிலிருந்து செலவு செய்வதையும் நான் விரும்பவில்லை எனக் கூறி விட்டார்கள். இதைக்கேட்டு ஹஸ்ரத் முஆவியா (ரலி) அவர்கள் அதிக வருத்தப் பட்டவர்களாகச் சென்றுவிட்டார்கள்.

இதன்பின் சிறிது காலத்திற்கெல்லாம் பஸரா, கூபா, மிஸ்ர் இம்மூன்றிடங்களிலுமுள்ள கலப்புக்கூட்டத்தார் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் யாருக்குந் தெரியாது மதீனாவைத் தாக்க வந்தனர். ஆனால் அவர்கள் பட்டணத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பே மதீனாவாசிகள் ஆயுதபாணிகளாக வெளி வந்துவிட்டதைப் பார்த்து மௌனமாக யிருந்துவிட்டனர். அவர்களின் நோக்கம் மதீனாவைக் கைப்பற்ற வேண்டுமென்றிருந்ததால் மதீனாவாசிகளைத் தாக்க முற்படவில்லை. ஒரு காலத்தில் ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமை அன்போடு நடத்திவந்ததால் அந்த முஸ்லிமுக்கு விரோதமாய் வாள் எடுப்பதை அருவருத்துக்கொண்டிருந்தனர். எது முதல் முஸ்லிம்களை விட்டு இவ்வெண்ணம் அகன்று விட்டதோ அது முதல் முஸ்லிம்கள் கூஷீண திசை அடைந்துகொண்டே போகின்றனர்.

ஏற்கனவே மதீனாவைத் தாக்கவந்த கலப்புக்கூட்டத்தார் சிலநாட்கள் மதீனாவிலேயே யிருந்துவிட்டு பிறகு ஹஸ்ரத் அவர்களிடஞ் சென்று நாங்கள் கூறிக்கொண்டிருந்த பல ஆக்ஷேபனை களையும் வாபஸ் வாங்கி மன்னிப்புக்கேட்டுக் கொள்கின்றோம்; ஆனால் மிஸ்ருடைய கவர்னரை அவருடைய உத்தியோகத்தை விட்டு நீக்கி, அவரது ஸ்தானத்தில் முஹம்மது இபுனு அபீபக்ர் அவர்களை நியமித்து விடுங்களென கோறிக் கொண்டனர். ஹஸ்ரத் அவர்களும் இதற்கனுமதி யளித்து அவ்வுத்திரவை அவர்கள் கையிலேயே கொடுத்தனுப்பினார்கள். அவர்கள் அதை வாங்கிக்கொண்டு மதீனாவிலிருந்து பஸரா, கூபா, மிஸர் இவ்விடங்களுக்குப் போவதற்குள்ள பொது ரஸ்தா வழியாகச் சென்று, பிறகு தனித்தனியே பிரிந்து செல்லும் பாதைகளிற் சென்றுவிட்டனர். இவ்வாறு செய்ததானது, இவர்கள் சென்றுவிட்டார்களென்பதை மதீனாவாசிகள் தெரிந்துகொள்வதற்கேயாம். இவர்கள் இவ்வாறு சென்றுவிட்டுப் பிறகு மூன்று கூட்டத்தினரும் ஒன்றாகச் சேர்ந்து திரும்பிவந்து மதீனாவைத் தாக்கிக் கைப்பற்றிக்கொண்டார்கள். இந்நிலைமையில் மதீனாவாசிகள் இன்னோரை எதிர்த்துப் போர்புரிய சக்திபெற்றவர்களாக யிருக்கவில்லை. இவர்கள் திரும்பிவந்ததற்குக் காரணமாக, ஹஸ்ரத் அவர்கள் எங்களிடம் ஒரு கடிதமெழுதிக் கொடுத்தனுப்பி விட்டு முதல் கடிதம் கொண்டு வருபவர்களைக் கொன்று விடுங்களென மறு கடிதமொன்று எழுதி அனுப்பி வைத்துததான் எனக் கூறிக் கொண்டிருந்தார்கள்.

இதனைக் கேட்டு ஹஸ்ரத் அவர்கள், நான் இரண்டாவது கடிதமெழுதி யாரிடமும் கொடுத்தனுப்ப வில்லை எனக் கூறிவிட்டார்கள். இதனை ஒரு பொருட்டாக மதித்து ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடஞ் சென்றபொழுது, அலீ (ரலி) அவர்கள் இன்னோரை நோக்கி இரண்டாவது கடித மனுப்பி யிருந்தால் அது மிஸர்வாசிகளிட மல்லவா கிடைத்திருக்க வேண்டும்; இந்நிலைமையில் நீங்கள் மூன்று கூட்டத்தினர்களும் ஒன்று சேர்ந்து எப்படி இங்கு வந்தீர்களென கேழ்க்கவே அவர்கள் யாதொரு மறு மொழியுங் கூற முடியாது விழித்தனர்.

கிளர்ச்சிக்காரர்கள் மதீனாவைக் கைப்பற்றிய உடன் ஹஸ்ரத் உதுமான் (ரலி) அவர்கள் கிலாபத் பதவியை விட்டு நீங்கிவிடவில்லையானால் அவர்களினது உயிருக்கே ஆபத்து வந்து விடுமென எச்சரிக்கை செய்தனர். இதற்குப்பின் சில நாட்கள் வரை ஹஸ்ரத் அவர்கள் பள்ளிக்கு வந்து கொண்டிருந்தார்கள். ஒரு நாளன்று குத்பா ஓதிய

பின் எந்தெந்த இடங்களிலெல்லாம் கிளர்ச்சிக்காரர்களின் கூட்ட மிருக்கிறதோ அந்தந்த இடங்களைக் குறிப்பிட்டு, ரசூல் (ஸல்.) அவர்கள் இன்னின்ன இடத்திலுள்ளவர்கள் மீது லஅனத் செய்திருக்கின்றார்கள் எனக் கூறினார்கள். அதனால் பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு ஹஸ்ரத் அவர்கள் மீது அடிவிழுந்ததால் கீழேவிழுந்து விட்டார்கள். அதற்குப் பின் வீடு கொணர்ந்து சேர்க்கப்பட்டது. பகைவர்களெல்லாம் வீட்டைச் சூழ்ந்து கொண்டனர்; கிளர்ச்சிக்காரர்கள் உட்புகாதபடி ஹஸ்ரத் அலீ, ஹஸ்ரத் தல்ஹா, ஹஸ்ரத் ஜுபைர் (ரலி) முதலியோர் தங்கள் பிள்ளைகளை வாசற்படியில் காவல் வைத்து விட்டார்கள்.

சில காலம்வரை இவ்விதமே யிருந்துவந்து கடைசியாக ஹஜ்ஜுடைய காலம் வந்தவுடன் மகா ஜனங்கள் யாவரும் ஹஜ்ஜுக்காகச் சென்று விட்டார்கள். இந்த நேரத்தைத் தக்க சமயமெனக் கருதி வாசற்படியில் காவல் புரிவோர்களைக் கிளர்ச்சிக்காரர்கள் தாக்கவே, அவர்கள் கதவை உள்ளால் தாளிட்டுக் கொண்டனர் இதைப் பார்த்து வீட்டின் பின் புறமாக முகட்டின் மீதேறி உள்ளால் குதித்து, ஹஸ்ரத் அவர்கள் குர்ஆன் ஷரீப் ஓதிக்கொண்டிருக்கும் நிலைமையில் அவர்களை ஷஹீதாக்கி விட்டார்கள். இச் சம்பவமானது முஸ்லிம்களின் பலத்தையும் தைரியத்தையும் அழித்தொழித்து அவர்களை இரண்டு துண்டாகப் பிரித்து விட்டதுடன் முஸ்லிம்களின் ஜெயத்திற்கும் தடையாக ஆய்விட்டது. இச் சம்பவம் மட்டும் நிகழாதிருக்குமாயின் ஆண்டவனது கிருபையால் முஸ்லிம்களுக்கு எவ்வளவுதூரம் ஜெயம் ஏற்பட்டு பூமியின் எவ்வளவு பாகங்கள் இவர்களுடைய ஆக்ஷியின் கீழ் வந்திருக்கும்?

ஹஸ்ரத் அவர்கள் வீட்டில் சிறையாவதற்கு முன் ஒருநேரத்தில் ஓரிடத்தில் நின்று கொண்டு ஓர் சொற்பெருக் காற்றினார்கள். சாதாரணமாக ஜனங்கள் தாங்கள் செய்தநன்றியைச் சொல்லிக் காண்பிப்பது வழக்கத்தில்லாதிருந்தாலும் சமய சந்தர்ப்பத்திற்கேற்ப ஹஸ்ரத் அவர்கள் ஜனங்களை நோக்கி "பீரரூமா" என்னும் நல்ல தண்ணீர் கிணற்றை யார் கிரயம் கொடுத்து வாங்கியது? எனக் கேட்டார்கள். யாவரும் சேர்ந்து "தாங்கள் தான் வாங்கினீர்கள்" எனக் கூறினர். இன்று அத்தண்ணீர் எனக்குக் கிடைக்காது தடுக்கப்பட்டுப் போய்விட்டதென ஹஸ்ரத் அவர்கள் கூறினார்கள். மீண்டும் மானிடர்களை நோக்கி மஸ்ஜித நபவிய்யை விசால மாக்கியது யாரென உங்களுக்குத் தெரியுமா? எனக் கேட்டார்கள். அதற்கும் யாவரும் சேர்ந்து தாங்கள் தான் எனக்கூறினர். இன்றைய தினம் அதில் நான் தொழுகையை நிறைவேற்றுவதை விட்டும் தடை செய்யப்பட்டிருக்கிறேனென ஹஸ்ரத் அவர்கள் கூறினார்கள்.

அன்புற்ற நேயர்காள் !

மானிடர்கள் தாங்கள் செய்த நன்றியை எடுத்துக் கூறுவது வழக்கமில்லாதிருக்கும் நிலைமையில் ஹஸ்ரத் அவர்கள் இவ்வாறு கூறியதானது, இவ்வளவு பாரதூரமாக காரியத்தைச் செய்திருக்கின்றவரை அற்பசொற்ப காரியத்திற்காக அழித்து விட நாடுகின்றீர்கள்; சாதாரணமாக இவ் விஷயங்களினாலெல்லாம் உலகத்தில் பஸாது நடந்துகொண்டிருப்பது சகஜந்தான்; அவ்வாறு பஸாது ஏற்படும் நேரங்களில் அவர்களால் புரியப்பட்டுள்ள நலவுகள் எடுத்துக் காண்பிக்கப்படுமாயின் அப்பஸாதுகளெல்லாம் நீங்கி விடுவது ஸகஜமாக யிருந்துவருகிறது; பஸாதான வார்த்தைகளைப் பின்னாலிருந்து சொல்லிக் கொண்டிருப்பதை விட முகரூபிலேயே அறிவிக்கப் படுமாயின் வெகு இலகுவில் அவை நீங்கிவிடுகிறது; ஆதலின் முஸ்லிம்கள் அற்ப சொற்ப விஷயங்களை எல்லாம் பொருட்படுத்தாதிருக்க வேண்டும்; முற்காலத்திலும் பஸாதுகள் ஏற்பட்டுக் கொண்டுதானிருந்தது; ஆனால் அவை முகரூபிலேயே நடை பெற்றுக்கொண்டிருந்தது; ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் குத்பா ஓதிக் கொண்டிருக்குங்கால் ஒரு மனிதர் எழுந்து நான் தங்களுடைய வார்த்தையை கேழ்க்கவு மாட்டேன், அதனை ஒப்புக்கொள்ளவுமாட்டேன், நான் கேழ்ப்பவைகட்கு பதிலளிக்க வேண்டும் அதாவது எமன் தேசத்திலிருந்து வந்த நான்கு போர்வைகளில் ஒன்று தங்களுக்குக் கிடைத்திருந்தது அதனைக் கொண்டு சட்டைதைப்பதற்கு முடியாதிருக்கும் நிலைமையில் தாங்கள் அணிந்திருக்கும் சட்டையானது இரண்டு போர்வைகளைக் கொண்டு தைக்கப்

பட்டதாகத் தெரிகின்றதே தங்களுக்குக் கிடைத்த ஒரு போர்வையைத் தவிர மற்றொன்று எங்கிருந்து கிடைத்ததென முகமுன்பிலேயே வினவினர்; உடனே ஹஸ்ரத் அவர்கள் தங்கள் குமாரர் பக்கல் திரும்பவே, அவரெழுந்து என் பாகத்திற்குக் கிடைத்த போர்வையையும் நான் அவர்களுக்குக் கொடுத்துவிட்டேன் எனக்கூறியவுடனே அன்னோன் உட்கார்ந்து விட்டார்; தவறுகளை எடுத்துச் சொல்வது குற்றமல்ல; ஆனால் அவைகளை முகமுன்பில் தெரிவிக்க வேண்டுவதுதான் முறையாகும்; அவ்வாறு அறிவிப்பது கொண்டு பெரியார்கள் வருத்தமடைய மாட்டார்கள்; அவைகளைப் பின்னால் சொல்லிக் கொண்டிருப்பது புறம் பேசுவதாகும் என்பதைத் தெரிவிப்பதற்காகவே யாகும் என்பது திண்ணம்.

அரும் நிகழ்ச்சிகள்.

ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி)

அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உமரபாரூக் (ரலி) அவர்கள் கலீபாவாக யிருந்த காலத்தில், இஸ்லாமியச்சேனையானது பற்பல தேயங்களையும் ஜெயித்துக்கொண்டு ஈரான் சென்றது. அதுபொழுது அங்குள்ள கவர்னர், சேனைத் தலைவராகிய ஹஸ்ரத் அபூ உபைதா (ரலி) அவர்களுக்கு விருந்தளிக்கக் கருதி சுவை பொருந்திய உணவுகளைத் தயாரித்தனுப்பினர். சேனைத் தலைவரவர்கள் இதைப் பார்த்து இவ்வுணவு யாவருக்குமா? அன்றி தமக்கு மாத்திரமா என வினவினர்கள். இவ்வளவு சீக்கிரமாக யாவருக்கும் உணவு சமைப்பது கஷ்டமாகுமாதலின் தங்களுக்கு மாத்திரந்தான் எனக் கூறவே, ஹஸ்ரத் அவர்கள் அதனைத் தின்னுவதை மறுத்து, முஸ்லிம்கள் யாவரும் சமமானவர்களாக யிருப்பதுடன், யாவரும் ஒன்றாக வந்திருக்கும் நிலையில் சொந்தமாக ஒருவருக்கு உணவளிப்பது பொருத்தமுடையதாகா தெனக் கூறிவிட்டார்கள்.

ஒரு சிறுவரின் தைரியம்

ஹஸ்ரத் உமரிப்னு அப்துல் அஜீஜ் கலீபாப் பதவியை ஏற்றுக்கொண்ட அன்று இதற்கு முன்னிருந்த கலீபாவை தபன் செய்வதிலும் மற்றவர்களிடம் உறுதிமொழி வாங்கும் வேலையிலு மீடுபட்டிருந்ததால் அன்றிரவு துயில் கொள்வதற்குச் சௌகரியப் படாது போயிற்று. மறுநாட் காலையில் கலீபா அவர்கள் சற்றுத் துயில்புரிய நாடியபொழுது கலீபாவின் குமாரரான அப்துல்மலீக் என்பார் பிதாவை நோக்கி, ஒருவருடைய பாத்தியதை பிறர் கையிலிருக்கும்பொழுது தாங்கள் நித்திரை செய்ய நாடுகின்றீர்களா? என வினவவே, ஆம் சற்றுநேரம் தூங்கிவிட்டு லுஹர் தொழுகைக்குப் பின் காரியாதியின் பக்கல் நோக்கிவிடுகின்றேன் எனக் கூறினர்கள். இதுகேட்டு "தாங்கள் அதுவரை ஜீவித்திருப்பீர்களென்னும் நம்பிக்கை தங்களுக்கிருக்கின்றதா" எனக் கேட்கவே கலீபா அவர்கள், புத்திரரின் நெற்றியை முத்தமிட்டு அவரது தைரியத்தை மெச்சிப் பாராட்டி துயில் புரிவதைத் தவிழ்த்து இராஜ்ய பரிபாலனத்தின் பக்கல் திரும்பிவிட்டார்கள்.

கலீபா வலீதும் ஹஸ்ரத் சயீதும்

ஹிஜ்ரீ 91-ம் ஆண்டில் கலீபா வலீத் அவர்கள் ஹஜ்ஜுடைய காரியாதிகளை முடித்துக் கொண்டு மதீனாவுக்குச் சென்றார்கள். அதுபொழுது ஹஸ்ரத் உமரிப்னு அப்துல் அஜீஜ் மதீனாவின் கவர்னராக யிருந்தார். கலீபா அவர்கள் மஸ்ஜித நபவிக்குச் செல்ல நாடியபொழுது பள்ளியைவிட்டு யாவரையும் வெளியாக்கிவிட வேண்டுமென்னும் கட்டளை பிறப்பிக்கப்பட்டது. ஆனால் ஸயீதுப்னு முஸய்யப் என்னும் பெரியார் பலவாறான நிர்ப்பந்தங்களுக்கிடையே அங்கேயே உட்கார்ந்துகொண்டு யாரோ கலீபா வருகின்றாரும் ஆண்டவனுடைய வீட்டில் யாரும் உட்கார்ந்திருக்கக் கூடாதாம். என்னே பெரும்

ஆச்சரியமாக யிருக்கிறது? எனக் கூறிக் கொண்டேயிருந்தார். இந்நிலைமையில் கலீபா அவர்கள் பள்ளியின்வாயலண்டை வந்துவிட்டார்கள். அதுபொழுது பாராக்காரர்கள் அவ் விருத்தாப்பியரைநோக்கி கலீபாவருகின்றார்கள் ஸலாம் சொல்வதற்காக எழுந்திருங்கள் என எச்சரித்தார்கள். உடனே அப்பெரியார் ஆண்டவனுடைய வீட்டில் இருவருக்கு ஸலாம் செய்வதெப்படி? மஸ்ஜிதில் கலீபாவென்றும் இதரரென்றும் வித்தியாசம் பாராட்டுவது தகாது; அவர் மஸ்ஜிதுக்குள் கலீபாவென்னும் முறையிலில்லை; அவரும் ஒரு முஸ்லிமென்னும் ஹோதாவில்தான் வரவேண்டும் எனக் கூறினர். இதற்குள் கலீபா அவர்கள் அந்த இடத்திற்கு வந்துவிட்டார்கள். அப்பெரியாரோ எழுந்திருக்கவுமில்லை, ஸலாம் சொல்லவுமில்லை. கலீபா அவர்கள் அப்பெரியாரைப் பார்த்தவுடன் தாங்களே ஸலாம் சொன்னார்கள்.

ஹஸ்ரத் உமர்(ரலி)யின் சாதாரண வாழ்க்கை

பைத்துல் முகத்தஸை ஜெயித்தபின் அமீருல் மூமினீன் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஆங்கு செல்லப் புறப்பட்டார்கள். அதுபொழுது தாங்கள் எந்தக் குதிரையின் மீது ஏறிச்சென்றார்களோ அதன் குளம்பு தேய்ந்திருந்ததால் அது காலை இழுத்துக்கொண்டே நடந்தது அதனால் ஹஸ்ரத் அவர்கள் கீழே இறங்கி கால்நடையாகச் செல்ல ஆரம்பித்தார்கள். அதைப் பார்த்து முஸ்லிம்கள், துருக்கிக் குதிரைகளில் மேலானதையும், விலைமதிப்புள்ள உடைகளையும் கொண்டுவந்து கொடுத்து, தாங்கள் பைத்துல் முகத்தஸிற்குள் இராஜவைபவத்துவடன் நுழையவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள். ஆனால் ஹஸ்ரத் அவர்கள் அதனை அங்கீகரியாது, ஆண்டவன் எனக்கு எந்த மரியாதையைக் கொடுத்திருக்கின்றானோ அது தான் இஸ்லாத்தின் மரியாதையாகும்; அதுவே நமக்குப் போதியனவாகும் எனக் கூறிவிட்டு தங்களுடைய சாதாரண உடையுடனே பைத்துல் முகத்தஸிற்குள் பிரவேசித்தார்கள்.

ஹஸ்ரத் உமர் (ரலி.)யின் நீதி

ஒரு நாளன்று ஹஸ்ரத் உமர் (ரலி.) அவர்கள் இராஜிய பரிபாலனஞ் செய்து கொண்டிருக்கும் போது அநேக ஆமில்கள் (வரிவசூலிப்போர்கள்) விஜயஞ் செய்திருந்தனர். அது பொழுது ஒருவர் எழுந்து இன்ன ஆமில் அக்கிரமமாக என்னை சாட்டையாலடித்தார் எனக் கூறினர். இதைக் கேட்டவுடனேயே ஹஸ்ரத் அவர்கள் அந்த ஆமிலை சாட்டையாலடிக்கும்படி கட்டளை பிறப்பித்தார்கள். உடனே சபையில் சத்தம் கிளம்பிற்று. உடனே ஹஸ்ரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் எழுந்து நின்று "இச்செயல் ஆமில்களுக்குக் கஷ்டமாகத் தோன்றும் எனக்கேட்டுக் கொண்டதற்கு, "அநியாயம் புரிந்தவருக்கு பதில் செய்யாமலிருக்க முடியாது" என ஹஸ்ரத் அவர்கள் கூறிவிட்டார்கள். பின்னர் ஹஸ்ரத் அம்ருப்னுல் ஆஸ் (ரலி.) அவர்கள் பலவாறான கஷ்டத்துடன் அடிபட்டவரைத் திருப்தி செய்து ஒரு அடிக்கு 2 பவுன் வீதம் கணக்குப் பார்த்து, 200 பவுன் வாங்கிக் கொடுத்து அவரை திருப்தி செய்து அப்பினார்கள்.

ஹஸ்ரத் ஹம்ஜா (ரலி.) இஸ்லாத்தைத் தழுவியது

எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் சிறிய தந்தையாரான ஹஸ்ரத் ஹம்ஜா (ரலி.) அவர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவாதிருக்குங் காலை ஒரு நாளன்று அபூஜஹ்ல் என்பான் உலகரெக்ஷகர் (ஸல்.) அவர்களினது தலையில் கல்லாலடித்துக் காயப்படுத்திவிட்டான். இச்செய்தி ஹஸ்ரத் அவர்களுக்குத் தெரிந்தவுடனே, சகோதர வாஞ்சையின் காரணமாய் கோபமேலிட்டவர்களாக ஒரு கல்லை எடுத்து அபூஜஹ்லின் தலையிலடித்துவிட்டு ஹஸ்ரத் அவர்களிடஞ் சென்று அருமை குமாரரே? நான் அபூஜஹ்லிடம் பழிவாங்கி விட்டேன், இது கேட்டு மிக்க சந்தோஷப்படுவீர்கள் எனக் கூறியதை தயாள சிந்தனையுடைய எம்பெருமானார் சற்குண சீலர் (ஸல்) அவர்கள் கேட்டு, அருமைத் தந்தை அவர்களே! இவ்விதச் சம்பவங்களினால் நான் ஒருநாளும் திருப்தி அடையமாட்டேன்; ஆனால் தாங்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவிக்கொள்வீர்களாயின் அதனால் நான் அடையும் சந்தோஷத்திற்கு மட்டே இராதெனத் தெரிவித்தார்கள். இவ் வார்த்தையானது ஹஸ்ரத் ஹம்ஜா (ரலி) அவர்களுக்குப்பெரும் பிரயோசனமளித்துவிட்டது. உடனே தன்னுணர்வற்று, ஷஹாதத் கலிமாவைஓதினவர்

களாக எழுந்து இஸ்லாமிய பந்தத்தில் சேர்ந்து கொண்டார்கள்.

ஹஸ்ரத் இமாம் அஃலம் அவர்களின் யதார்த்தம்

ஒருநாள் மன்சூர் கலீபாவானவர் இமாம் அவர்களை அழைத்து தாங்கள் நல்லவிதமாக கலம் செதுக்குவீர்களெனக் கேள்விப்பட்டிருக்கின்றேன். ஆதலின் எனக்கு ஒரு கலம் செதுக்கிக் கொடுங்களென ஒரு கத்தியும் ஒரு துண்டு நாணல் குச்சியும் கொடுத்தார். ஹஸ்ரத் அவர்கள் இவைகளைப்பெற்று நல்ல முறையில் கலமொன்றைச் செதுக்கிக் கொடுத்ததைப் பார்த்து, கலீபாவானவர் ரொம்ப சந்தோஷமடைந்தார். அதுபொழுது அவர் அதிகாரத் தோரணையிலிருந்ததால் அதே கலத்தைக்கொண்டு ஏதோ எழுத முற்பட்டார். உடனே இமாம் அவர்கள் குறுக்கிட்டு என்ன எழுதப் போகிறீர்கள் என வினவியதற்கு, நீதி பரிபாலன விஷயங்களை எழுதப்போவதாகக் கூறினர். உடனே ஹஸ்ரத் அவர்கள் அப்பேனவைக் கையில் வாங்கி அவருக்கு முன்பே ஒடித்தெறிந்துவிட்டார்கள். அந்த நேரத்தில் கலீபா அவர்களுக்கு ஏற்பட்ட கோபத்திற்கு அளவே கிடையாது. மிக்க கோபத்தோடு ஹஸ்ரத் அவர்களை நோக்கி என்ன செய்தீர் எனக்கேட்டார். உடனே ஹஸ்ரத்அவர்கள் "அபூஹனீபாவின் கலமும் தங்களுடைய அனீதியும் ஒன்றுசேர மாட்டாது (அதாவது இக்கலத்தினல் ஒருக்கால் உண்மைக்கு மாற் மான விஷயங்களை எழுதும்படி நேர்ந்துவிடும்) எனத் தெரிவித்ததை கலீபா கேட்டு மனவருத்தப்பட்டவராய் மௌனமாகயிருந்துவிட்டார்.

ஹஸ்ரத் இமாம் அபூஹனீபா (ரஹ்)வும் கலீபா மன்சூரும்

ஒருநாள் கலீபா மன்சூரானவர் ஹஸ்ரத் இமாம் அஃலம் (ரஹ்) அவர்களை அழைத்து தங்களுக்கு "காஸீ" (மார்க்கத்தீர்ப்பாளர்) பதவி அளிக்க நாடுகின்றேன் எனக்கூறினர். இது கேட்டு ஹஸ்ரத் அவர்கள் இவ்வுத்தியோகத்திற்கு நான் தகுதியற்றவனகயிருக்கிறேன் என விடையளித்தார்கள். அது பொழுது கலீபாவானவர் "தாங்கள் பொய் சொல்லுகின்றீர்கள்" எனக் கூறினர். உடனே ஹஸ்ரத் அவர்கள் "சரி முடிவேற்பட்டு விட்டது. எதுபொழுது நான் தங்களிடம் பொய்யனகை ஆய்விட்டேனு அதனல் "காஸீ" உத்தியோகம் ஏற்றுக்கொள்வதற்கு தகுதியற்றவனகை ஆய்விட்டேன்; பொய்யன் ஒருக்காலும் காஸியாக வரமுடியாது" என்று கூறவே, கலீபா மன்சூர் மறுமொழி பகர வகையறியாதிருந்துவிட்டார்.

ஹஸ்ரத் உமர் (ரலி) யின் நீதி

ஷாம் தேயத்தின் ஜெயத்திற்குப் பின் ஹஸ்ரத் அவர்களுக்கும், ரூம் தேயத்தின் கைஸருக்கும் சினேகப் பான்மை ஏற்பட்டு விட்டது. அதனல் ஒருவருக்கொருவர் சன்மானங்கள் அனுப்பிக்கொள்வது மேற்பட்டு விட்டது. இங்நிலைமையில் ஹஸ்ரத் உம்முகுல்தூம் (கலீபாவின் மனைவியார்) ஒரு தடவை ரூம் அதிபதிக்கு சில அத்தர் பாட்டல்களை அனுப்பி வைத்தார்கள். கைஸரானவர் அப்பாட்டல்களில் இரத்தினதிகளை நிரப்பி அனுப்பி வைத்தார். ஹஸ்ரத் அவர்கள் இதை வாங்கி அத்தருக்குப் பகரமாக பெண் சாதியிடம் கொஞ்ச இரத்தினத்தைக் கொடுத்துவிட்டு அத்தர்கொண்டுபோன ஆளுக்கு (பைத்துல்மால்) பொது பண்டிலிருந்து சம்பளம் கொடுக்கப்படுவதால் மீதமுள்ள இரத்தினதிகளை பைத்துல் மாலில்சேர்த்துக்கொள்வதாகக் கூறிவிட்டு அவ்வாறே செய்தார்கள்.

சிங்கை சந்தா நேயர்கட்கு!

அவ்விடத்திலுள்ள நமது சந்தா நேயர்களில் 921, 692, 922, 932, 937, 995, 936, 938, 939, 699, 1244, 1246, 1528, 1861 நெ. சந்தாதார்கள் தங்களுடைய சந்தாக்களை நமது சிங்கை ஏஜெண்டு ஜனப் மு. முஹம்மது ஷரீப் அவர்களிடம் கொடுத்திருக்கின்ருர்கள். இதுபோல் இதர சந்தாதார்களும் தாமிதமின்றி தங்கள் சந்தாக்களைச் செலுத்தி நம் அரும் மாசிகையை அன்போடு ஆதரிப்பார்களென்று எதிர்பார்க்கின்றோம்.

A. R. A., மானேஜர்.

சாத்தன் குளம் மகாநாடும், தா. இ. யும்

தா. இ. சாத்தன் குளம் மகாநாட்டைத் திரித்துக் கூறுவதேன் ?

தமது காதியானிப் பிரசாரத்திற்கு ஆபத்து வந்துவிட்டதைப் பயந்தா ?

தா. இ. யின் கபோதி நிருபருக்கு தக்கவாயாப்பு.

தாருல் இஸ்லாத்தின் திப்ய பிரசாரத்தின் பயனைச் சாத்தன் குளத்தில் காதியானிக் கொள்கை பரவி, அங்குள்ள ஒரு சில வழிகேடர்கள் உலகரட்சகர் காத்தமந் நபிய்யின் (ஸல்.) அவர்களுக்குப் பின் ஒரு பொய்யனை நபி என்று கூறியதோடு, முஸ்லிம் மகாஜனங்களுக்குப் பின் நின்று தொழுவதுங் கூடாதெனக் கருதி, தங்களுக்கென ஒரு தனி இடத்தையும் ஏற்படுத்திக் கொண்டிருப்பது யாவருமறிந்ததே. இன்னோரை அவ்வழி கேடான கெட்ட கொள்கையை விட்டுச் சன்மார்க்கத்தின் பக்கல் அழைப்பான் வேண்டி, மார்க்கஅபிமானங் கொண்ட முஸ்லிம்கள் தக்க முயற்சியோடு பிரபல உலமாக்களின் மகாநாடொன்றை சாத்தன் குளத்தில் கூட்டி, காதியானிகளை விவாதத்திற் கழைத்தபோது அன்னோர் பதுங்கி விட்டதும், அதன்பின் உலமாக்கள் மூலம் கானியானிக் கொள்கையின் கெடுதிகளை மகாஜனங்கள் யாவரு மறிந்து கொண்டு அக்கெட்ட கொள்கையுடைய காதியானிகளுடன் முஸ்லிம்கள் எவ்வாறு மார்க்க சம்பந்தம் வைத்துக் கொள்ள வேண்டு மென்பதை தீர்மானிக்க 1-7-32ஐ குறிப்பிட்டிருந்தன வென்பது உலகறிந்த இரகசியமாகும்.

இதற்கிடையில் தா. இ. அபிமானிகளாயுள்ள ஒரு சிலர் மகாநாடு நடைபெறாது செய்வதற்கான பலவாறான சூக்ஷிப் புரிந்து பார்த்தும், யாதொரு பயனு மேற்படாது 1-7-32-ல் கூட்டம் தக்க முறையில் நடைபெற்ற விபரத்தை நம் ஸை. இ. வாசகர்கள் நன்கறிவர். இந்நிலைமையில் தா. இ. தன் பொறாமை குணத்தாலும், தம்மை ஆதரிப்போரின் பிரயாசை எல்லாம் விழலுக் கிறைத்த நீர் போலாய் விட்டதைக் கருதியும் மனப்புழுக்கங் கொண்டு "முஸ்லிம்களைக் காபிராக்கும் மகாநாடென்று" மகுடமிட்டு வாயில் வந்தவைகளை யெல்லாம் உண்மைக்கு மாறாகத்திரித்தும் புரட்டியும் பேனா முனை தேயத்தேய வரைந்து குளறிக்கொட்டியிருக்கின்றது. எதற்காக இத்தனை பொறாமை! தன் காதியானிக் கொள்கை பறக்கடிக்கப் படுகிறதை பயந்தா? அன்றி தம்மை ஆதரிப்போரின் வாலறுக்கப் பட்டுப்போகிற தென்பதற்காகவா ?

அம்மஹா நாடு விஷயமாய் தா. இ. தம் 8-7-32 இதழில்

> 1-7-32ல் நடந்த கூட்டத்திற்கு அயலூர்களிலிருந்து ஏராளமான ஜனங்கள் வருவார்களென எதிர்பார்த்ததாயும், முன் நடந்த மகாநாட்டைவிட அதிகமான கூட்டம் வருமென பலரும் பேசிக்கொண்டனரென்றும், சுன்னிகள் கூட்டத்தைச் சார்ந்த சிலர் அஹ்மதிகளை உலகிலே இல்லாது செய்து விடப்போகின்றன ரென்றும் ஜம்பம் பேசிக் கொண்டன ரென்றும்...

ஏதேதோ உளறிக் கொட்டியிருக்கின்றது. இது என்ன ஆச்சரியம்! என்ன விந்தை!! 24-4-32-ல் நடைபெற்ற மகாநாட்டிற்கு அயலூர் உள்ளூர் வாசிகள் யாவரும் வரும்படி ஏராளமான துண்டு நோட்டீஸ்கள், போஸ்டல் மூலம் அறிவிக்கப்பட்டிருந்தது ; அதனால் அயலூர் வாசிகளில் சுமார் 3000 பேர் விஜயஞ் செய்திருந்தனர். ஆனால் 1-7-32-ல் உள்ளூர் வாசிகள் தங்களுக்குள் ஒரு ஒப்பந்தஞ் செய்து கொள்ள ஏற்பாடு செய்திருந்த கூட்டத்திற்கு, அயலூர் வாசிகளில் யாரையும் அழைக்காதிருக்கும் நிலைமையில் முன்னைவிட அதிகம் பேர் வருவார்களென்று பலரும் பேசிக் கொண்டதாகக் கூறுவது எவ்வளவு தூரம் பொறுத்தமுள்ளதாக யிருக்கிறதென்பதை நேயர்களே யூகிக்கக்கடவர். இதுவெல்லாம் யாரை ஏமாற்றுவதற்காக வென்பதுதான் விளங்கவில்லை. எனவே இவை

எல்லாம், பலசூக்ஷிகள் செய்து பார்த்தும் யாதொன்றும் பலியாது மன சஞ்சலமடைந்து உட்கார்ந்திருக்கும் தமது அபிமானிகளை சந்தோஷப் படுத்தி உற்சாக மூட்டுவதற்குக் கையாளும் தந்திரமே யன்றி வேறில்லை என்பது திண்ணம்.

24-4-32-ல் நடைபெற்ற மகா நாட்டிலும் பிறகு நடந்த உலமாக்களின் பிரசங்கங்களிலும், கடாவப்பட்ட வினாக்களுக்கு விடையளிக்க வகை அறியாது புறங்காட்டி ஓடிப் பதுங்கிக் கொண்ட காதியானிகள், 1-7-32-உ மகாநாட்டிற்கும் உலமாக்கள் வந்து விடுவார்களோவென அஞ்சி காயல்வாசிகள் வரக்கூடாது; அயலூர் வாசிகள் வாடை அடிக்கக் கூடாதென போலீஸ் அதிகாரிகளுக்கு பற்பலவாறான மனுக்கள் செய்து கொண்டதேனோ? இவ்வாறான சூக்ஷிகளினாலெல்லாம் பொது ஜனங்களின் மனதில் பயத்தை உண்டு பண்ணி கூட்டத்தை நடைபெறாது செய்து விடலாமென்று பகற்கனவு கண்டனர் போலும். இக்காரியத்திற்கு இங்குள்ள அஹ்மதியரல்லாத—அஹ்மதிகளை சபோர்ட் செய்யும் தா. இ. பிரசாரத்தால் வழிகெட்ட ஒரு சிலரும் உடந்தையாக யிருந்தனர். கடைசியாக இன்னோரின் சூக்ஷிகளும் பலியாது இவர்களும் மூலையில் பதுங்கி உட்கார்ந்து விட்டனர்.

தவிர காதியானிகள் குத்பாப்பள்ளி ஜமாஅத்தார்களுக்கு எழுதிய கடிதத்திற்குப் பதிலாக நீங்கள் ஜமாஅத்தை விட்டுப் பிரிந்திருந்து கொள்ளலாமென தெரிவித்தும், 29-6-32-ல் A. S. P. அவர்கள் ஜமாஅத்திலுள்ள சிலரை அழைத்து அஹ்மதிகள் விஷயமாய் உங்களுக்கு என்ன ஆக்ஷேபனையெனக் கேட்டபொழுது அவர்கள் (காதியானிகள்) வேறாக யிருந்து கொள்வதைப்பற்றி எங்களுக்கு யாதொரு ஆக்ஷேபனையுமில்லை என உயரிய நோக்கத்தோடு பதில் சொல்லி மிருக்கும்போது, "ஸுன்னிகள் கூட்டத்தைச் சார்ந்த சிலர் அஹ்மதிகளை உலகிலேயே இல்லாது செய்து விடப் போவதாய் ஜம்பம் பேசிக்கொண்டனர்" என்று உண்மைக்கு மாறாய் வியாசம் வரைந்தனுப்பியது, தா. இ. நிருபரின் விஷமத்தன மன்றோ? ஒருக்கால் ஊமையர்கள் கூடி அவ்வாறு பேசிக்கொண்டிருந்ததை இந்த செவிட்டு நிருபர் கேட்டு தமது மொண்டிக்கையால் இவ்வாறாக வியாசம் வரைந்தனுப்பிவிட்டார் போலும்,

மேலும் தா. இ. யில்,

> A. S. P. அஹ்மதிகளை நோக்கி "இன்று கூட்டமாக யிருப்பதால் வழக்கம்போல் நீங்கள் பள்ளிக்குப் போகவேண்டாம். போனால் ஒரு சமயம் கலம் வந்தாலும் வரும். எனவே இன்று மட்டும் பள்ளிக்குப்போய் தொழாதிருத்தல் நலமென்று கூறவே, அஹ்மதி—காதியானிகள் அதற்கிணங்கிக் கொண்டு வந்துவிட்டனர்.

என்று உண்மைக்கு மாற்றமாய் நிருபர் அண்டப் புளுகை மண்டத்தில் பரத்தி உளருகின்றார். இவ்வுளறுதலால் காதியானிகளும் தொழுகையை சுன்னத் வல்ஜமாஅத்தார்களின் பள்ளியில்தான் நிறைவேற்றி வருகின்றார்களென்று நிரூபிக்க முற்படுகின்றார் போலும். என்னே! இந்நிருபரின் மதியீனம். இவ்வபாண்டக் கூற்றுக்களெல்லாம் கவைக்கு நிற்குமா வென்பதை இன்னோர் உணரக் கடவர். தவிர காதியானிகள் 1-7-32-ல் இன்று ஜும்ஆவுக்குத் தாங்களும் பள்ளிக்குப்போக அனுமதி வேண்டுமென்று A. S. P. அவர்களிடம் முறையிட்டுக் கொண்ட பொழுது "ஆறுமாத காலமாய் நீங்கள் ஜும்ஆ முதலிய தொழுகைகளை எந்த இடத்தில் நடத்தி வருகிறீர்களோ அதே இடத்தில் நடத்திக் கொள்ளுங்கள்; சுன்னத் வல்ஜமாஅத்தார்களின் பள்ளியில் உங்களுக்கு பாத்தியதையிருக்கிறதென்றால் "ஸிவில்" கோர்ட் மூலியமாய் உங்கள் பாத்தியதைகளை அடைந்து கொள்ளுங்களென்று எச்சரித்தனுப்பியது அந்நிருபருக்குத் தெரியாது போலும். அது சமயம் அவர் கைம்மாறு பெற்றுவரச் சென்றிருந்தார்போலும். என்னே இந்நிருபரின் பித்தலாட்டம்? இவர் ஒரு பக்கல் கிடக்கட்டும். ஒவ்வொரு உண்மை நிகழ்ச்சிகளையும் மறுத்து கொட்டேஷனுக்குள் குறிப்பு வரையும் ஆசியருங்கூட இந்த இடத்தில் தூங்கிவிட்டதுதான் பேராச்சரியமாகும். ஈதெல்லாம் யார் கண்ணில் மண்போட? இதுவெல்லாம் காதியானிகளை சப்போர்ட் பண்ணுவதற்குக் கையாளும் சூட்சிகளல்லவா? இதனை தா. இ. ஆசிரியர் தெரிந்துகொள்ளாது போனதேனோ?

மேலும் தா. இ.

> 1-7-32 ஜும்ஆ கூட்டத்தில் 160 பெயர் கையெழுத்திட்ட இக்ரார்நாமா வாசிக்கப்பட்ட பின்னர் கொளும்பிலுள்ள சில ஆசாமிகள் ......, ஜனும் மு. அ. மீ. அசன் மீரா முஹையித்தீன் சாஹிப் அவர்களும் மற்றுஞ் சிலரும் சேர்ந்து கொடுத்த தந்தியை ஆதரிப்பதாயும், இன்னும் சிலர் காதியானிகளை பஹிஷ்காரஞ் செய்யும் எவ்விதத் தீர்மானங்களும் தங்களைக் கட்டுப் படுத்தாது என்றும் சுமார் 300 பேர்களுக்கு மேல் கைஎழுத்திட்டு அனுப்பிய தந்திகளும் அ. மு. ஆதம் சாஹிப் என்பவரின் தூண்டுதலின் மீது வாசிக்கப்பட்டன.

எனவறைந்து, அதற்குப் பின் “ஜனுப் மு. அ. மீ. அவர்கள் தலைமையில் 215 பெயர் கைச் சாத்திட்டனுப்பிய தந்தி படிக்கப்பட்டது. விஷயமாவது..............,,என வறைந்திருக்கின்றது. இவ்வாறு அந்நிருபரின் கூற்று முன்னுக்குப் பின் முரண்பட்டிருப்பதையும், அவரின் அண்ட ஆகாசப்புளுகையும் நண்பர்கள் நன்கு சிந்திக்கக் கடவர். ஒரு இடத்தில் 300 பேருக்கு மேல் கையெழுத்திடப்பெற்ற தந்தி படிக்கப்பட்டதென்கின்றூர்; மற்றோரிடத்தில் மு. அ. மீ. தலைமையில் 215 பேர் கைச்சாத்திட்ட தந்தியும் படிக்கப்பட்டதென்கிறூர். இவ்வாறு முன்னுக்குப் பின் விரோதமாய் உளறிக்கொட்டியிருப்பது கொண்டு அந்நிருபருக்குப் பித்தம் சிரசிலேறியிருக்குமென ஐயுறவேண்டியிருக்கின்றது. அந்தோ பரிதாபம்?

மு. அ. மீ. உள்பட 16 நபர்களை மட்டும் குறிப்பிட்டு இன்னும் 200 பேருமென்று அறிவித்த தந்தியும், மு. அ. மீ. தந்தியை ஆதரிப்பதாய் 7 நபர்கள் கொடுத்த தந்தியும், இக்ரார் நாமாவில் கை எழுத்திட்ட ஐந்து நபர்களுடைய கடிதமும் அக்கூட்டத்தில் வாசிக்கப்பட்டனவே தவிர 300 பேருக்கு மேல் கைச்சாத்திட்ட ஏதாகிலுமொரு தந்தி அந்த இடத்தில் வாசிக்கப்பட்டதா என்பதை நிரூபிக்க முன் வரும்படி அந்நிருபரை அறைகூவி அழைக்கின்றேன். (அறை கூவுதலுக்கு ஆசிரியர் முக்காடிட்டு மூலையில் பதுங்கி உட்கார்ந்து கொள்வதே போன்று இவரும் உட்கார்ந்து கொள்ளட்டும்.)

தந்தியில் 16 பெயர்களைக் குறிப்பிட்டு இன்னும் 200 பேர் என்று அறிவித்து விட்டால் அந்த 200 யும் கணக்கிட்டுக் கொள்ள முடியுமா? வேறு சிலர் தந்தியிலோ, கடிதத்திலோ தங்கள் பெயரைக் குறிப்பிட்டு இதனை ஆதரிப்பவர்கள் 1000 பேர்கள் என்று தெரிவித்து விட்டால் அதனை ஜமாஅத்தார் பொருட் படுத்துவார்களா? அதனை ஒருக்காலும் ஏந்துகொள்ள மாட்டார்களென்பது திண்ணம். ஆகவே ஜமாஅத்தார்கள், மு. அ. மீ. வின் தந்திப்படி 16 பெயர்களையும், இன்னும் மூன்று தந்திகளின்படி 7 பெயர்களையும், தபால் மூலமாகத் தெரிவித்த ஐந்து நபர்களையும் சேர்த்து ஆக 28 பெயர்களே கூட்டத்தில் நடைபெறும் தீர்மானத்திற்குக்கட்டுப்படவில்லை என்பதை முடிவு செய்தார்களென்பது ஸை. இ. வாசகர்கள் நன்கறிவர். இதுவன்றி சாத்தன் குளம் ஜமாஅத்தார்களின் மொத்தம் காதியானிகள் தவிர சுமார் 375 பெயர்களேயாகும். இதில் தற்சமயம் ஊரிலிருப்பவர்கள் சுமார் 175 பெயர்கள். பர்மா, பம்பாய், சென்னை முதலிய இடங்களில் வியாபார நிமித்தம் வசிப்பவர்கள் சுமார் 25. மீதமுள்ள சுமார் 175 பேர்கள் வியாபார நிமித்தம் சிலோன் சென்று பலபகுதிகளிலும் வதிந்துவருகின்றனர். இதில் சிலோன் பகுதிகளில் மட்டும் இக்ரார் நாமாவில் 138 பெயர்கள் கைஎழுத்திட்டு அனுப்பியிருக்கின்றனர். இந்த நிலைமையில் மு. அ. மீ. அவர்கள் தந்தியில் 16 பெயர் கைச்சாத்திட்டு, இன்னும் 200 பெயருக்குமேல் என்று வறைந்திருப்பது எத்துணை பொருத்தமற்றதென்பதை தா.இ. நிருபர் அறியாது போனமைக்கு வருந்தவேண்டியிருக்கிறது. சிலோன் பகுதிகளில் காதியானிகளுக்கு ஆதரவளிக்கும் பிரவூர் ஆசாமிகள் 200 பேர்களுங்கூட கிடைக்கமாட்டார்களாதலின் அந்த 200 பேர்களும் அயலூர் வாசிகளாகயிருக்கலாமென்றுங்கூட யூகிக்க இடமில்லாதிருக்கிறது. இஃதென்ன ஏமாற்றம்! என்ன தந்திரம்!! என்ன சூட்சி!!!

மேலும் தா. இ. யில்

> எல்லாம் வாசித்து முடிந்ததும் சென்னையில் இது சம்பந்தமாக ஓர் அக்ரிமெண்ட் தயாருகிறது; அது அடுத்த வாரத்திற்குள் வந்துவிடும் எனவே அடுத்த வாரம் பேசிக் கொள்ளலாமென்று சென்னை வாசி ஒருவர் கூறினூர். உடனே ஆதம் சாஹிப் முதலியோர் உங்களை யார் அக்ரிமெண்ட் தயார் பண்ணும்படி கூறினூர்கள். முன்னர் நீங்கள்

> தயாரித்த இக்ரார் நாமா ஊர் அனுமதியின் மீதுதான் அச்சடித்து அனுப்பினீர்களா என்று வினவியதோடு பலரும் வினவ, தக்க மறுமொழி கூற வழியறியாது என்னென்னவோ குளறிக் கொட்டினார். இறுதியாக அடுத்த வாரம் தீர்ப்புக் கூறுவோமென்று கூற, ஆதம் சாஹிபும் அவருடைய சஹாக்களும் தீர்ப்புக்கூற உங்கள் யாருக்கும் அதிகாரமில்லை. அடுத்த வாரம் ஆலோசிப்போமென்று கூறினர். கடைசியாகக் கூட்டம் கலைந்தது.

என அண்டப் புளுகரான தா. இ. நிருபர் வரைகின்றார். இந்நிருபர், கண்களிருந்தும் குருடராய்விட்டதும், காதுகளிருந்தும் செவிடராய் விட்டதுந்தான் பேராச்சரியமாகும். ஆதலின் ஆங்கு நடந்ததுதான் இன்னவை என்பதை நேயர்கள் கவனிப்பார்களாக. அதாவது:—எல்லாம் வாசித்து முடிந்ததும் பிரபல வர்த்தகர் கனம் ஆலீ ஜனாப் அ. பி. மு. ஷாஹுல் ஹமீது மரைக்காயர் அவர்கள் அஹ்மதி—காதியானிகள் விஷயமாய் உள்ளூரிலிருக்கும் நாம் யாவரும் கையெழுத்துச் செய்வதற்காக ஒரு அக்ரிமெண்ட் தயாருகிறது; அதில் அடுத்த வாரத்தில் எல்லோரிடமும் கையெழுத்து வாங்கவேண்டும். ஆதலின் மற்ற விஷயங்களை அடுத்த வாரம் முடிவு செய்துகொள்வோம் என்று கூட்டத்தில் கூறவே, ஆதம் சாஹிப் என்பார் அக்ரிமெண்டு தயார் செய்ய உங்களிடம் யார் சொன்னது? முன்னம் நீங்கள் தயார்செய்த இக்ரார் நாமாவை ஊர் அனுமதியின் பேரில்தான் நீங்கள் அச்சடித்து அனுப்பினீர்களா என்று வினவியதற்கு, ஜமாஅத்தார்கள் தக்க வாயாப்புக் கொடுத்து அவரின் அதிகப் பிரசங்கித்தனத்தை அடக்கி அனுப்பியது தா. இ. நிருபருக்குத் தெரியாது போனதேனோ? இந்நிலைமையில் தம் அபிமானிக்கு, ஜமாஅத்தாரிடத்தில் எவ்வளவு தூரம் செல்வாக்கு ஏற்பட்டிருக்கிறதென்பதை சற்றேனும் தெரிந்துகொள்ளாது தம் நிருபரின் பொய்க் கூற்றை நம்பி அபாண்டப் புளுகைத் தம் பத்திரிகையில் பிரசுரிக்க இடமளித்த பொறுப்பற்ற ஆசிரியர்மீது தான் நாம் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. கடைசியாக அடுத்த வாரம் முடிவில்லை முடிவில்லை என்று ஆதம் சாஹிபும் அவருடைய சகாக்களும் என்னென்னவோ உளறிக்கொண்டு செல்வதை அங்குள்ள உத்தியோகஸ்தர்களும் பார்த்து அன்னோரை பெரிதும் வெறுத்தார்கள். இவை அனைத்தையும் அங்கு விஜயஞ் செய்திருந்த ஸீ. ஐ. டி. உத்தியோகஸ்தர்கள் டைரி எழுதி வைத்திருக்கின்றனர்.

இஃதிவ்வாறிருக்க மாலை சுமார் 4 மணிக்கு அஹ்மதிகளும் அஹ்மதி அல்லாதாரும் A. S. P. பங்களாவுக்குச் சென்று சள சளவென்று பேசினார்களென்றும், அஹ்மதிகள் பள்ளிக்கு வந்தால் கலகங்கள் ஏற்படுமென சுன்னிகள் கூறினரென்றும், தாங்கள் அஹ்மதிகள் விஷயமாய் எவ்வித பஹிஷ்காரமும் செய்யப்போவதில்லை என உறுதி கூறினரென்றும் நிருபர் உண்மைக்கு மாற்றமாய் உளறிக் கொட்டியிருக்கின்றார். அங்கு நடைபெற்ற உண்மை நிகக்ஷிகளை நம் நண்பர்களின் பார்வைக்கு அப்படியே தருகின்றேன். அதாவது:—இரண்டு பார்ட்டிகளும் தத்தம் தாவாக்களை A. S. P. அவர்களிடம் எடுத்துக் கூறியதும் A. S. P. அவர்கள் சுன்னிகளை நோக்கி "நீங்கள் மத சம்மந்தமான எவ்வித முடிவும் செய்துகொள்வதைப் பற்றி எனக்கு எவ்வித ஆக்ஷேபனையுமில்லை. ஆனால் ஷோஷியல் "பைகாட்" செய்யவேண்டாமென்று சொன்னார்கள். அப்பால் காதியானிகளை நோக்கி, "நீங்கள் தொழுகை முதலியவைகளை ஆறுமாத காலமாக எந்த இடத்தில் நடத்தி வருகின்றீர்களோ அந்த இடத்திலேயே நடத்திக்கொள்ளுங்கள்; உங்களுக்குமஸ்ஜிதிலும் கபரஸ்தானிலும் பாத்தியதையிருந்தால் ஸிவில் கோர்ட் மூலமாக உங்களுடைய பாத்தியதைகளை ஸ்திரப்படுத்திக்கொள்ளுங்கள்; இதன்றி நீங்கள் அந்த ஸ்தலங்களில் போய் பிரவேசிக்கக் கூடாதென எச்சரிக்கை செய்தார்கள். இவைகளை எல்லாம் பொருமை குணம் படைத்த புளுகரின் நிருபர் மறைத்து இவ்விராஜதானியிலுள்ள பிரபல முஸ்லிம் பெரியார்களென்று கூறும் கண்ணியம் வாய்ந்தவர்கள் இவ்விஷயத்தில் ஒரு முடிவு செய்வார்களென்று நடுநிலைமை வகித்திருக்கும் பல முஸ்லிம் நேயர்கள் எதிர்பார்த்திருப்பதாக வரைந்திருப்பது எவ்வளவு தூரம் உண்மைக்கு முரண்பட்டிருக்கிறதென்பதை சாமான்யருங்கூட எளிதில் தெரிந்துகொள்வர். இந்நிருபரின் அண்டப்புளுகான கட்டுரையின் போக்கே போக்கு. சாத்தன் குளத்தில் நடுநிலைமை வகித்திருப்போர் இருப்பதாக தா.இ. கூறுகின்றது. இக்கூற்று

முற்றிலும் உண்மைக்கு மாற்றமாகும். சுன்னத்வல் ஜமாஅத்தார் சிறந்துவிளங்கும் இவ்வூரில் ஒருசில காதியானிகளும் அவர்களுக்கு பக்கபலமாக நிற்கும் விரல்விட்டு எண்ணத்தக்க தா. இ. அபிமானிகளில் சிலருந்தானிருக்கின்றனரென்பது பஹிரங்கமாகயிருக்க, நடுநிலைமை வகிப்போர் குறுக்கே முளைத்து விட்டதாக நிருபர் கூறுவது அவரின் அறியாமையேயாகும்.

இதுவன்றி அந்நிருபர் தம் வழைபோல் 8-7-32ல் நடைபெற்ற நடவடிக்கைகளையும் தீர்மானங்களையும் திரித்துப் புறட்டிக் கூறி என்னென்னவோ உளறிக்கொட்டியிருக்கின்றார். இவரது மௌடீகத்தைப் பார்த்து நாம் பரிதாபப்பட வேண்டியிருக்கிறது. அன்று அவ்விடம் விஜயஞ்செய்து அரும் பெரும் சொற் பெருக்காற்றிய ஜனப் மௌலானா சையத் முர்தஜா சாஹிப் பஹதூர் M. L. A, மௌலவீ ஹாஜீ S. K. ஷேக் இப்றாஹீம் சாஹிப் இவர்களது அரிய உபன்னியாசத்தையும் மார்க்கக்கட்டளைகளையும் கேட்டபின் சபையோர் மௌல்வீ ஹாஜீ சி. கா. ஷேக் இப்றாஹீம் றாவுத்தர் அவர்களை நோக்கி, "காதியானிகளுடன் நாம் அனுஷ்டிக்காமலிருக்கக்கூடிய இஸ்லாமிய சம்மந்தம் எதுவாகுமென வினவியதற்கு, அவர்கள் கூறியதாவது.

(1) அஹ்மதிகளுக்கு மஸ்ஜிதிலும் கபரஸ்தானிலும் இடமளிக்காதிருப்பது.

(2) காதியானிகளுடன் விவாக சம்பந்தம் முதலியவைகள் வைக்காதிருப்பது.

இன்னும் இவைபோன்ற காரியங்களேயாகுமென கூறவே, சபையோர் இதனை அங்கிகரித்து ஏகமனதாய்த் தீர்மானத்தை நிறைவேற்றினார்கள். இதுசமயம் தா. இ. நிருபர் டிபன் சாப்பிட வீட்டுக்குச் சென்றுவிட்டார் போலும். எனவே சாத்தன்குளத்தில் முளைத்த காதியானிகள் விஷயமாயும் அதுசம்மந்தமாக நடைபெற்ற அரும்பெரும் மகாநாடுகள் விஷயமாயும் தா. இ. பலவாறு திரித்துப் புறட்டி உண்மைக்கு மாறாக அநேக அபாண்டப்புளுகுடைய எவ்விதப் பிரயோசனமுமளிக்காத கட்டுரைகளை தமதிதழில் பொறித்து வந்தும் யாதொரு ஆக்ஷேபணையுமின்றி காதியானிகளுடன்சம்மந்தம் வைத்துக்கொள்ளக் கூடாதென்னும் தீர்மானம் நிறைவேறிவிட்டதைப் பார்த்து பொறாமைகொண்டு, வயற்றெரிச்சலின்மீது எண்ணத்தொலையாத புளுகல் மாலையை தன்னகத்தே தாங்கி வெளிவந்திருக்கிறது. இதற்குப் பின்னாகிலும் சாத்தன் குளத்தில் நடைபெற்ற கூட்டங்கள் "முஸ்லிம்களைக் காபிராக்கும் மகாநாடுகளா? அல்லது வழிகெட்ட காபிர்களை நேர்வழிக்குக்கொண்டுவரும் மகாநாடுகளா? அன்றி திறைமறைவிலிருந்து காதியானிப் பிரசாரம் செய்து வருவதைத் தடுப்பதற்குள்ள மகாநாடுகளா வென்பதை தா. இ. ஆசிரியர்கள் நன்காலோசித்துப் பார்த்து பொறாமை குணத்தால் உண்மையை மறைத்துத் திரித்துப் புறட்டிக் கூறும் தொழிலை விட்டொழித்து உண்மையைக் கூற முற்படுவார்களாக. சத்தியமே ஜெயம்பெறும். அசத்தியம் அழிந்தொழிந்துபோம் என்பது திண்ணம்! திண்ணம் !! திண்ணம் !!!

(நிருபர்)

நஞ்சிறார்கட்கு.

தழுமைத்தனத்தையே ஆண்டவன் விரும்புகின்றான்

சுல்த்தான் மஹ்மூத் கஸ்னவீ அவர்கள் இந்தியாவின்கண் ஆக்ஷி புரிந்து கொண்டிருக்குங்காலை ஓர் ஏழைக்குப் பையனொருவன் பிறந்தான். அவனது சிறுபிராயத்திலேயே எழ்மைத் தனமுடைய தாய் தந்தையர்கள் அச்சிறுவனை சுல்த்தான் அவர்களிடம் விற்றுவிட்டார்கள். சுல்த்தான் அவர்கள் அச்சிறுவனுக்கு "மலிக்காஸ்" எனப் பெயரிட்டழைத்தார். அவன் புத்திசாதுர்யமும் அழகு சுவந்திரியமும் சிறந்து விளங்கியமையால் சுல்த்தான் அவர்கள் அச் சிறுவன்மீது அதிகப்பிரீதி கொள்ளலானார்.

அரண்மனையிலுள்ளோர் யாவரும் "மலிக்காஸ்" க்கு இவ்வாறு கியாதி ஏற்பட்டுவிட்டதைக்கண்டு பொறாமைகொண்டு சுல்தானுக்கு இன்னோன்மீது ஏதாகிலும் மனவருத்தத்தை உண்டாக்கி வைத்துவிடுவதற்குள்ள ஹேதுக்களைத் தேடிக்கொண்டிருந்தனர். இந்நிலைமையில் ஒரு நாளன்று "மலிக்காஸ்" என்பான் சுல்தான் அவர்களுக்கு முன் தூங்குவதைக்கண்டு இந்த அடிமைத் தங்களுக்குமுன் மரியாதையில்லாது தூங்குகின்றான்; இது பெரும் தவறாகும்; ஆதலின் இவனை இவ்விடத்தைவிட்டு நீக்கிவிடுங்களென முறையிட்டுக்கொண்டனர். ஆனால் சுல்தான் அவர்களோ இதனை பொருட்படுத்தவில்லை. இதற்கு மாற்றமாய் சுல்தானுக்கு மலிக் காஸின்மீது நாளுக்குநாள் அளவற்ற பிரீதி ஏற்பட்டுக் கொண்டே போயிற்று. எனவே ஒரு நாளன்று "மலிக்காஸ்" என்பான் யாருக்குந் தெரியாது ஓர் சிறிய அறைக்குள் நுழைந்து தாளிட்டுக் கொண்டதை ஒரு காவலாளி கண்டுகொண்டான். மறுநாளும் அவ்வாறே செய்ததைப் பார்த்துச் சந்தேகித்து இவ்வறைக்குள் "மலிக்காஸ்" என்பான் ஏதாகிலும் விக்கிரஹம் வைத்துக்கொண்டு யாருக்குந் தெரியாது தினந்தோறும் அதனை ஆராதனை புரிந்து கொண்டிருக்கவேண்டுமென சந்தேகித்தான். இச்செய்தி பாதுஷா அவர்கள் வரை எட்டிற்று. கடைசியாக "மலிக்காஸ்" அவனது இருப்பிடத்தி லிருக்கும்போது திடும்பிரவேசமாக பாதுஷா அவர்கள் அங்கு சென்று பார்ப்பதெனத் தீர்மானமாயிற்று. அதுபோல் அவன் அங்கிருக்கும்போது பாஷா அங்கு சென்றார். மலிக்காஸ் இவரைப் பார்த்து,பாதுஷா தமதிருப்பிடமேகியமைக்குச் சந்தோஷப்பட்டு சங்கை மரியாதை செய்து பாதுஷாவுக்கும் கூடச் சென்றுள்ள மற்றும் ஏனையோர்களுக்கும் தமதிருப்பிடத்தைச் சுற்றிக் காண்பித்தான். அதுபொழுது சுல்தான் அவர்களின் பார்வை ஒரு ரூமின் மீது ஏற்பட்டு அதைத் திறந்து காண்பிக்கும்படிக் கூறினார். ஆரம்பத்தில் மலிக்காஸோ சற்று யோசித்தானாயினும் வேலையாட்கள் சயிக்கினையாக அரசருக்குத் தெரியப்படுத்தியதைப் பார்த்தபின் அந்த ரூமின் வாயலைத் திறந்துவிட்டான். பாஷா அவர்கள் அதனுட் சென்று பார்க்கும்போது கூலிவேலை செய்பவனுக்குள்ள ஒரு சட்டையும் ஒரு தடியுமிருந்தது. பாதுஷா இவைகளைக் கண்டு ஆச்சரியப்பட்டு மலிக்காஸின் பக்கல் பரிகாசமான பார்வையோடு நோக்கினார். மலிக்காஸ் என்பான் கைகட்டிக்கொண்டு "சக்ரவர்த்தி அவர்களே! என் குற்றத்தை மன்னிக்கவேண்டும். நான் ஒவ்வொருநாட் காலை மாலையிலும் இவ்விடம் வந்து இந்தச் சட்டையை அணிந்து தடியை கையிலெடுத்துக்கொண்டு என் பழைய நிலைமையை ஞாபகத்திற்குக்கொண்டு வருவது வழக்கம்" எனக் கூறினான். மலிக்காஸின் இவ்வார்த்தையைக் கேட்டவுடன் அவன் தழுமையை வெளியாக்கியதின்மீது பாதுஷாவுக்கு ஒருவித உணர்ச்சி ஏற்பட்டது. அதனால் மலிக் காஸுக்கு உயர்பதவி அளித்துத் தமது மந்திரிகளிலொருவராகச் செய்துகொண்டார். இந்த சூக்ஷியையும் மலிக்காஸ் ஜெயித்து கியாதி அடைந்துவிட்ட போதிலும் அன்னோருக்குப் பகையாளர்கள் இருந்துகொண்டேதா னிருந்தனர்.

இந்நிலையில் ஒரு நாளன்று பகைவர்களெல்லாம் ஒன்று சேர்ந்து இதுபொழுது "மலிக்காஸ்" என்பார் சக்கரவர்த்திப் பதவியை அபகரித்துக் கொள்வதற்கு முயற்சித்துக் கொண்டிருக்கின்றார் என்னும் வதந்தியைக் கிளப்பிவிட்டனர். இவ்வதந்தியை சுல்தான் அவர்கள் நம்பி அவரைத் தம் சமுகத்திற் கழைத்தார் ஆனால் மலிக்காஸோ வரமுடியாதென அறிவித்து விட்டதால், அரசருக்கு இவ்வதந்தியின் மீது நம்பிக்கை ஏற்பட்டு,மலிக்காஸின் மனதில் இவ்யோசனை அவசியம் ஏற்பட்டுத் தானிருக்க வேண்டுமென்னும் முடிவுக்கு வந்துவிட்டார். கடைசியாக அதிகாரிகளின் அபிப்பிராயப்படி மலிக்காஸின் மீது படை எடுப்பு ஏற்பட்டது ஆனால் முடிவில் சுல்தான் அவர்களின் பட்டாளங்களுக்கேதோல்விஏற்பட்டு, சுல்தான் மஹ்மூத் கஸ்னவீ அவர்களையும் மலிக் காஸ் பிடித்துக் கொண்டார். இதற்குப் பின் மலிக்காஸ் என்பார் தன்படைகளை ராஜமாளிகையின் பக்கல் திருப்பிச் சென்று பாதுஷா அவர்களை சிம்மாசனத்தின் மீது அமரச் செய்து தாம் கை கட்டினவராகக் காலில் விழுந்தார். சக்கரவர்த்தியானவர் மலிக்காஸின் நன்றி அறிதலையும் நம்பிக்கையையும் பார்த்து மெச்சி லாகூர் என்னும் பட்டணத்தை அன்னோருக்கு இனாமாகக்கொடுத்து

விட்டார். ஆகவே மலிக்காஸ் என்பார் இவ்வாறு மேன்பதவி அடைந்ததற்குக் காரணம் அவர் தன் பழய நிலைமையை நினைத்துப் பார்த்து ஒவ்வொரு காரியாதிகளிலும் ஈடுபட்டு வந்ததேயாகும் என்பதை நாம் ஒவ்வொரு நேரத்திலும் ஞாபகத்திற்குக் கொண்டுவருவோமாக.

பழக்க வழக்கத்தின் பயன்

இளஞ்சிறூர்காள்!

மானிடன் ஏதாகிலுமொரு காரியத்தை பன்முறை புரிவதினால் அது அவனது பழக்க வழக்கமாகவே ஆய்விடுகிறது. அவ்வாறு பழக்கத்தில் வந்து விடுமாயின் பிறகு அதனை விட்டு விடுவது மாபெரும் கஷ்டத்தில் வந்து முடிந்து விடுகிறது ஆதலின் ஒரு விஷயத்தை வழக்கத்திற் கொண்டு வருவது கொண்டு நலனுமுண்டு அதனால் கொடிதியு மிருக்கின்றது. எனவே நல்ல பழக்கம் உங்களுக்கு அத்தியந்த நண்பனாயும் துர்ப்பழக்கம் ஜென்ம விரோதியாகவுமாய் விடுகின்றது.

ஒரு விஷயம் பழக்கத்திற்கு வந்து அது பலப்பட்டு விடுமாயின் எவ்வகையினும் அதனை விட்டு விடுவதற்கு மனம் இடங்கொடுப்பதில்லை. நமக்கு நல்லதிர்ஷ்டமிருக்குமாயின் நமது பழக்க வழக்கங்கள் நம் வாழ்நாளின் ஒரு பாகத்தைப் பற்றிக்கொள்ளும். அவ்வாறே கெட்ட பழக்கங்களும் வாணுளின் ஒரு பாகத்தைத் தமக்குச் சொந்தமாக்கிக்கொண்டு மானிடனின் பரமசத்துருவாகவும் ஆய்விடுவது காணலாம். இது பொழுது பழக்கம் கெட்டதாயினும் நலன் தரத்தக்கதாயினும் அதனை மானிடன் பழக்கத்திற்குக் கொண்டு வருவது கொண்டு அஃது அவனது குணமாக அமைந்துவிடும் சம்பவங்களைக் குறிப்பிடுவோம். சிறூர்காள்! உங்கள் வகுப்பிலுள்ள ஒரு மாணவன் எதோ ஒரு சந்தர்ப்பத்தில் விளையாட்டாக யாரிடமாகினும் ஒரு சிகரட் வாங்கிக் குடித்து விடுகின்றான் என்று வைத்துக் கொள்ளுங்கள். அது பொழுது அவன் தமக்கு வேறு சிக்ரட் தேவையில்லை என நினைத்தபோதிலும் மறுதினமும் எவ்வாறேனும் வேறொரு சிக்ரட் குடித்து விடுகின்றான். இவ்வாறே விளையாட்டாக மூன்றாவது நான்காவது நாட்களிலும் ஒவ்வொன்றைக் குடிப்பது கொண்டு அம்மாணவனில் சிக்ரட் குடிக்கும் வழக்கம் ஏற்பட்டு அதனால் அவனையாவரும் கெட்ட பிள்ளை என்று கூற முற்படுகின்றனர். இவ்வாறே நீங்கள் சாப்பிடுவதற்குமுன் உங்கள் கைகளைக் கழுவிச் சுத்தம் செய்யும் பழக்கத்தைக் கைகொள்வீர்களாயின் சில நாட்களுக்குள் நீங்கள் நினைக்காமலும், உங்கள் மனதில் கைகழுவவேண்டு மென்னும் எண்ணம் ஏற்படாமலுமே சாப்பாட்டிற்கு முன் கை கழுவிக்கொள்ளும் பழக்கம் ஏற்பட்டு இதுவும் தானாகவே வழக்கத்திலுள்ளதாக ஆய்விடுகிறது.

ஆதலின் உங்களுக்கு அளவற்ற பிரயோசனங்களை அளிக்கவல்லதும், உங்கள் மனோ உற்சாகத்தைக் கொடுக்கக்கூடியதும், நீங்கள் சுகஜீவியாக வாழ்வதற்கு அனுகூலமானதுமாகிய பழக்க வழக்கங்களை நீங்கள் கையாளுவது உங்களுக்கு அளவற்ற பயன்தரத்தக்கவைகளாகுமன்றோ? உதாஹரணமாக, ஸ்நானஞ்செய்வது அதிகாலையி லெழுந்து பற்துலக்கிக் கைகால் சுத்தி செய்வது, குறித்த நேரத்தில் ஆண்டவனை வணக்கம் புரிவது, எழுதுவது வாசிப்பது, தேகப்பியாசம் புரிவது, இருமல் தும்மல் ஏற்படுங்கால் முகத்தை மறைத்துக் கொள்ளுவது உற்றநேரத்தில் துயில்புரிந்து அதிகாலையிலேயே எழும்புவது, முடிவாக உண்பது பருகுவது, உட்காருவது, எழும்புவது, விழிப்பது, தூங்குவது முதலியவைகளில் ஒருவகைப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டீர்களாயின் தானாகவே அக்காரியங்கள் சிரமமின்றி நடைபெற்றுக் கொண்டே போகும் நீங்கள் அதில்மனதைச் செலுத்தி பிரயாசை எடுக்க வேண்டுமென்னும் கவலை அறவே இல்லாது போய்விடும்.

எனவே கெட்ட பழக்க வழக்கங்கள் உங்களிலேற்படா திருப்பதற்காகப் பிரயாசை எடுங்கள். இதற்குச் சுளுவான வழி யாதெனில் நீங்கள் அறவே கெட்டகாரியத்தி லீடுபடாதிருப்பதேயாகும். இவ்வாறு ஆரம்பத்திலேயே கெட்ட காரியங்களிற் பிரவேசியாது நடந்துகொள்வீர்களாயின் பிறகு அது விஷயமாய் அதிகப் பிரயாசை எடுத்துக்கொள்ளவேண்டிய சிரமம் நேர்ந்து விடாது. இவ்வாறு செய்வீர்களாயின் கெட்ட காரியமென்னும் இராஜாளியின் கையில் நீங்கள் அகப்படாது தப்பித்துக்கொள்ளலாம்.

இந்நிலைமையில் தங்களிடமுள்ள பழக்க வழக்கங்களைத் தாங்கள் நாடியபொழுது

விட்டுவிட முடியுமெனக் கூறிக்கொண்டிருந்த எத்தனையோ பெயர்கள் அப்பழக்கங்கள் அவர்களது வழமையிலேற்பட்டுப் போன பின் அதனை விட்டுவிட இயலாது விழித்துக் கொண்டிருப்பதை நாம் காண்கின்றோம். இதுவன்றி அனேக நேரங்களில் பழக்க வழக்கமானது மானிடனது சக்தி எண்ணம் இவைகளையும் மிகைத்து விடுகிறதென்றால் இதைவிட மானிடனுக்கு துர்அதிர்ஷ்டம் வேறு வேண்டுமோ? இதனால் அவன் சக்தி அற்றவனாக உட்கார்ந்துவிடும்படி ஏற்பட்டு விடுகிறது.

சிறார்களே! உங்களில் ஏதாவது பழக்க வழக்கம் ஏற்படத்தான் செய்யும். ஆதலின் நீங்கள் அச்சந்தர்ப்பத்தில் துர்ப்பழக்கத்தைத் தவிர்த்து நற்பழக்கத்தைக் கைகொள்வீர்களாயின் உங்களது வருங்காலம் இனிமையாகவும் சந்தோஷத்துடனும் கழியும். இதற்கு மாற்றமாய் துர்ப்பழக்கத்தைக் கைகொள்வீர்களாயின் நீங்கள் உங்களது வாணாள் முழுவதையும் அதிலேயே போக்கி சதாகாலமும் துன்பமனுபவித்துக் கொண்டிருக்கும்படி ஏற்பட்டுவிடும்.

எனவே நீங்கள் சிறு பிராயமுடையவர்களாயிருப்பதால் உங்களினது பிற்கால வாழ்க்கையை நீங்கள் நாடியபடி செய்துகொள்ள சக்தியுடையவர்களாகயிருக்கின்றீர்கள். ஆதலின் நற்பழக்கவழக்கங்கள் உங்களது வாழ்க்கையின் பெரும்பாகத்தைக் கைப்பற்றிக் கொள்ளுமென மிகமிக எதிர்பார்க்கின்றோம். அவ்வாறே நீங்கள் சிறந்து விளங்கும்படி ஆண்டவன் கிருபை பாலிப்பானாகவும்.

சுகாதாரம்—இந்தியரின் ஆகாரம்

நாம் எடுத்துக்கொள்ளவேண்டிய ஆகாரத்தில் பின்சொல்லிய பொருள்கள் சரியான விகிதாசாரப்படி இருக்கவேண்டும். அவை யாவன: (a) கார்போ ஹைட் ரேட்டுகள் (b) ப்ரோடீன்கள் (c) கொழுப்புகள் (d) உலோகங்களும்உப்புகளும் (e) ஜலம் (f) ஜீவஸத்துப் பொருள்கள். ஒரேவித ஆகாரத்தில் மேற் சொல்லிய எல்லாப் பொருள்களும் சரியான விகிதாசாரப்படி கூடி இருப்பதரிது. பாலில் மட்டும் இவ்விதம் எல்லாப் பொருள்களும் அமைந்துநிற்கின்றன. ஆனால் எல்லா ஜனங்களும் எப்போதும் பாலைக் கொண்டே ஜீவித்திருப்பது அசாத்தியம். ஆனதுபற்றி மிஸ்ரம ஆகாரங்களினாலேயே மனிதர்கள் ஜீவிக்கவேண்டி யிருக்கிறது. இவையே அவர்கள் தேகத்திற்குப் போதுமான வலுவையும் போஷணா சக்தியையும் கொடுக்கின்றன. அரிசியும், கோதுமையும் கார்போ ஹைட்ரேட்டுகளுக்கு உதாரணம். அரிசியானது தென்னிந்தியரின் முக்கிய உணவாகும். அரிசியை நாம் எவ்வளவுக்கெவ்வளவு தீட்டுகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு அதன் ஆகாரக்குணமும் குறைகிறது. இயந்திரங்கள் தலையெடுப்பதற்குமுன், நெல் கையினாலேயேயே குத்தப்பட்டது. அப்போது அரிசியிலுள்ள ஜீவஸத்துப்பொருள்கள் யாவும் அழியாமல் அதிலேயே முழுதும் தங்கியிருந்தன. அதை நன்றாய்த் தீட்டும் போது அதை மேலே மூடிக்கொண்டிருந்த பாகம் அழிந்து, அதனால் இப்போது வங்காளத்தில் அதிகமாய்க் காணப்படும் பெரிபெரி முதலிய வியாதிகள் சம்பவிக்கின்றன. தவிர, அரிசியைக் கொதிக்கவைக்கும்போது, கஞ்சியை வடிக்கட்டிவிடுவதால், மிகுந்துள்ள அதன் ஆகாரக் குணமும் அடியோடே போய்விடுகிறது. நமது ராஜதானியிலுள்ள பட்டணங்களிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் உபயோகமற்ற பதரை ஜனங்கள் உண்ணுகிறார்களே யொழிய அரிசியை உண்கிறதில்லை.

சாதாரணமாய், வங்காளம் தவிர, வடஇந்தியாவின் மற்றபாகங்களில் ஜனங்கள் கோதுமையைச் சாப்பிடுகிறார்கள். கோதுமை நல்ல உணவு, ஆனபோதிலும் அரிசியைவிட அது சிலாக்கியமல்ல. நமது வாசகர்களுக்கு இது ஒரு புதுமையாகத் தோன்றும். ஆகிலும் சாஸ்திர விசாரணைப்படி இது வாஸ்தவம் என்று இப்போது ஏற்பட்டிருக்கிறது டாக்

டர் மக்காரிஸன் என்பவர் சொல்லுகிறதாவது "முழுக்கோதுமையில் தேகத்திற்கேற்ற ப்ரோடீன்கள் சிலதும் தகாத ப்ரோடீன்கள் அநேகமும் இருக்கின்றன. ஆனதுபற்றி, அது தகுந்த ஆகாரமல்ல". கோதுமையானது உஷ்ணத்தை உண்டாக்கக்கூடிய ஆகாரம். இது தென்னிந்தியாவின் சீதோஷ்ண ஸ்திதிக்கு ஏற்றதல்ல. கோதுமையை விட அரிசி எதனால் சிலாக்கியமென்றால் "பிராணி சாஸ்திரப்படி தேகத்திற்கு வேண்டிய ப்ரோடீன் அளவைக்கொண்டு பரிசோதித்துப் பார்த்ததில், பாலில் ப்ரோடீன் 100 ஆகவிருந்தால், அரிசியில் 88-ம், கோதுமையில் 40-ம் ஆக இருக்கின்றன". ஆனதுபற்றி தேகத்திற்கு ஒத்தபடி, கோதுமையை விட அரிசியில் அதிகப் ப்ரோடீன் இருக்கிறது. அமெரிக்காவில் வெகு காலமாக கோதுமையும் பார்லியும் பயிராக்கப்பட்டு அதிகமாக உபயோகப் படுத்தப்பட்டு வந்தபோதிலும், அரிசி, சீக்கிரம் ஜீரணமாகக் கூடியதாலும், வலுவை உண்டாக்கும் குணங்கள் அதற்கு இருப்பதாலும், அதை ஜனங்கள் அதிகமாக உபயோகப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள். "ஹெல்த் அண்டு புட் நெ. 7" என்னும் புத்தகத்தில் மிஸ்டர் ஜேம்ஸ் ஹென்றி குக் எப்.ஐ.எஸ்.ஏ. என்பவர் பின்வருமாறு எழுதுகிறார்:—"அரிசியிலுள்ள முக்கிய மணம் தேக உறுப்புகளுக்குவேண்டிய உப்புகளாலும் கொழுப்பாலும் உண்டாகிறது. இது விஷயமாகப் பார்த்தபோதிலுங்கூட, தீட்டாத அரிசி சிலாக்கியமானதென்றே சொல்ல வேண்டும். அது காரணம்பற்றியே, தேசாந்திரிகள் கீழ்நாடுகளில் சாப்பிடும்படியான அரிசியின் மணத்தை எங்கும் புகழ்ந்து பேசுகிறார்கள்". கோதுமையை உண்போர்க்கு, அவர்கள் உடலில் கல் உண்டாகிறதென்றும் அரிசி சாப்பிடுவோர்க்கு இவ் வியாதி காண்கிறதில்லை யென்றும் சொல்லப்படுகிறது. மேலும் வாய், அன்னவாஹினி, இரைப்பை முதலிய உறுப்புகளில் அழற்சி ஏற்பட்டாலும், உடலில் ஏதாகிலும் கோளாறு நேர்ந்தபோதிலும் அதற்கு அரிசி ஆகாரம் அடுத்ததென்று சொல்லப்படுகிறது. கோதுமையைவிட, அரிசி ஜடிதியில் உறிஞ்சப்படும்படியான வஸ்து, ஒரு மணிகாலத்திற்குள் அதன் ஸத்து யாவும் தேகத்தில் உறிஞ்சப்பட்டு, சீக்கிரம் வெளிவந்துவிடுகிறது. அதனால் ஜீரணக் கருவிகளுக்கும் உறிஞ்சுவதற்கான உறுப்புகளுக்கும் பூர்ணமான ஓய்வு ஏற்படுகிறது. ஆனால் கோதுமை, முதலிய தானியங்களும், பருப்பு தினுசுகளும், அநேக காய்கறிகளும் ஜீரணமாவதற்கு மூன்று முதல் ஐந்து மணி காலம் வரையில் செல்லும்.

பட்டாணிகளிலும் அவரைக் கொட்டைகளிலும் ப்ரோடீன் ரொம்ப உண்டு. ஆனதுபற்றி தீட்டாத அரிசியும், மேற்கண்ட தினுசுகளில் ஏதாகிலும் ஒன்றும் கலந்த ஆகாரம் சரியான ஆகாரமென்றே சொல்லவேண்டும். தவிர அநேகவித பருப்பு தினுசுகள் இருக்கின்றன. இவை கார்போ ஹைட்ரேட்டுகளுக்கும், ப்ரோடீன்களுக்கும் நடுத்தரமானவை. இதிலுள்ள போஷணவஸ்துக்கள் யாவும் இதன் ஸெல்லுகளில் இருக்கிறபடியால் அதை உடைப்பது கடினம்; அதனால் அதுதேகத்தில் உறிஞ்சப்படுவது கஷ்டம். துவரம்பருப்பில் ஊன் உண்டாக்கும் வஸ்துவும், எண்ணெய் அல்லது கொழுப்பும், பசை, அல்லது கார்போ ஹைட்ரேட்டுகளும், போஷண குணமுள்ள உப்புக்களும், ஜலமும் அடங்கியுள்ளன. இந்தியர் வீடுகளில் பருப்பு ஒரு தினப்படி பதார்த்தம். ஆனால் அதை ஒரு ஊன் ஆகாரமாகக் கொள்ள வேண்டுமானால், பட்டாணிக்கும், அவரைக் கொட்டைக்கும் அது அடுத்தபடி யென்றே சொல்ல வேண்டும். ஆகிலும் அரிசிசாதம் பருப்பு, நெய் இம்மூன்றும் கலந்து ஒரு போஷணையுள்ள ஆகார மென்றும், தென் இந்தியர்களில் ஒருவகுப்பினரின் ஆகாரத்தில் இவை இன்றியமையாதவை யென்பதும் யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. தேகத்திற்கு வேண்டிய ப்ரோடீன்கள் மாமிசத்திலிருந்தும் கிடைக்கும். இந்தியரின் ஆகாரத்தில் புளி வெகுவாய் உபயோகப்படுத்தப்படுகிறது இதற்குப் பழங்களின் குணங்கள் உண்டு. பழங்கள் கிடைக்காதபோது, அதற்குப் பிரதியாக இதை உபயோகப்படுத்தப் படுகிறது. "அதன் சதையில், டார்டாரிக் திராவகம் 100-க்கு 5 விகிதமும், ஸைட்ரிக் திராவகம் 100-க்கு 4 விகிதமும், மாலிக், அஸிடிக் திராவகங்களும், டார்டாரிக் ஆப் பொஷ்யம் 100-க்கு 8-ம், இன்வர்டு சர்க்கரை, 100-க்கு 25 விகித முதல் 40 விகிதமும், பிசின், பெக்டின் முதலியனவும் இருக்கின்றன. புளியங்காய் அதிகப் புளிப்பு. புளியம்

பழம் குளிர்ச்சியானது, காரமானது, ஜீரணம் செய்யக்கூடியது; மலத்தை இளகச்செய்யும் குணமுடையது. இது ஸ்கர்வி என்னும் வியாதியைத் தடுப்பதற்கும் பித்தத்தைப் போக்கடிப்பதற்கும் அடுத்தது. கொட்டைகள் துவர்ப்பு. புளியங்கொழுந்துகளும் பூக்களும் குளிர்ச்சியுடையன; பித்த ஹரி. கொட்டைகளின் மேலேயுள்ள சிகப்புத் தோலுக்குக் கொஞ்சம் இளகச்செய்யும் சக்தியுண்டு. பட்டையோ துவர்ப்பு, டானிக் மருந்துபோல் வலுவைத் தரக்கூடியது.'' (இந்தியன் மெடீரியா மெடிகா).

இந்தியர்கள் குழம்பிலும் ரஸத்திலும் உபயோகப்படுத்தும் மற்ற வஸ்துக்களாவன: மிளகாயும், மசாலாவுமே. இந்த மசாலாவில் மிளகு, மஞ்சள், வெந்தியம், ஜீரகம் தனியா முதலியன கலந்திருக்கின்றன. சிலர் கடுகு பெருங்காயம் இவற்றை நெய்யிலோ எண்ணெயிலோ பொரித்து தாளிப்பதுண்டு. இந்த வஸ்துக்களைக் குறித்து இங்கு சிறிது விஸ்தரித்து எழுதுவது அனுவசியமாகாது. மிளகாய் ஹிருதயத்திற்கு நல்லது; ஜீரணத்தைக் கொடுக்கக் கூடியது; ஜீரணகாரி; வலுவைக் கொடுக்கக்கூடியது; ஆனால் அதிக அழற்சியை உண்டுபண்ணும். ஆனதுபற்றி இதை மிதமாய் உபயோகிக்க வேண்டும். மிளகானது திராவகசம்பந்தம், காரமுள்ளது; உஷ்ணமானது; ஜீரணம் செய்யக் கூடியது. மாதவிடாயை நிறுத்தக் கூடியது; இது சமையலுக்கு உபயோகமான வஸ்து என்று பூலோக முழுதிலும் தெரிந்தவிஷயம்''. மஞ்சள் வாசனையுள்ளது, வலுவைக் கொடுக்கக் கூடியது; ஜீரணிக்கத்தக்கது. வெந்திய விதைகளை, வயிற்றுவலி, உப்பசம், சீதபேதி, வயிற்றுப்போக்கு, பசிதீபன மற்ற குன்மம், பிரஸவ ஸ்திரீகளிடம் காணும் வயிற்றுப் போக்கு, நீடித்த இருமல், கல்லீரல், மண்ணீரல்பெருத்தல், ஆகிய இவைகளுக்கு உபயோகப் படுத்தப்படுகின்றன. வெந்தியக்கீரையை சமைத்துச் சாப்பிடுவதுண்டு. இது மணமாயிருக்கும். சீரகம், "காரமுள்ளது, மணமுள்ளது, ஜீரணசக்தியுள்ள உத்தீபன வஸ்து'' தனியா "மணமுள்ளது, உத்தீபன வஸ்து, காரமுள்ளது, ஜீரணசக்தியுள்ளது, பித்தஹரி, குளிர்ச்சியுள்ளது, வலுவைக் கொடுக்கக்கூடியது, சிறுநீரை அதிகமாக வெளிப்போக்கும் தன்மையுடையது. சம்போகத்தை விருத்தி செய்யக்கூடியது.'' பச்சைக்கொத்துமல்லி, காரமுள்ளது.'' கடுகு கொஞ்சமாக உபயோகப்படுத்தினல், ஜீரண சக்தியை உண்டுபண்ணி, வாயுவைப்போக்கும். பெருங்காயம், "உத்தீபனமுள்ளது, காரமுள்ளது, இசிவைப் போக்கக்கூடியது; கபத்தை அறுத்துத் தள்ளக்கூடியது; மலத்தை இளகச் செய்யக்கூடியது. இதைப் பொரித்து உபயோகிக்க வேண்டியது'' ஆனதுபற்றி இந்த மசாலாக்கள் ஆகாரத்திற்கு மணமுண்டாக்குவதுடன் ஆகாரத்தைஜீரணிக்கும்படியும்செய்கின்றன. ஆனல் இவற்றை மிதமாய் உபயோகப்படுத்தவேண்டும். இல்லையேல், இவை இரைப்பை, குடல்கள் இவற்றின் மிருதுவான ஜவ்வுகளுக்கு அழற்சியை உண்டுபண்ணும். ஹிந்துக்களில் பெரும்பான்மையோர் உள்ளிப்பூண்டு, வெங்காயம் இவற்றை ஆகாரப் பதார்த்தங்களாக உபயோகிக் கிறார்கள். ஆனல் சில கூட்டத்தார்மட்டும் இவற்றைத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள். உள்ளிப் பூண்டு, ஒரு உத்தீபன மருந்து. காரவஸ்து, மாதவிடாயை வரச்செய்வது, வாதரோகத்தைப் போக்கடிக்கக் கூடியது. தேகத்தில் மாறுதல்களை உண்டுபண்ணக் கூடியது. இதில் மருந்துக்குணங்கள் அநேகமாகவிருந்த போதிலும், அதன் துர்நாற்றத்திற்காகவே அதை வெறுக்கப்படுகிறது போலும். வெங்காயத்தை ஒரு ஆகாரப் பதார்த்தமாகவும், ஊருகாயாகவும் உபயோகிக்கிறார்கள். உள்ளிப்பூண்டைப் போலவே இதையும் ஹிந்துக்களில் சிலர் அதன் துர்நாற்றத்திற்காகத் தள்ளுபடி செய்திருக்கிறார்கள் என்று தோன்றுகிறது. ஐக்கிய மாகாணங்களின் பப்ளிக் ஹெல்த் ஸர்விசைச்சேர்ந்த டாக்டர் டப்ளியூ. எச். ஸெப்ரல் என்பவர் நாய்களின் மேல் கொஞ்ச நாளைக்கு முன் செய்த சில ஆராய்ச்சிகளினல், நாய்களுக்கு தினம் 15-கிராமுக்கு மேற்பட்ட பச்சை வெங்காயம் அல்லது சமைத்த வெங்காயம் கொடுத்து வந்ததில், அவைகளுக்குக்கடுமையானஇரத்தமின்மை என்னும்வியாதி உண்டாயிற்றென்று ஏற்பட்டது. ஆனதுபற்றி, வெங்காயத்தை மணத்திற்காகக்கொஞ்சம் சேர்த்துக்கொள்ளலாமேயொழிய, அதை நித்தியப்படி ஆகாமாக உபயோகப் படுத்தக் கூடாது என்று தோன்றுகிறது.

அடுத்த இதழில் இந்தியர்கள் உபயோகிக்கும் பழங்கள், காய்கறிகள் இவற்றைக்குறித்தும், ஒன்றுசேராத ஆகாரங்கள் எவை என்பதைப் பறறியும் எழுதுவோம். (தொடரும்)

மாதர் பகுதி.

மேனாட்டினர் ஜோன் ஆப் ஆர்க், பிளாரென்ஸ் நைட்டிங்கேல் முதலிய வீர மாதுக்களைக்குறித்தும், ஹிந்து நண்பர்கள் ஜான்ஸீ இராணியைக் குறித்தும் அவர்களது வீரப் பராக்கிரமங்களைப் பேசி பெருமை கொள்ளும்போது, நஞ்சமூகத்திலும் இத்தகைய வீர சிரோமணிகள் இல்லாமற் போனது நமது தூர்அதிர்ஷ்ட வசமேயாகுமென முஸ்லிம் சகோதரச் சோதரிகள் எண்ணிக்கொள்வதுண்டு. எனவே நம் முஸ்லிம் சகோதர சகோதரிகளிடையே இத்தகைய எண்ணம் தோற்றுவதற்குக் காரணம் அவர்கள் இஸ்லாமிய சரிதையை நன்கு ஆராய்ச்சி செய்யாததேயாகும். இஸ்லாமிய சரித்திரத்திடையே காணப்படும் வீரப் பெண்மணிகளின் எண்ணிக்கையும் அவர்களது பராக்கிரமும் இதர பெண்களிடையே காண்பது முடியாதென்பதை இஸ்லாமிய சரித்திரம் நன்கு ருசுப்பிக்கும். வீரப் பராக்கிரமத்தில் மட்டுமென்ன? கல்வியிலும், கலைகளிலும், பரோபகாரத்திலும் சிறந்து விளங்கிய பெண்ணரசிகளிற் பலர் முஸ்லிம் உலகில் தோன்றி மறைந்துள்ளனர் எனக் கூறுவது மிகையாகா.

அரேபியாவில் ஆடவர்கள் தைரியம் வீரம் பொருந்தியவர்களாக இருந்தது போலவே பெண்களும் வீரம், தைரியம் முதலிய பராக்கிரமம் பொருந்தியவர்களாகத் திகழ்ந்தார்கள். அரபிய நாட்டில் இஸ்லாமிய சூரியன் உதிக்குமுன் ஸ்திரீகளும் யுத்தகளங்களுக்குச் சென்று சண்டையில் கலந்து வந்தனர்; காயமடைந்த சிப்பாய்களுக்குச் சிகிச்சை செய்வதிலும், குதிரைகளுக்குத் தீனி ஜலம் முதலியவை வைத்து அவைகளைப் பாதுகாப்பதிலும் யுத்தகளத்தில் கைதியாக்கப்பட்டவர்களைக் காப்பதிலும், தேசீய உணர்ச்சி நிறைந்த கீதங்களைப் பாடித் தம் கட்சியைச் சேர்ந்த சிப்பாய்களுக்கு ஊக்கமூட்டுவதிலும் அராபிய ஸ்திரீகள் ஈடுபட்டு வந்தனர்.

அரேபியாவில் இஸ்லாம் பரவியபின்னரும் சமயம் நேர்ந்தக்கால் அராபிய ஸ்திரீகள் இதே வழக்கத்தைப் பின்பற்றி நின்றார்கள். உஹுத் யுத்தத்தில் ஹஜ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் தம் திருக்கரங்களாலேயே காயமடைந்த சிப்பாய்களுக்குத் தண்ணீர்கொடுத்துதவினார்களெனக் கூறப்படுகின்றது. இரண்டாவது கலீபாவான ஹஜ்ரத் உமர் (ரலி) அவர்களுடைய காலத்தில் நேர்ந்த சண்டைகளில் இராணுவ சேனைக்குதவியாக ஸ்திரீகளும் இருந்து வந்தார்களென்றும், அந்த ஸ்திரீகள் (1) காயமடைந்த சிப்பாய்களுக்கு ஜலம் கொடுத்தல் (2) சிப்பாய்களுடைய உணவிற்கு ஏற்பாடு செய்தல் (3) இறந்து போனவர்களை நல்லடக்கம் செய்ய கப்ர்குழிகளைத் தோண்டல் (4) யுத்தகளத்தில் காயமடைந்து கிடக்கும் சிப்பாய்களை சிகிச்சை செய்யும் பகுதிக்குத் தூக்கிச் செல்லல் (5) காயமடைந்தவர்களுக்கு அவசியமான சிகிச்சைகள் செய்தல் முதலிய அலுவல்களை கவனித்து வருவதிலீடுபட்டிருந்தனர்.

குத்ஸியா, யர்மூக் யுத்தங்களில் ஆடவர்களைவிட ஸ்திரீகளுடைய ஊழியமேபெரிதும் போற்றத்தக்கதாக இருந்தது. குத்ஸியா சண்டையில் அராபிய நாட்டின் பெயர்பெற்ற கவிமாது குன்ஸா தம்முடைய ஊக்கம் நிறைந்த கவிகள் மூலம், இஸ்லாத்திற்காகத் தங்கள் உயிர்களைத்தியாகம் செய்யும்படியாக முஸ்லிம் சிப்பாய்களுக்கு ஊக்கத்தை யூட்டி வந்தார். யர்மூக் சண்டையில் ரோமர்கள் மிக்க கோபாவேசத்துடன் தாக்கியதால் முஸ்லிம் சேனை பிளவுபட்டுப்போய்விட்டது. இந்நிலைமையில் அச்சேனையை துரத்தியடித்துக்கொண்டு வந்த ரோமச்சேனைகள் முஸ்லிம் சேனையின் பின் பகுதிக்கு வந்துவிட்டனர். பின் பகுதியில் இருந்த முஸ்லிம் வீரப் பெண்மணிகள் ரோமச் சேனையைத் தாக்க ஆரம்பிக்கவே, திரும்பி ஓடிக்கொண்டிருந்த

முஸ்லிம் சிப்பாய்களுக்குப் புதிய ஊக்கமும் புத்துணர்ச்சியும் தோன்றிற்று. இப்புதிய ஊக்கத்தின் காரணமாக முஸ்லிம்கள், ரோமர்களை மீண்டும் தாக்கி வெற்றி யடைந்தார்கள்.

இந்தியாவின் சரிதையிலும் நூர்ஜிஹான் பேகம், சாந்துபீபி முதலிய முஸ்லிம் வீர மணிகள் இல்லாமற் போகவில்லை. ஆகவே குல்பஹிஷ்த் என்னும் அடிமைப் பெண்ணின் சரிதையின் சுருக்கத்தைச் சற்று இங்கு விவரிப்பாம். அலாவுத்தீன்கில்ஜீ ஒருநாள் தாம் சிம்மாசனத்தி லுட்கார்ந்துகொண்டு தமது வீரப் பராக்கிரமங்களைப் பெருமைப்படுத்திப் பேசிக்கொண்டிருந்தார். அதாவது இந்தியாவில் எந்த அரசரும் தமது படையெடுப்பை எதிர்த்து நிற்பது அசாத்தியம் என்பதாகக் கூறினார். அச்சபையி லிருந்த ஜேலார் சமஸ்தான இராஜா கணோர்தேவ், சுல்தான் அலாவுத்தீனுடைய வார்த்தைகளைச் சகிக்க முடியாதவனாய் "எந்த இராணுவம் வேண்டுமானாலும் என்கோட்டைமீது படையெடுக்கட்டும் வெற்றி கிடைக்கிறதா பார்க்கலாம்" என்பதாகக் கூறினான். இதைக் கேட்ட சுல்தான் அலாவுத்தீன் மனதிற்குள் கோபமடைந்தாரெனினும் தம்விருந்தினராக வந்துள்ள இராஜாவிடம் அச் சமயம் வெகு அன்புகாட்டி நின்றார். கணோர் தேவ் தம் இராஜ்ஜியத்திற்குத் திரும்பிச்சென்ற மூன்று மாதங்களுக்குப் பின் சுல்தான் அலாவுத்தீன் தம்முடைய அடிமைப்பெண்குல்பஹிஷ்த்தின் கீழ் ஒரு இராணுவத்தை, கணோர்தேவ் இராஜாவின் கோட்டையைக் கைப்பற்ற அனுப்பி வைத்தார். அடிமைப்பெண் ஜாலர்கோட்டையை முற்றுகைப்போட்டு வெகு பராக்கிரமத்துடன் தாக்கினாள். கணோர்தேவ் இராஜரும் இவ்வடிமைப் பெண்ணின் பராக்கிரமத்தைக்கண்டு பிரமித்து பெருமூச்சு விட்டார். எனவே குல்பஹிஷ்த் வெற்றி யடையப் போகுந் தருவாயில் திடீரென வியாதியாய் விட்டாள். இந்நோயின் காரணமாக சற்று காலதாமத மேற்படவே, கணோர்தேவ் அடிமைப்பெண் குல்பஹிஷ்த் மீது தனக்கிருந்த கோபத்தின் காரணமாக குல்பஹிஷ்தின் குமாரனைக் கொலைசெய்துவிட்டார். சில தினங்களுக்குப் பின் அரசர் அலாவுத்தீன், கமாலுத்தீன் என்ற வீரனை அனுப்பிவைத்து ஜாலர் கோட்டையைக் கைப்பற்றினார். ஒரு முஸ்லிம் அடிமைப்பெண்ணின் வீர பராக்கிரமம் இத்தகையதாகஇருந்ததெனின், முஸ்லிம் இராணிகளின் வீரத்தையும், பராக்கிரமத்தையும் விளக்கவும் வேண்டுமோ?

ஹஜ்ரத் உமர்(ரலி) அவர்களுடைய சேனை, ரோமர்களை எதிர்த்து திமிஷ்க் (டமாஸ்கஸ்) நகரை நோக்கிச் சென்றுக்கொண்டிருந்தது இச் சேனையில் உம்மு அப்பான் என்னும் மணப்பெண்ணும் அவளது கணவனும் சென்றனர். மணப்பெண் உம்மு அப்பானுக்கு விவாகமாகி சிலதினங்களேயாயிருந்தன. கல்யாணச் சமயத்தில் கையிலிட்ட மருதாணை இன்னும் மறையவில்லை. கைகளில் அணியப்பட்ட கங்கணங்கள் இன்னும் கழற்றப்படவில்லை. ஆனால் தேசாபிமான உணர்ச்சி இவ்விளம் மணப்பெண்ணை வீட்டில் தங்கவிடாது செய்துவிட்டது. இந்நிலைமையில் திமிஷ்க் நகரம் முற்றுகை போடப்படுமுன் மணப்பெண் உம்மு அப்பானின் கணவர் ரோமசேனையின் பாணத்தால் தாக்கப்பட்டு ஷஹீதாய்விட்டார். இக்கோலத்தைக் கண்ட மணப்பெண் சற்றும் கலங்கினாரில்லை. இஸ்லாத்தின் சேவையைச் செய்வதில் கண்ணாயிருந்த இவர் கணவரின் மரணத்தைப் பெரிதாகக் கருதவில்லை.கணவரை நல்லடக்கஞ் செய்யுமுன் தம்முடையமனஉணர்ச்சியை—கணவர் மீதுள்ள அன்பை பின் வருமாறு வெளியிட்டார்.

"அன்புமிக்க எனது அருமை மணாளரே! நீங்கள் ஷஹீதாக்கப்பட்டு சுவர்க்க லோகம் புகுந்துவிட்டீர்கள்; தங்களுடைய பாக்கியமே பாக்கியம்; தங்களுடைய அதிர்ஷ்டமே அதிர்ஷ்டம். மானிடனாய்ப்பிறந்த ஒவ்வொருவரும் செல்லவேண்டிய இடத்திற்குத் தாங்கள் சென்றுவிட்டீர்கள்; நம்மைச் சேர்த்து வைப்பவனும் பிரிப்பவனும் அல்லாஹ்தான்; தங்களுடைய மரணத்திற்காகக் கிறிஸ்தவர்கள் மீது நான் பழிக்குப் பழிவாங்காமல் விடேன்; என்னுடைய இம்முயற்சியில் நான் என் உயிரையுந் தியாகஞ் செய்து தங்களை நான் அதி சீக்கிரம் சந்திப்பேன்; நான் தங்களை என் முழு மனதுடன் நேசிக்கிறேன்; இனி என் உடலைத் தொடுவதற்கு ஒருவரையும் அனுமதிக்கமாட்டேன்; வாழ்நாள் முழுவதையும் அல்லாஹ்வின் சேவையில் செலவழிப்பேன்." எனக்கூறி முடித்து கணவரை நல்லடக்கம் செய்வித்தார்.

பின்னர் கவசம் பூண்டு யுத்த களத்திற்குச் சென்றபோது திமஷ்க் நகரம் தாமஸ் என்ற கிறிஸ்துவ வீரரின் ஆதிக்கத்திலிருந்தது. இவரது வீரத்தின் காரணமாக கிறிஸ்துவ சேனைகளுக்கு வெற்றிமேல் வெற்றி ஏற்பட்டு வந்தது. முஸ்லிம்கள் களைத்துப் பின்னடைந்து போய்விட்டனர். கிறிஸ்தவர்களின் சேனைகள் வெற்றிக் கொடியை கையிலேந்தியவர்களாய் யுத்தகளத்தில் நின்று கொண்டிருந்தன. இத்தருணத்தில்தான் உம்மு அப்பான் யுத்தகளத்தில் இறங்கி அம்புகளெய்தார். இவருடைய முதல் அம்பு, கிறிஸ்துவர்களின் கொடியைக் கையிலேந்தி நின்ற வீரனின் கையைத் தாக்கியதும் அவன், புயலால் கீழே சாயும் மரம்போல் திடீரெனக் கீழே விழுந்தான். அதுபொழுது கொடியைக் காக்க கிறிஸ்தவர்கள் முன்னேறிய சமயம் முஸ்லிம்களும் புத்துணர்ச்சி கொண்டவர்களாகக் கிறிஸ்துவர்களைத் தாக்க ஆரம்பித்தார்கள். இந்நிலைமையில் உம்மு அப்பான் எய்திய மற்றோரம்பு, கிறிஸ்துவப் படைத்தலைவன் தாமஸ் என்பவன் கண்ணில் பாய்ந்தது. உடனே தாமஸ் கீழே சாய்வதைக்கண்ட கிறிஸ்துவர்கள் சமாதானச் சின்னமாகிய வெள்ளைக்கொடியை உயர்த்தினார்கள். அதில் முஸ்லிம்கள் வெற்றி மாலை யணிந்தார்கள். முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட இவ்வெற்றி உம்மு அப்பானால் ஏற்பட்ட வெற்றியேயாகும். இவரில்லையேல் முஸ்லிம்கள் வெற்றியடைந்திருப்பார்களோ வென்பது சந்தேகம். அன்பர்காள்! வீரமாது சிரோன்மணி உம்மு அப்பான், முஸ்லிம்களின் இவ்வெற்றிக்கு உதவியாக இல்லாதிருந்திருப்பின் முஸ்லிம் உலக சரித்திரம் இப்போதிருப்பதைவிட வேறுவிதமாக மாறுபட்டிருக்க நேர்ந்திருக்கும். இத்தகைய வீர பராக்கிரமச் செயல்களைப் புரிந்த முஸ்லிம் வீரமாதுக்கள் இன்னும் எத்தனையோ பேர் களிருக்கின்றனர். எனவே முஸ்லிம் சகோதர சகோதரிகள் இஸ்லாமிய சரித்திரத்தைச் செவ்வனே படித்துணர்வார்களாயின் அவர்களும் தங்கள் சமூகத்தினிடையே பல ஜோன் ஆப் ஆர்க்குகளையும், பிளாரென்ஸ் நைட்டிங் கேல்களையும், ஜான்ஸி இராணிகளையும் காணக் கூடுமென்பது நிச்சயம்.

செய்தித்திரள்.

விருதுநகர்.

இந்நகர் பெரிய பள்ளிவாசலில் 22-7-32 வெள்ளிக்கிழமை ஜும்ஆத் தொழுகைக்குப் பின் சுன்னத் வல்ஜமாஅத்தார்களின் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அதில் அடியில் கண்ட தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேறியது.

(1) இந்நகர் கமாலிய்யாமுஸ்லிம் சங்கசார்பாக 22-7-32-வ மாலை 9-30க்கு பிரசங்கம் செய்வதற்காக B. தாவுதுசா, M. K. M. காதிர் முஹையித்தீன் மரைக்காயர் இவர்கள் அழைக்கப் பட்டிருப்பதை இம்மகாநாடு அழுத்தமாய்க் கண்டிப்பதுடன் அவருடைய வரவேற்பில் யாரும் கலந்து கொள்ளக்கூடாதெனத்தீர்மானிக்கின்றது.

(2) அவரது (பா-தா) கூற்றுக்கள் நம் சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென உலமாக்களால் தீர்மானிக்கப் பட்டிருப்பதால் அவர் சம்மந்தமான கூட்டங்களில் முஸ்லிம்கள் கலந்து கொள்ளக் கூடாதென தீர்மானிக்கின்றது.

புதக்குடி முஸ்லிம் சீர்திருத்தச் சங்கம்.

(பிணங் கமிட்டி.)

இப்பெயர்பூண்ட சங்கத்தினாதரவில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் முஸ்லிம் பெண்பாடசாலைக்கென பிரத்தியேகமாய் ஒரு கட்டிடம் வேண்டுமென்பதும், இதனை நடத்திவரும் சங்கத்திற்கும் ஓர் இடம் அத்தியாவசியம் என்பதும் சகோதரர்களுக்கு நன்கு தெரிந்த விஷயங்களேயாம். ஆயினும் தற்காலத்திற்குத் தேவையுள்ளவாறு சாத்தியமானவரையில் வருவாயை உண்டுபண்ணிக் கொள்ள வேண்டியப் பொறுப்பு இச்சமயம் எமதூர் சகோதரர்களின் கவனத்துக்கு இலக்காய்

நின்றுகொண்டிருக்கிறதென்பதும் மிகையாகாது. இத்தகைய சங்கங்களும், கலாசாலைகளும்காலக்கிரமத்திலே, இவைகளை ஆதரித்துவரும் உதவியாளர்களின் கவனங்களுக்கு இன்றியமையாத தொண்டாய் ஏற்படுத்திக்கொண்டு விட்டாலல்லாது, அவைகள் பிற்கால நம் சந்ததிகளுக்கு குன்றின்மேலிட்ட விளக்காய்ப் பிரகாசிக்குமென நம்ப இடந்தராது. அடுத்தடுத்துச் சிரமம்பாராதும், "அருமையும் பாரார் அவமதிப்புங்கொள்ளார் கருமமே கண்ணாயினோர்," என்ற மூதோர் வாக்குப்படி நாம் எக்காரியங்களிலும் நடக்கப்பயிற்சி பெற்றுவிட்டாலல்லாது நம் வருங்காலங்களைப் பற்றியும், நம் ஸந்ததிகளின் விர்த்தியைப்பற்றியும் கவனியாமல் அசிரத்தைக் காட்டியவர்களாவோமென்பது, மிகவும் உண்மையாகும். எனவே காலதேச வர்த்தமானங்களுக்கும், நமது மிகப்புனிதமுள்ள இஸ்லாமிய ஞானங்களுக்கும் இடையூறில்லாத நிலைமைக்கு நம் ஆண், பெண் சந்ததிகளும் நம்மால் தயாரிக்கப்பட வேண்டியது நமது கடமையேயாகும். புராதன காலத்து நம் முன்னோர்களின் சந்ததிகளாகிய நாம் இனிவரப்போகும் நமதிளைஞர்களுக்கு நம்மால் விட்டுப்போகும் திரண்ட ஐஸ்வரியம் கல்வியேயாகும். கல்வியுடைமை பொருளுடைமையென்றிரண்டு செல்வமுஞ் செல்வமெனப்படும். இல்லார் குறையிரந்து தம் முன்னர் நிற்பர்போல், தாமும் தலைவணங்கித் தாழப்பெறின் என்னும் முதுரையையுங் கவனிக்கவேண்டும். பெண்களுக்கு கல்வியா? அவர்களுக்கு ஏன் படிப்பு? அடுப்பங்கரைச் சாம்பல் என்று எள்ளிப்பேசி அவர்களைக் கேவலம் சுயம்பாகிகளாய் மட்டில் செய்துகொண்டு விட்டகாலம் இனிமுடியாதென்றே நினைத்தல் வேண்டும். நம் தாய் வர்க்கங்களாகிய அவர்களுக்கும் கல்வியும் ஞானோபதேசமும் ஆவசியமென்பதை நாம் ஒப்புக்கொண்டாகவேண்டும். அவர்களையும் மிகவும் மேன்மையுடன் நடத்திவர வேண்டும். ஆயினும் இத்தியாதி பொது ஸ்தாபனங்களுக்கெல்லாம் மூலதனமே யவசியமானதால், எம்மூரவர்கள் இவ்வுயரிய புனித கைங்கரியத்துக்கு மிகவும் உதாரக்குணத்துடன் உதவ முற்படல் வேண்டும். சகோதரர்களே! பினாங்கிலிருக்கும் நமதூர் நண்பர்களிற் பலர் இப்பொது ஊழியத்தில் மிகவும் அக்கறை காட்டி வருகிறார்களாயினும், உள்ளூரிலும் வெளியூரிலும் வசிக்கும் புதக்குடி நண்பர்களும், இவர்களுக்கு உற்சாகம் அளிப்பதுடன் தாங்களும், அவ்வாறே நடந்துவர வேண்டுமென்பதும் முக்கியமாகும். எனவே இதற்கென பினாங்கில் ஓர் தக்க கமிட்டி ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, இவ்வுத்தம கைங்கரியம் இனிது நிறைவேற எல்லாம் வல்ல அல்லாஹ் ஜல்லஷானஹு வதஆலாவின் அருளை என்றென்றும் எதிர் பார்ப்போமாக. ஆமீன்.

பேட்டை

பால்ய முஸ்லிம் சங்கம்

இச்சங்கத்தார் நமது உலக ரெட்சகர் காத்தமந்நபிய்யின் (ஸல்.) அவர்கள் இப்பூ உலகின் கண் ஜனனமான சங்கையுள்ள ரபீஉல் அவ்வல் மாதத்தின் சிறப்புக்காக சங்க சார்பில் அநேகப் பிரசுரங்களை வெளியிட்டிருக்கின்றனர். அதில் சில நமக்குக் கிடைத்திருக்கின்றன. அதன் முக்கிய பாகத்தைமட்டும் கீழே குறிப்பிடுகின்றோம். நமது தென்தேயத்தில் தோன்றியுள்ள இதரசங்கங்களும் இக்கைங்கரியத்தி லீடுபட்டு நமது உலகரெட்சகர் (ஸல்.) அவர்களின் சற்குண நல்லொழுக்கங்களைப் பொது ஜனங்கள்பால் விளக்கிக் காண்பிக்குமாயின் மிக மிக பயன் தரத்தக்கனவாகத் திகழுமெனக் கருதுகின்றோம்.

(1) முதலாவது பிரசுரத்தில் "இஸ்லாமிய தர்மம்" என்னும் மகுடத்தின்கீழ் முஸ்லிம்கள் மக்காவை விட்டு ஹிஜ்ரத் செய்து ஹபஷா தேசம் சென்ற காலை அத்தேயத்து அரசரான "நஜ்ஜாஷி" மன்னரின் முன்னிலையில் ஹஸ்ரத் ஜஅபர் (ரலி) அவர்கள் ஆற்றிய சொற்பெருக்கை நல்ல முறையில் எடுத்து விபரிக்கப்பட்டிருக்கிறது.

(2) இரண்டாவதுபிரசுரத்தில் "இஸ்லாமிய தர்மம்" என்னும் மகுடத்தின்கீழ் சையத்பின் தாயிப் என்னும் காட்டரபி தம் வாக்குறுதியை நிறைவேற்றுவான் வேண்டி தம் மின்னுயிரை தியாகஞ் செய்ய முன் வந்த பராக்கிரம விஷயத்தை நன்கு தெளிவாக்கப்பட்டிருக்கிறது.

(3) ஏழாவது பிரசுரத்தில் "ஸீக்கிய மதஸ்தாபகரின் அபிப்பிராயம்" என்னும் மகுடத்தின்கீழ் இஸ்லாத்தின் மேன்மை, திருக்குர்ஆனின் சிரேஷ்டம், நபிபெருமானார் (ஸல்)

அவர்களின் மகிமை இவைகள் நன்கு விளக்கப்பட்டிருக்கின்றன.

(4) எட்டாவது பிரசுரத்தில் "முஸ்லிம்கள் எல்லோரும் சமமானவர்களே." என்னும் மகுடத்தின்கீழ் ஜபலா என்னும் அரசன் ஒரு முஸ்லிமிடம் நடந்துகொண்ட விஷயமாய் ஹஸ்ரத் உமர் (ரலி) அவ்வரசனுக்குப் போதித்த சமத்துவக் கொள்கையை நன்கு விளக்கப் பட்டிருக்கிறது.

(5) ஒன்பதாவது பிரசுரத்தில் "ஸ்ரீ காந்தியின் அபிப்பிராயம்" என்னும் மகுடத்தின்கீழ் இஸ்லாம் பொய்மதமல்ல, நபி பெருமானாரின் குண விசேஷங்கள், இஸ்லாமிய சகோதரத்துவம் இவைகள் துலக்கப்பட்டிருக்கின்றன.

(6) பத்தாம் பிரசுரத்தில் "நபிபெருமான் அவர்களின் எளிய வாழ்க்கை" என்னும் மகுடத்தின் கீழ் எம்பிரான் (ஸல்) அவர்களின் வாழ்க்கைத் தன்மையின் ஒவ்வொரு அம்ஸங்களேயும் எடுத்துக்காட்டி, அவ்வுன்னத வாழ்க்கையை நாம் பின்பற்றி நடந்து திகழ வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

(7) பதினோருவது பிரசுரத்தில் "நபிபெருமானவர்களும் பிற மதத்தினரும்" என்னும் மகுடத்தின்கீழ் முஸ்லிம்கள் எது பொழுதும் சமாதானத்தையே நாடிக் கொண்டிருக்க வேண்டுமென்னும் பொருள்பற்றி நன்கு விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது.

முஸ்லிம் சேவாதளச் சபை

இச்சபையினரும் பல பிரசுரங்களை வெளியிட்டிருக்கின்றனர். அவைகளில் இரண்டு நம் பார்வைக்குக் கிடைத்திருக்கின்றன.

(1) பிரசுர எண் 7-ல் "அகில உலகத்திருத்தூதர் (ஸல்) அவர்கள் ஜனன தினம் 17-7-32 ஞாயிற்றுக்கிழமை வருகிறது" என்னும் மகுடத்தின் கீழ் எம்பெருமானவர்கள் இப்பூ உலகின்கண் ஜனித்ததின் காரணமாய் முழு உலகத்தையும் பீடித்திருந்த இருளானது, அகற்றப்பட்டுப் போய்விட்ட தென்பது நன்கு துலக்கப்பட்டிருக்கிறது.

(2) பிரசுர எண் 8-ல் "மௌலிது ஷரீப் ஓத வேண்டிய ஒழுக்கங்கள்" என்னும் மகுடத்தின் கீழ் மௌலிது ஷரீபை ஜனங்களுக்குத் தெரிந்த பாஷையில் சொல்வதுநன்மை பயக்கத் தக்கன வாயிருந்தபோதிலும் அரபியில் சொல்வது கொண்டும் அதன் கருத்து நிறைவேறி விடுகிறதென்னும் விஷயத்தை நன்கெடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

சிங்கப்பூர்

அகில மலாயா முஸ்லிம் மிஷனரி சுஸைட்டி
நபிகள் பிரான் திருஜனன கொண்டாட்டம்

"பவக்கடல் நடுபடு மனுப்பகுதியெல்லாம்
உவப்பொடு கரைப்படு மரக்கலம் தொத்தே
நவப்பட வதித்த நபிகள் நாயக விளக்" காய்
"துவக்க முடிவிற்கொரு சுடர் கதிரின் மிக"
[காய்.

மாபெருங் கருணையங்கடலாய், அஞ்ஞான அந்தகாரம் அகற்றியருளும் மெஞ்ஞான சுயஞ்சோதியாய், சாலோக, சாமீப, சாரூப, சாயுச்சிய பதமருள் சற்குருவாய், சர்வசராசரங் கட்கும் தாயகராய், அகிலத்தாரனைவரும் ஈடேற்றம் பெறவல்ல சம்பூர்ண இலட்சிய புருடோத்தமராய், இப்புவியின்கண் அவதரித்தெழுந்த நபிகள் திலகம் முகம்மது முஸ்தபா அஹ்மது முஜ்தபா, சல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களின் ஒப்புயர்வற்ற திரு ஜனன மஹோதய புனிதத் திருநாளானது நிகழும் ஹிஜ்ரி 1351-ம் வருடம் றபீஉல்லவ்வல் மீ பிறை 12-க்குச் சரியான ஈசவி 1932-ம் வருடம் ஜூலை மீ 16உ (15-7-32) இரவு சனிக்கிழமையானபடியால், அந்நாளை நம் திருநாளாய்க் கொண்டாடும் பொருட்டு நம் சகோதரர்கள் யாவரும் தங்கள் தங்கள் தொழிலாதிகளை நிறுத்தி (வியாபாரங்களை மூடி) சிங்கை (ராஜஸ்தஹ) மலாய் ராஜா கோட்டையில் நடைபெறும் நம்பெருமானவர்களின் மவுலிது ஷரீபு வைபவத்தில் கலந்து ஊழியத்தில் பங்கெடுத்து இஸ்லாமிய மெய்யபிமானத்தை மெய்ப்பித்து அப்பெருமானவர்களின் கிருபையை இரு லோகத்திலும் பெற்றுய்வோமாகவும்.

வைபவ நிகழ்ச்சி:—

(1) 16-7-32 (15-7-32) சனிக்கிழமை இரவு மணி 9-க்கு மவுலிது ஷரீபு ஓதல்.

(2) நபிகள்பிரான் அவர்களின் அவதாரத்தைப் பற்றிபல அறிஞர்களால் சில பாஷைகளில் பிரசங்கித்தல்.

(3) சனிக்கிழமை காலை மணி 7 முதல் 12 வரை பள்ளிக்கூட மாணவர்களுக்கு போஜனமளித்தல்.

(4) பகல் மணி 3-க்கு நபிகள் நாதரவர்களின் புகழ்பாக்களைப்பாடி ஊர்வலம் வருதல்.

இங்ஙனம்,
மவுலிது கமிட்டி.

பா. தா. வின் பகற்கனவு

காபிர்களும் சுவர்க்க ஆனந்த மடைவராம்?

(அபுல்ஹஸன் மத்ராஸீ)

சோதரீர் !

பாஞ்சாலத்தில் சமீப காலமுன் தோன்றி தம்மை நபீ என்று தாவாச் செய்து போந்த வழி கேடன் மிர்ஸா குலாம் அஹ்மத் காதியானியின் சகல வழி கெட்ட கூற்றுக்களையும் பன்முறை நம் வாசகர்களுக்கு எடுத்துக் காண்பித்திருக்கின்றோம். அதனால் அவன் தம்முடைய கூற்றுக்களில் பொய்யனாகு மென்பது நன்கு புலனாகும். எனவே இஃது உலகப் பிரசித்தி பெற்றதோர் விஷயமாகும்.

ஆகவே திருக்குர்ஆனுக்கும் ஹதீதுகளுக்கும் முற்ற முற்ற விரோதமாய் அவன் தன்னை நபி என்று தாவாச் செய்து அதிலேயே காலத்தைக் கழித்துப் போந்ததால் அவன் காபிர், முர்தத்தாய் விட்டானென்பது நமது சன்மார்க்கக் கட்டளையாகும் ஆனால் சுய நலங்கருதிய ஒரு சிலர் இன்னோனைப் பின் பற்றியிருப்பினும் உலக முஸ்லிம்கள் யாவரும் இவனைக் காபிரென்றே தீர்மானித்து விட்டனர்.

இந்நிலைமையில் தா. இ., இவ்வழி கேடனையும் இவனைப் பின் பற்றியோரையும் முஸ்லிம்களென்று கூறமுற்பட்டதன்றி அவர்கள் தான் இஸ்லாத்தின் கொள்கைகளைத் தக்க முறையில் அனுஷ்டித்து வருபவர்களென்றுங் கூறத்துணிந்து அவர்களுக்காக வக்காலத்துப் பெற்று எழுத முன் வருவது தான் விந்தைக் குறியதாகும். ஒரு சமயம் பா. தா. தாம் காதியானியல்ல; காதியானிகளைக் கண்டித்தெழுதி வருபவரென்று அறுதியிட்டு உறுதி கூறுகின்றார். மற்றொரு சமயமோ வெனில் காதியானிகளும் முஸ்லிம்கள் தானென்றும், அவர்களினது நிர்ணயங்களும் செய்கைகளும் இஸ்லாத்திற்கு முற்ற முற்ற ஒற்றமைந்ததாகவே யிருக்கிற தென்றும் வரைகின்றார். இவரது முரண்பட்ட கூற்றின் விந்தை தானென்னே? இவர் கூற்றுப்படி காதியானிகளும் முஸ்லிம் களென்றால் அவர்களை, இவர் (பா. தா.) கண்டித்து வருவதாகக் கூறுவது எதற்காக? ஈதெல்லாம் யுவர்களை ஏமாற்றுவதற்காகக் கையாளும் தந்திரங்களே யன்றி வேறில்லை என்பது யாருக்குத் தான் தெரியாதிருக்கிறது.

எம்பெருமானார் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் காலத்தில் நபித்துவத்தை அபேக்ஷித்த "அஸ்வதுல் அன்ஸீ" "முஸைலமத்துல் கத்தாப்" முதலியோர் முர்தத், காபிராய் விட்டாரென்று சமத்துவத்தூதர் (ஸல்.) அவர்களே தீர்மானித்திருக்க, மிர்ஸாவை முஸ்லிமென்று கூற இவ்வாசிரியர் முற்பட்டது, சன்மார்க்கத்தை நன்குணராக் காரணமா? அன்றி காதியானிக் கொள்கை மீது கொண்ட மோகமா? என்பதை வெளியிட முன் வரும்படி அவ் வாசிரியர்களை அறை கூவி அழைக்கின்றேன்.

சாத்தன் குளத்தில் ஒரு சிலர் காதியானி மதத்தில் சேர்ந்திருப்பதால் அவர்களை நேர் வழிக்குக் கொணர முஸ்லிம்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகள் அளவிடப்பாலதன்றோ? அம்முயற்சிகளை பா. தா. தாக்கி எழுதி வருவதோடு காதியானிகளும் பக்கா முஸ்லிம்கள் தானென்றும், அவர்களைக் காபிராக்குவதற்காக முல்லாக்கள் கிளம்பி விட்டனரென்றும் எழுதி வருகிறார். இதனால் அவர் மிர்ஸாவை நபி என்றும், ஆண்டவனால் அனுப்பப்பட்ட ரசூல் என்றும் கூறும் காதியானிகளையுங்கூட முஸ்லிம்மென்று கருதுகின்றாரென்பது நன்கு புலனாகின்றது. எனவே அவர்களை (காதியானிகளை) முஸ்லிம்களென்று குர்ஆன், ஹதீதுகளின் தக்க ஆதாரங்களைக் கொண்டு நிரூபிக்க பா. தா. வும், தா. இ. மோளியும் முன் வருவார்களாவெனக் கேழ்க்கின்றேன்.

எம்பெருமானார் காத்த முந்நபிய்யீன் (ஸல்.) அவர்கள் இறுதி நபி யென்று திருக்குர்ஆன் பஹிரங்கமாய்ப் பகர்ந்து விட்டது.

ஆதலின் உலக ரெட்சகர் ஏகத்துவத்தூதர் (ஸல்.) அவர்களுக்குப் பின் நபித்துவத்தைக் கொண்டு வாக்காடுபவன் நிஃஷயமாய்க் காபிராய் விடுகிருன் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமுளதோ? இந் நிலைமையில் நபித்தனத்தைத்தாவச்செய்த மிர்ஸாவையும், அவனைப் பின் பற்றியோர்களையும் முஸ்லிம்களென்று கூறுவது அறிவின்மையே யன்றிவேறென்ன வென்று கூறமுடியும்? ஆகவே காதியானிகளைக் கண்டித்து வருகிறேன் என்று கூறி திரை மறைவில் காதியானிக் கொள்கைகளைப் பிரசாரம் செய்துவரும் சூஃஷியின் மருமத்தை வெளிப்படுத்துவதற்காக அன்னோர்களை முன் வரும்படி அழைக்கின்றேன். இந்த லெக்ஷணத்திலுள்ள பிரசாரத்தின் இரகசியத்தை நமது யுவர்கள் நன்குணராமலில்லை.

தவிர 8-7-32-ல் வெளியான தா. இ. ல் பா. தா. வும், ஹாபிஸ் மு....வும் காபிர்களுக்கும் சுவர்க்கம் உண்டென்று நம்புவதாக வரையப்பட்டிருக்கிறது (இஃது கானியானிகளின் பழம் பாடமும், பா. தா. நாச்சியார் கோவில் சங்கத்திலிருந்து ஆரம்பத்தில் வெளியாக்கிய வழி கேட்டில் கூறப்பட்டிருந்ததும், காதியானி முஹம்மது அலியைக்காப்பியடித்து ஜவாஹிருல்புர்கான் என்னும் நூலில் வரையப் பட்டிருப்பதுமான பழம் பாடமேயாகும்) இக் கொள்கையின் தன்மை யாதென்பதைப் பற்றி அவசியம் இங்கு ஆராய்ச்சி செய்ய வேண்டியிருக்கிறது.

காபிர்களும் சுவர்க்கானந்தத்தை அடைவார்கள் என்று கூறுவது திருக்குர்ஆனுக்கு முற்றும் விரோதமானதாகும். அல்லாஹ் தஆலா கூறுவதாவது :

> நரகவாதிகள், சுவர்க்க வாசிகளைக் கூப்பிட்டு (சுவர்க்கத்தின்) பானம் அல்லது உங்களுக்கு அளிக்கப்பட்டிருப்பவைகளுள் சிலவற்றை எங்கள் மீது ஒலிக்கச் செய்யுங்களெனக் கேழ்ப்பார்கள் அதற்கவர்கள் (சுவர்க்கவாதிகள்) அவ்விரண்டையும் அல்லாஹ் தஆலா காபிர்கள் மீது நிஃஷயமாய் ஹருமாக்கி விட்டான் எனமறுமொழி கூறுவார்கள். (அல்அஃரூப்)

இது போன்ற இன்னுமெத்தனையோ திருவஸனங்கள், விசுவாஸ மற்ற காபிர்கள் மீது சுவர்க்கானந்தம் "ஹரும்" என அறிவித்திருக்கின்றது. இவைகளை எல்லாம் நன்குணராது காதியானிகள் வரைந்து வைத்திருப்பவைகளை மட்டும் பார்த்து விட்டு அவ்வாறு வியாச மெழுதிவிடுவதும், அதனைப் பிரசுரித்து விடுவதும் இஸ்லாத்திற்கே ஹானி விளைவிக்கும் செய்கையன்றோ? ஈதெல்லாம் திருக்குர்ஆனின் போதனையைத் திரித்துப் புறட்டிக் கூறும் அடாச் செய்கையல்லா? எனவே இன்னோர் திருக்குர்ஆனை மறுத்த குற்றத்திற்காளாகு வார்களென்பதில் ஐயமில்லை.

காதியானிகளால் இயற்றப் பெற்றுள்ள நூல்களை மட்டும் பார்த்து ஏமார்ந்து போய் இவ்வாறு திருக் குர்ஆனுக்கே மாற்றமாய் அக் கொள்கையைப் பின்பற்றி காபிர்களும் சுவர்க்கத்தை அடைவார்களென்று பா. தா. நம்புவது ஆச்சரியமன்று. ஆனல் குர்ஆனை மனனஞ் செய்ததாகப் பறைசாற்றும் ஹாபிஸ் என்பார், குர்ஆனின் பஹிரங்க கூற்றுக்கே நேர்முரணை இக் கொள்கையை நம்புவது தான் பேராச் சரியமாகும். இந் நிலைமையில் அவருடைய பாக்கவீப்பட்டம் பறிமுதல்ஆய்விட்டதேபோல் குர்ஆன் பாடமும் அவரை விட்டு உறியப்பட்டுப்போய்விட்டதோ வென்று சந்தேகிக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறு சன்மார்க்கத்திற்கு முற்ற முற்றத் தவருன கொள்கைகளை வெளியிட்டு மார்க்கத்திற்குத் தொண்டு புரிவதாகப்பறை சாற்றுவது விந்தைக் குறியதல்லவா?

தவிர நண்பர் பா. தா., அபுல் ஹஸன் மத்ராஸீ என்பவர் அநாமதேயப் பெயர் வழி என்றும், அபூஜஹ்ல் என்றும் கூறுகின்ருர். அவ்வாறு அநாமதேயப் பேர் வழிகளின் புனைப் பெயர் சூட்டி அழுக்காறு கொண்டுள்ள அண்டப்புளுகுகளை வெளியிடுவது தம் தொழில் என்பதை அவர் மறந்து விட்டது தான் விந்தைக் குறியதாகும். அபுல் ஹஸன் என்பவர் பா. தா. வின்கொட்டத்தைஅடக்கி ஜெயக் கொடி நாட்டிய அன்பரென்பதை அன்னோருக் கறிவித்துக் கொடுக்கின்றேன். இனியாகிலும் பா. தா. இவ்வாருன உள்றுதலை விட்டொழித்து உண்மையைக் கைபிடிக்க முற்படுவாராக.

பா. தா. கோட்டார் விஜயமும், பரிதாப நிலைமையும்

தென்னிந்தியாவில் கோட்டார் நகர் இளங்கடை, நம் சுத்த சத்திய இஸ்லாம் மார்க்கக் கல்வி ஞானமுதிர்ந்த மஷாயிகு மார்களும் ஆலிம்களும், பெரியார்களும் வதியும் கியாதி பெற்ற நகரென்பதை நேயர்கள் நன்கறிவர். இத்துணை விழுமிய சீரும் சிறப்பும் மிளிரும் இந்நகரில், மார்க்க முரணான வழி கெட்ட காதியானிப் பிரசாரஞ் செய்து வரும் பா. தாவுத்சா தாம்விஜயஞ் செய்து 'பிரசங்கஞ் செய்து விட்டேன்' என தென்னிந்திய மக்களுக்குப்பெருமையாகஅறிவித்து விடவேண்டுமென்ற நோக்கத்தை உள்ளத்தில் சுமந்து, அவரது மாறுபட்ட கொள்கையில் சிக்கி உழன்று அவதிப்படும் விரல்விட்டு எண்ணக் கூடிய மதிப்பற்ற ஒரு சிலரைக் கிண்டி வெகு நாளாக முயற்சி எடுத்து வந்தாரென்பதும், கோட்டார் இளங்கடை முஸ்லிம் மகாஜனங்கள் அதற்கு இடங்கொடாது தடுத்துவிரட்டி வந்தனரென்பதும் நாடறிந்த உண்மையாகும்.

இவ்வூரில் பா. தா. வின் மாயவலையில் சிக்குண்ட இளைஞர்களில் 9 பேர்கள் கூடி "தாருல்அஸ்பார்" என்னுமொரு சங்கத்தை ஏற்படுத்தியிருப்பதாக விளம்பரப்படுத்திக் கொண்டு அன்னோர்பா.தா.வின் வேண்டுகோளின்படி அவரை இங்கு எவ்விதத்திலாவது வர இடங்கொடுத்துப் பிரசங்கம் செய்யவும் ஏற்பாடு செய்து பா. தா. வின் நீண்ட கால வேண்டுகோளை நிறைவேற்றி வைக்கவேண்டுமென்று பல்வேறு சூழ்ச்சி உபாயங்களை திருட்டுத்தனமாக—மறைமுகமாகச் செய்து வந்தனர். இந்நகரில் சுமார் 3000 முஸ்லிம் மக்கள் வதிகின்றனர். அவர்களனைவரும் மார்க்க முரணான பிரசாரஞ் செய்யும் பா. தா. விற்கு விரோதிகளேயாவர். அங்ஙனமிருக்க, விரல் விட்டெண்ணக்கூடிய மார்க்கமறியா 9 பொடியர்களைத் தூண்டி அவர்களின் சங்கத்திற்கு எவ்வாற்றாலும் தம்மை அழைக்கும்படி வேண்டிக் கொண்டதற்கிணங்க, அப்பொடியர்கள் செய்துவந்த முயற்சி பலிதப்படாமற் போய்விட்டது.

தற்போது 17-7-32ல் பா.தா. திருவிதாங்கூருக்குத் தன் பூத உடலை எடுத்துச் சென்று 18-ந் தேதி இவ்வூருக்கு வருவதாக அவர் தன் குழுக்களுக்குத் தெரிவித்துக்கொண்டதை முன்னிட்டு அக்குழுக்கள் பா. தா. வை முஸ்லிம்கள் வதியும் கோட்டார் இளங்கடையில் லெக்ச்சர் செய்யும்படி இரகஸ்யமாக ஏற்பாடு செய்துவந்தனர். இதையறிந்த கோட்டார் இளங்கடை முஸ்லிம் மஹா ஜனங்கள், அதைத் தடுத்துவிட்டனர். அதன் பேரில் இப்பொடிக் குழாத்தினர் வகையற்று இவ்வூருக்கப்பால் ஒரு மைல் தூரத்தில் இருக்கும் சுமார் 20, 30 முஸ்லிம்கள் வாசஞ் செய்யும் "அரிப்பர் தெரு"விலுள்ள 4, 5 பொடியர்களைச்சேர்த்துக்கொண்டு பட்டுநூற்காரர் வசிக்கும் தெருவையடுத்த ஓர் தைக்காவில் பா. தா. வுக்கு சிறிது இடம் கொடுத்து "லெக்ச்சர்" செய்ய ஏற்பாடு செய்திருப்பதாகத் தெரிந்து, கோட்டார் இளங்கடை முஸ்லிம் மஹா ஜனங்கள் மார்க்க பக்தி மேலீட்டால் பேராத்திரம் பூண்டு கூட்டமாக "பல்பனாபுரம்" முதல் வகுப்பு மாஜிஸ்டிரேட்டிடஞ் சென்று, "பா. தாவுத்சா இஸ்லாம் மதத்திற்கே முற்றமுற்ற விரோதமாக சில ஜனங்களைக் கெடுத்து பாதாளத்துள் ஆழ்த்திவிட்டார். ஆகையால் அவர் தென் 'திருவிதாங்கூர்' எவ்விடத்திலும் வாய் திறக்கக் கூடாதென உத்தரவளிக்குமாறு கேட்டுக்கொண்டார்கள். அதற்கு கனம் மாஜிஸ்டிரேட் அவர்கள், நாகர் கோயில் சூப்ரெண்டெண்டு கனம் அழகப்ப பிள்ளை அவர்களுக்கு இவ்விஷயத்தைக் கவனிக்கும்படி ஆர்டர் அனுப்பினார். அதன் பேரில் கனம் 'சூப்ரெண்டெண்டு' அவர்கள் எங்களுக்குக் கூறிய சமாதானமாவது :—

" அவர் (பா.தா.) பேசப்போகும் இடம் முஸ்லிம்கள் வசிக்கக் கூடியதன்று; நீங்கள் வசிக்குமிடத்தை விட்டு ஒரு மைலுக்கப்பால் ஹிந்துக்கள்வசிக்குமிடமாகும். அவ்விடத்தில் அவர் பேசக்கூடாதென்று தடை செய்வது

ஞாயமென எனக்குத் தோன்றவில்லை. ஆகையால் மதத்திற்கு முரணாக எதுவும் வாயில் எடுப்பதில்லையென்று அவரிடம் "ஸ்டேட்மெண்டு" வாங்கிக் கொள்கிறேன்; நானும் அவ்விடத்திற்கு வருகிறேன்; உங்கள் ஊரிலிருந்து 4 ஆலிம்கள் அக்கூட்டத்திற்குவந்து என் சமீபத்திலிருங்கள்! பேசுகிறவர் வாயிலிருந்து எதுவும் மார்க்க முரணான வார்த்தை வருமேயானால் நீங்கள் என்னிடம் அறிவியுங்கள்! நான் உடனே அவருடைய பிரசங்கத்தை நிறுத்தி விடுகின்றேன்" எனக் கூறினர். அதை யாங்கள் ஒப்புக்கொண்டோம். அவ்வாறே பா. தா. வும் சூப்ரெண்டெண்டு துரை அவர்களிடம் மார்க்க முரணாக எதுவும் சொல்ல மாட்டேனென்று (தவ்பா மாதிரி) வாக்குறுதி செய்தார். (என்னே பா. தா. வின் யாத்திரையின் மதிப்பு? அவர் எங்கு சென்றாலும் காருண்ய கவர்ன்மெண்டார் அவரை எதிர்கொண்டே அழைக்கின்றார்கள். சிங்கையில் நடைபெற்ற காக்ஷி தானென்னே? சிலோன் பிரயாணத்தின் போது கொழும்பில் நடைபெற்ற வைபவச் சிறப்பின் போக்குத்தானென்னே? இது பொழுது தென்னாட்டுச் சுற்றுப் பிரயாணத்திலும் கவர்ன்மெண்டார் அவரை மறந்துவிடவில்லை.)

அதன்படி எங்களில் சிலர் சென்றிருந்தோம். ஆலிம்களில் நால்வரும் சூப்ரெண்டெண்டின் சமீபமாக உட்கார்ந்திருந்தனர்.

பா. தா. "லெக்ச்சர்" செய்ய வாயைத் திறந்து தம்மை ஆதரித்து வரவழைத்தவர்கள்பால் காணப்பட்ட குற்றங் குறைகளைக் கண்டித்தும், நந்தீனுல் இஸ்லாம் வாள் பலத்தால் பரத்தப்பட்டதல்ல என்பதைப்பற்றியுமே பேசி வாயை மூடிக்கொண்டார். இவர் இங்கு பேசியதுபோல் வேறிடங்களிலும் பேசியும் எழுதியும் வருவரேல், இவர்மீது எல்லாப் பொது முஸ்லிம்களும் மனவருத்தமடையக் காரணமே ஏற்படாது. ஆனால் இவர் சமயத்திற்கேற்றவாறு நேரத்திற்கோர் விதமாக தான் தப்பித்துக்கொள்ளத் தகுந்த விதத்தில் பேசும் பசப்பர் என்பதை இவ்வுலகம் நன்கறிந்திருக்கின்றது.

இதுதான் பா. தா. கோட்டார் இளங்கடையில் நுழைந்து சாதித்தது. நாங்கள் வரைந்துள்ள விஷயங்கள் சத்தியமானவும் உண்மையானவுமான விஷயமாகும்.

இப்படிக்கு

பிரசிடெண்டு

"அமானுல் இஸ்லாம் சங்கம்.

திருநபி தினக் கொண்டாட்டங்கள்

பண்டார வாடை

இவ்வூரிலுள்ள சகல பள்ளிகளிலும் ரபீஉல் அவ்வல்மீ 1உ முதல் சிறப்பாக மௌலிது ஷரீப் ஓதியும், சில இடங்களில் உபன்னியாசங்கள் நடைபெற்றும் வந்தது. 17-7-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு மத்ரஸா மாணவர்களும், சங்கத்தினரும், ஏனையோரும் பெரிய பள்ளியில் திரளாக வந்து கூடினர். அங்கிருந்து பைத்களுடன் புறப்பட்டு தெருக்களைச் சுற்றிக்கொண்டு மகாநாடு நடைபெறுவதற்காகக் குறிப்பிடப் பட்டிருந்த இடத்திற்கு வந்து கூடினர். அம்மகாநாட்டிற்கு ஜனாப் மௌலானா மௌலவீ ஷர்புத்தீன் சாஹிப் (லால் பேட்டை) தலைமை வகித்து, எம்பிரான் (ஸல்) அவர்களின் மகுத்துவங்களையும் அவர்கள் இஸ்லாத்திற்காகச் செய்த சேவைகளையும் நன்கு எடுத்துக் கூறினார்கள். பின்பு மௌலவீ முஹம்மது அப்துற்றஹீம் சாஹிப் அவர்கள் இந்நாளைச் சிறப்பாகக் கொண்டாடவேண்டிய அவசியத்தை வற்புறுத்திக் கூறினார்கள். பின்னர் ஜனாப் கோ. அ. பகீர் முஹம்மது சாஹிப் அவர்கள், மலாய்நாடு தொடுத்து நம் தென்னாடு முழுதும் இந்நாளை மிக சிறப்பாகவும் ஊக்கத்தோடும் கொண்டாடப்படுகிறது; நமதூரிலோ இது மாதிரியான கொண்டாட்டம் இவ்வாண்டில்தான் புதிதாக நடைபெறுகின்றது; அடுத்துவரும் வருஷ முதல் நாமும் இத்திருநாளைத் தக்க முறையில்

கொண்டாட வேண்டுமெனக் கூறி தலைவர் அவர்களுக்கும் மற்றும் ஏனையோர்களுக்கும் வந்தன மளித்தபின் கூட்டம் கலைந்தது. அன்றிரவு பல யிடங்களிலும் ஏழைகட்கு அன்ன மளிக்கப்பட்டது.

மதுரை

மதுரையில் ஸ்தாபிக்கப்பட் டிருக்கும் "ஹிபாஜத்துல் இஸ்லாம்" கிளைச்சங்கத்தார், நபிகள் திலகம் (ஸல்) அவர்களினது ஜனன தினத்தைக் கொண்டாட எடுத்துக்கொண்ட பிரயாசையினல், இவ்வூரிலுள்ள சகல மஹல்லாக்காரர்களும், தொண்டர் படையினரும் ஒன்று கூடி 17-7-32 ஞாயிற்றுக்கிழமைய தினம் பொதுவேலை நிறுத்தஞ் செய்து பல மஹல்லாக்களிலு மிருந்து பைத்துகள் ஓதிக் கொண்டு வைகை நதிக்கரைக்கு வந்து சேர்ந்தார்கள். அவ்விடம் அஸர் தொழுகை நிறைவேற்றப்பட்டது. சுமார் 10 ஆயிரம் பேர் விஜயஞ் செய்திருந்தனர். இவ்வூர் பிரபல வியாபாரியும் கமிஷன் ஏஜெண்டும், லாண்டு லார்டுமாகிய ஆலீ ஜனுப் கோ. அ. நா. ஷேக் மதார்ருவுத்தர் அவர்கள் சபையோர்கள் யாவரையும் வரவேற்று தலைவர்களுக்குப் புஷ்பஹாரஞ் சூட்டினுர்கள். அக்கூட்டத்திற்கு மௌலவீ முஹம்மது கனிஆலிம் சாஹிப் (ஹி. இ. கிளைச்சங்கப் பிரசிடெண்டு) அக்கிராசனம் வகித்தார்கள். ஆரம்பத்தில் ஜனுப் அப்துல் ஹமீது சாஹிப் (தாசில்தார் பள்ளிபேஷ் இமாம்) அவர்களால் கிரஅத் ஓதப்பட்டபின் அக்கிராசனரவர்கள் முகவுரையாக சில வார்த்தைகள் கூறினுர்கள். பின்னர் ஜனுப்களான மௌலவீ மீர் அம்ஜத் இப்ருஹீம் சாஹிப், டவுன் காஜீ அவர்கள், மௌலவீ முஹம்மது மியான் சாஹிப் (திண்டுக்கல்) மௌலவீ முஹம்மத் ஹஸன் சாஹிப், சின்ன காஜியார் S. A. F. இப்ருஹீம் சாஹிப் முதலானேர் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்களினது ஜீவிய சரித்திரவரலாறு, சற்குணம், தாராள சிந்தை முதலியவைகளை கேட்போர் மனம் ஆனந்த பரவசமாகுமாறு நன்கெடுத்துக் கூறினுர்கள். பின்னர் அக்கிராசனரவர்களின் நீண்ட முடிவுரைக்குப் பின்னர் 10 மணிக்கு ஆலீ ஜனுப் மீர் அம்ஜத் இப்ருஹீம் சாஹிப் அவர்களால் துஆ ஓதப்பெற்றுநடவடிக்கை முடிவு பெற்றன. பிறகு தொண்டர்படையினர் அணிவகுத்து நின்று அல்லாஹு அக்பர் என்ற முழக்கத்துடன் அவ்விடமிருந்து புறப்பட்டு பெரிய பாலத்தின் வழியாக ஆனைக்கல், பெரிய கடைவீதி சென்று பெரிய விளக்குத் தூண் மார்க்கமாகவந்து அங்கிருந்து அவரவர்கள் மஹல்லாக்களுக்கு அவரவர்களின் தொண்டர்படையினருடன் தனித்தனி ஜமாஅத்தாகச் சென்ற காக்ஷியானது யாவரின் மனதையும் கவரச் செய்திருக்கின்றது.

துக்காச்சி

நபிகள் திலகம்(ஸல்)அவர்கள் தினம் இங்கு 17-7-32-ல் தக்கமுறையில் விமரிசையாய்க் கொண்டாடப்பட்டது. இவ்வருஷத்திற்கென்றே மௌலானு சையத் சுலைமான் சாஹிப் நத்வீ அவர்களால் இயற்றப்பெற்று சென்னை ஹிபாஜத்துல் இஸ்லாம் சங்கத்தாரால் மொழி பெயர்த்து அச்சிடப்பெற்ற வீரத் பிரசங்கம் வாசிக்கப்பட்டது. எம்பிரான் ஏகத்துவத் தூதர் (ஸல்) அவர்களின் குணதிசயங்களைப்பற்றி பலரும் தக்க சொற்பெருக்காற்றிய பின் கூட்டம் இனிது கலைந்தது.

சாத்தன் குளம்

இவ்வூர் ஜும்ஆப் பள்ளிக்குத் தென்புறத்தில் அமைக்கப் பெற்றிருந்த சிங்காரப் பந்தலில் ஜனுப் நா. செ. மு. ஷேக் முஹம்மது மரைக்காயர் அவர்களின் ஆதரணையில் 17-7-32 மாலை 4 மணிக்கு மீலாத் ஷரீப் கொண்டாட்ட வைபவ மகாநாடு நடைபெற்றது. ஏராளமான ஹிந்து முஸ்லிம் கிறிஸ்தவ நண்பர்கள் விஜயஞ் செய்திருந்தனர். அம்மகா நாட்டிற்கு ஜனுப் அல்ஹாஜ் மீ. இ. முஹம்மது அப்துல் காதிர் சாஹிப் (முஸல்மான் ஆசிரியர்) அவர்கள் தலைமை வகித்து எம்பெருமானுர் சமத்துவத்தூதர் (ஸல்) அவர்களின் மகுத்துவம் பொருந்திய சற்குணம், நல்லொழுக்கம் முதலியவைகளையும் அவர்கள் தான் காத்தமுல் அன்பியாவாகயிருக்கும்; அவர்களுக்குப் பின் யாதொரு நபியுங் கிடையாதென்பதையும் மகாஜனங்களுக்கு நன்கு விளக்கிக் காண்பித்தார்கள். பின்னர் நண்பர் எஸ். எம். மொய்தீன், எம்பிரான் (ஸல்.) அவர்களது குணதிசயங்களைபற்றியும் மாணவர் மஹ்மூர், நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் ஸ்தூல சரீரத்துடன் மிஃருஜுக்குசென்றவிபரத்தையும் எடுத்துக்கூறி

அறிய சொற்பெருக்காற்றினர்கள். பின்னர் பிரபல வர்த்தகர் மெஸர்ஸ் ஆலீ ஜனப் அ. பி. மு. செய்யித் இப்றூஹிம் சாஹிப் அன் பிரதர் அவர்களினது பொருளுதவியால் தரு விக்கப்பட்டிருந்த "ஏகத்துவத்தூதர்" என்னும் நூல் ஏராளமாக யாவருக்கும் வினியோகிக்கப்பட்டது. பாத்திஹாவுக்குப் பின் சிற்றுண்டி வழங்கப்பெற்று நடவடிக்கைகள் முடிவுபெற்றன.

திருப்பந்துருத்தி.

இவ்வூரில் 16-7-32 சனிக்கிழமைப்பின்னேரம் மாலை ஏழு மணிக்கு 300 பெயர்கள் சேர்ந்து பைத் முழக்கத்துடன் தெருக்களைச் சுற்றிக்கொண்டு 10-மணிக்கு பள்ளிவாசலை வந்தடைந்தனர். அங்கு தயாரிக்கப்பெற்றிருந்த சாப்பாட்டை ஏழை முதல் யாவருக்கும் வழங்கப்பட்டது.

மறுதின மாகிய 17-7-32 மாலை 3-மணிக்கு மகாநாடு நடைபெற்றது அதுசமயம் ஹிந்து முஸ்லிம்கள் சுமார் 500 பெயர்கள் விஜயஞ் செய்திருந்தனர். அம் மகாநாட்டிற்கு நாட்டாமை ஜனப் வா. இ. பீர்முஹம்மது ரூவுத்தர் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஜனப் சே. உ. ஷேக்முகம்மத் ஆலிம் சாஹிப் எம்பெருமானார் நபிய்யகரீம் (ஸல்.) அவர்களின் புனித ஜனனத்தின் வரலாற்றை இனிதெடுத்து விளக்கிக் காட்டினர்கள். கடைசியாக சந்தனம் தாம்பூலம் வழங்கப் பெற்று கூட்டம் இனிது கலைந்தது.

ஏரல்.

முஸ்லிம் வாலிப சங்கம்.

இச் சங்கத்தின் ஆதரவில் 16-7-32 சனிக்கிழமை மாலை 4-30 க்கு பெரியமணருத்தெரு பள்ளிமுன் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் ஆசிரியர் வ. மீ. ஷம்ஸுத்தீன் சாஹிப் அவர்கள் தலைமையின்கீழ் மகாநாடு ஆரம்பமாயிற்று. அவ்வமயம் அயலூர் உள்ளூர் வாசிகளில் சுமார் 1000 ம் பெயர் விஜயஞ் செய்திருந்தனர். மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது முஹையித்தீன் ஆலிம் சாஹிப் அவர்களால் கிராஅத் ஓதப்பெற்று தலைவர் முன்னுரைப் பிரசங்கத்தில் திருநபி அவர்களின் வாழ்க்கையைப் பற்றியும் இஸ்லாத்தின் தாராளநோக்கத்தைப் பற்றியும் பேசியபின் மௌலவீ முஹம்மது இஸ்மாயில் ஆலிம் சாஹிப், மாஸ்டர் சையத் அபூதாஹிர்முதலியோர் இனிய சொற்பொழி வாற்றியபின் ஏகத்துவத்தூதர் என்னும் நூல் வினியோகிக்கப்பட்டு கூட்டம் கலைந்தது.

அதிராம்பட்டணம்.

நூருல் இஸ்லாம் சங்கம்.

17-7-32 ஞாயிற்றுக்கிழமை மாலை 4-மணிக்கு சொசைட்டியிலிருந்து நாயக வாழ்த்துப் பாக்கள் பாடிக்கொண்டு திரளான ஜனங்கள் தெருக்கள்வழியாகச் சுற்றிவந்து மக்ரிப், இஷாத் தொழுகை நிறைவேற்றப்பட்ட பின் ஏராளமான மகாஜனங்கள் விஜயஞ்செய்திருந்தனர். மௌலிது ஷரீப் ஓதி முடிந்ததும் ஆலீஜனப் ஜனப் ஏ. கே. எம். முஹம்மது அலாவுத்தீன் பஹதூர் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஜனப் உ. மு. சே. முஹம்மது சேக்காதியார் அவர்கள் திருநபி அவர்கள் இவ்வுலகின்கண் ஜனனமான விபரத்தையும், ஜனப் ஒ. மு. க. மஹ்மூத் மரைக்காயர் அவர்கள் நாயகம் (ஸல்.) அவர்களுக்கு முன் அராபியதேச மிருந்த நிலைமையையும் அதற்குப்பின் ஏற்பட்ட சீர்திருத்தங்களைப் பற்றியும், ஜனப் அ. செய்யத் முஹம்மது ஆலிம் சாஹிப் அவர்கள் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களினது சமத்துவக்கொள்கைகளைப்பற்றியும், ஜனப் இ. க. முகம்மது இஸ்மாயில் பஹதூர் அவர்கள் இஸ்லாமியப் பிரசாரம் வாளாயுதத்தால் பரத்தப்பட்டதல்ல வென்பதைப்பற்றியும் அரியசொற்பெருக்காற்றிய பின் ஜனப் நெ. மு. முஹம்மது ஹுசைன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்று நெய்ச்சாதங்கள் வழங்கப்பட்டு சபை இனிது கலைந்தது.

கூத்தாநல்லூர்.

ஈதே மீலாதே நபவிய்யீ

16-7-32 காலை 6 மணி முதல் 11 மணி வரையில் ஈதெ மீலாதெ நபவிய்யீ சபையாரால் உள்ளூர் வெளியூர்வாசிகளில் சுமார் 1500 பேர்களுக்கு விருந்தளிக்கப்பட்டது.

மறுநாள் 17ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 2 மணிக்கு மத்ரஸா 'மன்பஉல்உலா' மக்தப் மாணவர்களின் ஊர்வலம் சின்னப் பள்ளியிலிருந்து ஆரம்பமாயிற்று. மாணவர்களுடன் இதர சங்கத்தினரும் ஊர் பொது

ஜனங்களும் கலந்து கொண்டனர். மேற்குறிப்பிட்ட மாணவர்கள் அரபிகளேபோன்று உடைதரித்து ஒவ்வொரு வீதிகளின் வழியாய் "உலகதயாளர்" திரு நபி (ஸல்) அவர்கள் பேரில் இன்னிசைக் கீதங்களைப் பாடிச்சென்றது யாவரின் மனதிலும் ஒரு வகைக் கவர்ச்சியைக் கொடுத்தது. இடையிடையே யுவர்களுக்கு பல பிரபலஸ்தர்களால் தேநீரும், ஷர்பத்தும், மிட்டாய்களும் தாராளமாய் வழங்கப்பட்டன. இம்மா பெரும் மகிழ்ச்சியுடன் மாணவர்களும், தொண்டர்களும் ஏனைய சங்கத்தவர்களும், ஊர்பொது ஜனங்களுமாக சுமார் 4-30 மணிக்கு "ஈதுகாஹ்" சோலைக்குவந்து சேர்ந்தார்கள்.

அங்கு ஹிந்து முஸ்லிம் நண்பர்கள் ஏராளமாகக் குழுமியிருந்தனர். மாலை 5 மணிக்கு மகாநாடு ஆரம்பமாயிற்று. அதற்கு ஆலிஜனுப் அல்ஹாஜ் அ. ம. அப்துல்லா சாஹிப் அவர்கள் அக்கிராசனம் வகித்தார்கள். சன்மார்க்கத் தொண்டர் சபை அங்கத்தினர்களிலொருவர் திருக் குர்ஆனிலிருந்து ஒரு சில ஆயத்தை ஓதினர். கமாலியா பேட்மின்ட்டன் கிளப்பின் சார்பாக இருவர் நாயகம் (ஸல்) பிறந்த இந்நாளைப்பற்றிய புகழ்பாக்கள் பாடினர்.

பின்னர், மௌலானா மௌலவீ அல்ஹாஜ் எஸ். ஏ. முகம்மது அலீ சாஹிப் அவர்களால் நாயகத்தின் குணாதிசயங்களையும், இஸ்லாம் வாளால் பரத்தப்படவில்லை என்பதையும், இம்மகுத்துவம் பொருந்திய நாளின் சிறப்பைப்பற்றியும் ஜனங்களுக்கு நன்கெடுத்து உபதேசிக்கப்பட்டது.

பின்னர் சே. ப. முகம்மது அலீ ரூவுத்தர் அவர்கள் ஹிந்துமதத்திலுள்ள அனாசாரங்களைப்பற்றிய விபரங்களை ஜனங்களுக்கு எடுத்தியம்பினர்.

மூன்றாவதாக கனம் S. E. S. முகம்மது மைதீன் அவர்கள் "சம்பூர்ண தயாளர்" என்ற மகுடமிட்ட வியாசமொன்றை ஜனங்களுக்கு எடுத்தோதினர்.

அடுத்தபடியாக சுமார் இரண்டு வருடத்துக்கு முன் எமதூரில் சுத்தசத்திய இஸ்லாத்தைத் தழுவிய மாணர். அப்துற் றஹ்மான் என்பவரால் நாயகம் (ஸல்) அவர்கள் பிறந்த இன்னாளைப்பற்றி வெகு உருக்கமாக உபதேசிக்கப்பட்டபின் அவரது கவித்திறமையால் நாயகம் (ஸல்) அவர்களைப்பற்றியும், இன் நன்னாளைப்பற்றியும் இயற்றப்பெற்றுள்ள காவியமொன்றை எல்லோருக்கும் படித்துக் காண்பித்து ஆனந்திக்கச்செய்தார்.

பின்னர் "புளூஸ்டார் சொஸைட்டி" பிரஸிடெண்ட் கனம் அ. அ. முஹம்மது அப்துல்லா (மாணவர் பி. ஏ. வகுப்பு) அவர்கள் பிரசித்தி பெற்ற ஆராய்ச்சியாளர்களும், ஹிந்து மேதாவிகளும், பிரபல ஸயன்ஸ் நிபுணர்களும், இஸ்லாத்தையும், முகம்மது நபி (ஸல்) அவர்களையும் பற்றி கூறி இருக்கும் அபிப்பிராயங்களை புளூஸ்டார் சொஸைட்டியாரால் வெளியிடப்பட்ட "சர்வ சமரஸ சத்திய போதநாதர்" என்ற நூலிலிருந்து விளக்கிக் காட்டினர். மஃரிப் தொழுகைக்குப் பின் ஹாஜீ எஸ். ஏ. முஹம்மது அலீ ஆலிம் சாஹிப் அவர்களால் மகாநாட்டின் முடிவுரை கூறப்பட்டபின் சொற்பொழிவாற்றிய அறிஞர்களுக்கும், ஊர்வலம் நடத்தியயுவர்களுக்கும் முஸ்லிம் பெஸ்ட்டிவல் சொசைட்டி"யின் சார்பாக அ. வா. மு. முஹம்மது இப்ருஹீம் அவர்களால் உபசாரப் பத்திரமொன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது. பின்னர் சன்மார்க்கத் தொண்டர் சபையோர்களால் திருவருட் பிரகாச வள்ளலார் நபிகள் திலகம் (ஸல்) அவர்கள் பெயரால் 'ஜனனப் பிரதாபம்' என்ற கவி படிக்கப்பட்டு யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு மகாநாடு கலைவுற்றது.

அன்று ஈதெ மீலாத நபவிய்யீ சபையாரால் "ஏகத்துவத் தூதர் (ஸல்)" என்ற நூலும், கமாலியா பேட்மிண்ட்டன் கிளப்பாராலும், எஸ். ஈ. எஸ். முஹம்மது மைதீன் அவர்களாலும், "சாந்தி நபியும் ஸன்மார்க்கமும்" என்ற நூலும், புளூஸ்டார் சொஸைட்டியாரால் "சர்வ ஸமரஸ சத்தியபோதநாதர்" என்ற நூலும், சாந்தி பிரகடன சபையாரால் 'சம்பூர்ண தயாளர்' என்ற நூலும், முஸ்லிம் பெஸ்டிவல் சொஸைட்டியாரால் ஓர் உபசாரப் பத்திரமும், சன்மார்க்கத் தொண்டர் சபையாரால் ஜனனப் பிரதாபம் என்ற பாட்டுப்பிரசுரமும் ஏராளமாக ஹிந்து-முஸ்லிம் நண்பர்களுக்கு வினியோகம் செய்யப்பட்டன.

சென்னை

கடற்கரையில் திரளான கூட்டம்

எம்பெருமானார் ஏகத்துவத் தூதர் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இப்பூஉலகின் கண் ஜனனமான நந்நாளைக் கொண்டாடுவதற்காக 17-7-32 திருவல்லிக்கேணி கடற்கரைக்கு என்றும் கண்டில்லாதவிதமாய் சுமார் 30,000 க்கு அதிகமான முஸ்லீம்கள் வந்திருந்தனர். பற்பல இடங்களிலும் ஒலி பரப்பும் கருவியான உரத்த வசனி அமைக்கப்பட்டிருந்தன. சரியாக மணி 6 ஆனவுடன் மகாநாடு ஆரம்பமாயிற்று. ஆற்காடு பிரின்ஸ் அவர்கள் தலைமை வகித்தார்கள். கிரஅத் ஓதப்பட்டபின் அறிஞர்களான நூர்சாஹிப், மஹ்வீசாஹிப் முதலியோர் சபையோர்களின் மனம் கவரத்தக்க விதமாய் இனியக் குரலில் உருதுக் கவிகள் பாடினர்.

ஜனாப் ஹமீத் ஹஸன் சேட் அவர்கள் இவ்வருஷத்திற்கென்றே மௌலானா சையத் சுலைமான் சாஹிப் நத்வீ அவர்களால் இயற்றப் பெற்ற "ரசூலவஹ்தத்" (ஏகத்துவத் தூதர்) என்னும் நூலிலுள்ள சில முக்கிய பாகத்தை வாசித்துக் காண்பித்தார்கள் மக்ரிப் தொழுகைக்குப் பின் ஜனாப் அப்ஜலுல் உலமா மௌலவீ சையத் அப்துல் வஹாப் சாஹிப் புகாரீ எம். ஏ. எல். டீ. அவர்கள் எழுந்து ஆங்கிலத்தில் திருநாளின் விசேஷத்தையும் எம்பெருமானார் (ஸல்.) அவர்கள், தூய்மை வாய்ந்த இஸ்லாம் மார்க்கத்தை உலகோருக்கு இனிமையாக எடுத்து போதித்தவிதத்தையும்,பிறமதத்தினருடன் நடந்துகொண்ட பான்மையையும் விளக்கிக் காண்பித்து அவர்களின் சகிப்புத் தன்மையை எடுத்துக் கூறி யாவரும் இவ்வுத்தம குணங்களைப்பற்றிப் பூண்டு சற்குண சீலர்களாய் விளங்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்கள்.

பின்னர் மௌலவீ அல்ஹாஜ் முஹம்மது பத்ஹுல்லாஹ் சாஹிப்,மௌலவீ ஜனிசாஹிப் நிஜாமீ முதலியோர் உர்துவில் நபிகள் திலகம் (ஸல்.) அவர்களின் மகுத்துவங்களையும், அவர்களது அறிய உபதேசங்களைப்பற்றியும், இஸ்லாம் மதத்தின் மேன்மைகளைப்பற்றியும், இச்சிறப்புத் தங்கிய நந்நாள் உலக முழுதும் கொண்டாடப்பட்டு வரும் விசேஷத்தையும் நன்கு விளக்கிக் காட்டினார்கள்.

பிறகு மௌலானா மௌலவீ அஹ்மத் சயீத் சாஹிப் (ஸைபுல் இஸ்லாம் ஆசிரியர்) அவர்கள்,எம்பிரான் நபிகள் திலகம்அவர்கள் தங்களுடைய நடவடிக்கைகளைக்கொண்டே உலகத்தை சீர்திருத்தமடையச் செய்தார்களென்றும், உலகத்தாருக்கு போதித்த வண்ணமே தாங்களும் நடந்து காட்டினார்களெனவும், அவர்களது சற்குணத்தாலேயே உலகத்தைக் கைகொண்டார்களென்றும், அவர்களது ஜன்ம விரோதிகளும் அவர்களின் சத்தொழுக்கத்தைப் பார்த்து தங்கள் குரோத புத்தியை விட்டொழித்து சத்திய சீலர்களாக விளங்கினரென்றும், எம்பெருமானார் (ஸல்.) அவர்கள் தங்களுக்குக் கெடுதி செய்பவர்களுடனுங் கூட, அன்பு காட்டி பக்ஷமாக நடந்துகொள்வார்களென்றும் இவ்வுத்தம குணத்தை உலகத்தோர் யாவரும் பின்பற்றி நடப்பார்களாயின் வகுப்புப் பிரச்சினைகளும் பகைமைகளும் உண்டாவதற்கே வழியில்லை என்றும் தக்க முறையில் சபையோர்கள் மனம் கவரத்தக்கவாறு விஸ்தாரமாய்ப் பேசினார்கள். வந்தனோபசாரத்துடன் 8-30-க்கு மகாநாடு முடிவடைந்தது. அன்று சென்னையில் எங்கு பார்த்தாலும் முஸ்லிம் மயமாகவே காணப்பட்டது. மாலை $4\frac{1}{2}$ மணிக்கு திருவல்லிக்கேணி நவாப் மஸ்ஜிலிருந்து முஸ்லிம்களின் ஊர்வலமொன்று ஸலவாத், தக்பீர், புகழ்பாக்களுடன் புறப்பட்டு கடற்கரைக்குச் சென்றதானது, யாவரின் மனதிலும் என்றுமில்லாப் புதுமையை விளைவித்தது.

அய்யம்பேட்டை.

(சக்கராப்பள்ளி)

வாலிப முஸ்லிம் சங்கம்

17-7-32-ல் மாலை 3 மணிக்கு சங்கக்கட்டடத்திலிருந்து ஏராளமான கூட்டமாக எம்பிரான் (ஸல்) அவர்கள் மீது புகழ்பாக்களைப் பாடிக்கொண்டு தெருக்கள் வழியாக சுற்றி வந்து சங்கத்திற்குமுன் அமைக்கப் பெற்றிருந்த சிங்காரப்பந்தலுக்குவந்து சேர்ந்தார்கள் அங்கு திரளான மஹாஜனங்கள் கூடியிருந்தார்கள் ஜனாப்மௌலவீ மு. அப்துற்றஜாக் சாஹிப் அவர்கள் தலைமை வகித்தார்கள் ஆரம்பத்தில் ஜனாப் அ. தாவுதுகனி சாஹிப் அவர்கள் கிராஅத் ஓதியபின் அக்கிராசனரவர்கள் எம்பெருமானார் (ஸல்) மானிடர்

களுக்குப்புரிந்த நன்மைகளையும் மகான் அவர்களைப் பின்பற்றி நாம் நடக்கவேண்டிய வைகளையும் நன்கெடுத்துக் காட்டினார்கள் பிறகு கனம் அ. பகீர் முஹையித்தீன் சாஹிப் "ஏகத்துவத்தூதர்" என்னும் அரும் நூலை யாவருக்கும் வாசித்துக்காட்டினார் பின்னர் ஜனாப் மஷாயிகு அப்துல்ஜப்பார் சாஹிப் சகோதரத்துவம் என்னும் விஷயத்தை விளக்கிக் காட்டினார். கனம் இ.பாவாமைதீன் அ. மீ. பகீர் முஹையித்தீன் இவர்களால் வாழ்த்துப் பாடப்பெற்று ஜனாப் செ.ந.முஹம்மது இஸ்மாயீல் சாஹிபால் பானம் வழங்கப்பெற்று கூட்டம் கலைந்தது.

பேட்டை

பால்ய முஸ்லிம் சங்கம்

உலக ரெட்சகர் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் திருஅவதாரமானதைக் கொண்டாடும் நோக்கத்துடன் எம்பெருமானார் (ஸல்) அவர்களின் ஜீவிய சரிதையைப்பற்றியும் திவ்விய குணவொழுக்கமேம்பாட்டைப்பற்றியும் தினசரி ஒரு துண்டு நோட்டீஸ் சங்கத்திலிருந்து வெளியிடப்பட்டது. 17-7-32ல் சங்கத்திற்கு முன் மகா நாடு நடைபெற்றது ஜனாப் கா. த. மீ. அஹ்மத் இப்ராஹீம் ருவுத்தர் B.A., B.L., அவர்கள் தலைமை வகித்தார்கள். ஜனாப் காதிர் முஹையித்தீன் பிஜ்லீ சாஹிப், ஜனாப் வா. பீ. பீ. முஹம்மது ஹம்ஸா ருவுத்தர் B.A., B.L., ஜனாப் கா. முஹம்மது சாலிஹ்ருவுத்தர் முதலியோர் நபிபெருமானார் (ஸல்) அவர்களின் உன்னித ஜீவியத்தைப் பற்றியும் திவ்விய குண ஒழுக்கத்தைப் பற்றியுமுள்ள அரும்பெரும் சொற்பெருக்கு நிகழ்த்தினர் அக்கிராசனரவர்கள் முடிவுரை கூறுகையில் முஸ்லிம்களின் தற்காலத் தேவைகளையும் அவர்களின் கடமைகளையும் தெளிவாக எடுத்துக்கூறி "ஏகத்துவத் தூதர்" என்னும் நூலின் சில பாகத்தை விளக்கிக் காட்டியபின் அந்நூற்கள் ஏராளமாக வினியோகிக்கப்பட்டு சபை கலைந்தது.

இஸ்லாமிய வாழ்க்கை.

நீங்கள் பின்பற்றி நடப்பதற்கு, ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்களின் அழகான முன் மாதிரிகள் உங்கள் முன்னிருக்கின்றது. ஆதலில் ரசூல் (ஸல்) அவர்கள் எதைச் செய்யும்படி கட்டளை பிறப்பித்திருக்கின்றார்களோ அதனைச் சிரமேற் தாங்கி நடந்துகொள்ளுங்கள்; எதை விட்டு விலக்கியிருக்கின்றார்களோ அதனைத் தவிர்ந்து நடந்துகொள்ளுங்கள்.

சோதரீர்!

எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்.) அவர்கள் இப்பூஉலகின் கண் நபியாக அனுப்பப்படும் நேரத்தில், வேதங்களிலேற்பட்ட மாறுதலினாலும், மடத்தனம் சிறந்து விளங்கிக் கொண்டிருந்ததாலும், முஷ்ரிகீன்கள், யூதர்கள், கிறிஸ்தவர்கள், மஜூஸிகள் முதலிய சகல அரபிக் கூட்டத்தாரின் வெளிரங்க உள்ரங்க சுத்தியின் ஆவசியமேற்பட்டிருந்தது. அதுகாலை அராபியரின் நிர்ணயம், சற்குணம் முதலியவைகள் எவ்வாறு ஒழுங்கில்லாதிருந்ததோ அதேபோன்று அவர்களுடைய சீர்திருத்தங்களும் ஜீவனம்சத்திற்குள்ள வழிகளும் மிக மிக கெடுதலான விதத்திலேயேயிருந்தது. உதாஹரணமாக இன்னோர் இம்மையை மறந்திருந்ததுபோல், உண்பது குடிப்பது உடுப்பது சுகஜீவியாக வாழ்வது முதலியவைகளின் முறைகளையும் தெரிந்து கொள்ளாதவர்களாக யிருந்தார்கள். அதனால் அவர்களுடைய மஜ்லிசானது சத்தொழுக்கமற்றதாக யிருந்தது. எனவே கூடி வாழ்வது, வார்த்தையாடுவது, கொடுக்கல் வாங்கல் செய்வது முதலியவைகளில் காட்டுமிராண்டிகளே போல் காணப்பட்டார்கள். சுறுங்கக் கூறின் உலக ஜீவிப்பின் வகைகளை அறியா மாந்தர்களாகவே காணப்பட்டார்களெனக் கூறுவது மிகையாகாது.

"அவன், (அரபிகளிலுள்ள) எழுதப் படிக்கத் தெரியாதவர்களினின்றுமே ஒரு நபியை அனுப்பி வைத்த நாயனாகும். மானிடர்காள்! ஆண்டவனிடமிருந்து ரசூல் அவர்கள்

(முஹம்மது நபி (ஸல்) உண்மைச் செய்தியைக் கொண்டு வந்திருக்கின்றார்கள். அதை உறுதி கொள்ளுங்கள்; அதனால் உங்களுக்குப் பிரயோசனமிருக்கின்றது.'' (குர்ஆன்). இந்நிலைமையில் எம்பிரான் (ஸல்.) அவர்கள் வந்தபின், அன்னோர் ஆண்டவனை ஓர்மைப் படுத்தி வைப்பதற்கும், சீர்திருத்தம் பெறுவதற்குமுள்ள அஸ்திவாரத்தை நாட்டினார்கள். "நான்தான் உங்கள் நாயனாகும். ஆதலின் என்னைவணங்குங்களெ''ன்னும்ஆண்டவனது திருவாக்கியத்தை அறிவித்து இதனாலேயே இருபதியின் ஜெயமும் கிட்டுமென விளக்கினார்கள். அது முதலே சீர்திருத்தங்களும் ஏற்பட ஆரம்பமாயிற்று. நமது உலக ரெட்சகர் (ஸல்.) அவர்கள் ஆரம்பத்தில் அறியாத அரபிகளுக்கு மறுமையைப் பற்றிய விஷயங்களைத் தெரிவித்து அவர்களுடைய வழிகேடான நிர்ணங்களையும் துர்க்குணங்களையும் அகற்றி வைத்தார்கள். அதற்குப் பின் அவர்களின் உலஜீவிப்பிற்குள்ள ஒழுங்கான வழிகளையும் துலக்கிக் காண்பித்தார்கள். எனவே அவர்களுக்கு, உட்கார்வது, எழுந்திருப்பது சாப்பிடுவது, உடுப்பது, மனிதர்களுடன் கலந்துறவாடுவது போலொற்றவைகளின் ஒழுங்குகளையும்,யாத்திரை செல்வது சுகஜீவியாக வாழ்வது முதலியவைகளின் விதத்தையும், விருந்துபசரணை புரிவது, விவாகம் புரிவது முதல் இன்றியமையாத யாவற்று நடவடிக்கைகளையும் தக்க முறையில் கற்பித்துக் கொடுத்தார்கள்.

"உங்களுடைய இனத்தினின்றுமே ஒரு ரசூலை அனுப்பிவைத்தோம்; அவர் உங்களுக்கு என்னுடைய வாக்கியங்களை ஓதிக் காண்பிக்கின்றார்; உங்களைச் சுத்தப்படுத்துகின்றார்; உங்களுக்கு என்னுடைய வேதத்தையும் திருஷ்டாந்தங்களையும் கற்பித்துக் கொடுக்கின்றார்; மேலும் நீங்கள் (இதற்கு முன்) தெரிந்திராத அநேக விஷயங்களையும் அறிவித்துக் கொடுக்கின்றார்'' (குர்ஆன்).

சோதரர்காள்!

ஒரு நாளன்று சங்கைவான்களான சஹாபாக்களுக் கிடையில் எம்பிரான் (ஸல்.) அவர்கள், மறுமையைப்பற்றியும், அதில் நடைபெறக்கூடிய கஷ்டசங்கடமான காரியங்கள் விஷயமாகவும் கூறிக்கொண்டிருந்ததானது, ஸஹாபாக்களுக்குப் பெரும் பிரயோஸனத்தை அளித்துவிட்டது. அக்கூட்டம் முடிவடைந்தபின் சில சஹாபாக்கள் ஹஸ்ரத் உதுமானிப்னு மத்ஊன் (ரலி.) அவர்கள் இல்லத்தில் ஒன்றுகூடி யோசித்து கடைசியாக யாவரும் பகற்காலங்களில் நோம்பு நோர்ப்பதிலும், இராக்காலங்கள் முழுதும் ஆண்டவனை வணங்குவதிலும் காலத்தைப் போக்கவேண்டும்; படுக்கையில் தூங்குவதையும் மாமிசம் போலொற்ற ருசியுள்ள பதார்த்தங்களைச் சாப்பிடுவதையும், பெண்டீர்களுடன் கூடியிருப்பதையும், வாசனை திரவியங்கள் பூசிக்கொள்வதையும் விட்டொழித்துவிடவேண்டும். தவிர, அழுத்தமானவும் சாதாரணமானவுமாகிய உடைகளை அணிந்து காலத்தைக் கழித்துக் கொண்டும், உலக சம்மந்தமான சகல காரியாதிகளையும் விட்டு உலகத்தை வெறுத்து சன்னியாசம் பூண்டு வெளியிற் சென்றுவிட வேண்டும் என்னும் முடிவிற்கு வந்தனர். இது செய்தி உலக ரெட்சகர் (ஸல்.) அவர்களுக்குத் தெரியவே, ஹஸ்ரத் உதுமானிப்னு மத்ஊன் (ரலி) அவர்களது வீட்டில் கூடி யிருந்த யாவர்களும் ஒன்று சேர்ந்து எம்பிரான் ஏகத்துவத் தூதர் (ஸல்) அவர்களது சமூக மெய்தினார்கள். இன்னோரை நோக்கி நீங்கள் இவ்வாறு தீர்மானித்திருப்பதாகக் கேள்விப்படுகின்றேன் என எம்பெருமானார் (ஸல்) அவர்கள் வினவவே, ஆண்டவனது ரசூல் அவர்களே! இச்செய்தி உண்மைதான். ஆனால் இவ்வாறு தீர்மானஞ்செய்து கொண்டதானது, ஆண்டவனது பொருத்தத்தை அடைவதற்கும், மறுமையில் ஏற்படும் ஆண்டவனது வேதனையை விட்டுத் தப்பிக்கொள்வதற்காகவுமே யாகும் எனக் கூறினார்கள்.

இதைக்கேட்டு உலகரெட்சகர் காத்தமுந்நபிய்யின் (ஸல்.) அவர்கள் கூறியதாவது:— நீங்கள் இவ்வாறு செய்வதற் கனுமதி அளிக்கும்படி எனக்கு உத்திரப்படவில்லை; ஆண்டவனுக்காக நிறைவேற்றவேண்டிய கடமைகள் உங்கள் மீதேற்பட்டிருப்பதே போன்று உங்களுக்காகவும் செய்யவேண்டிய கடமைகள் அநேகமுள. ஆதலின் சில வேளை நோன்பு நோற்றுக் கொள்ளுங்கள்; சில கால் விட்டு விடுங்கள்; இரவின் சில பாகத்தில் வணக்கம் புரியுங்கள்; சில பாகத்தில் துயில் புரியுங்கள். நானும் அவ்வாறேதான் சில காலம் நோம்பு நோர்க்கின்றேன். சில கால்

விட்டிருக்கின்றேன். சில கால் இரவில் வணக்கம் புரிவதற்காக எழும்புகின்றேன். சில கால் தூங்கி விடுகின்றேன். மாமிசம்போலொற்ற ருசிகரமான பதார்த்தங்கள் சாப்பிடுகின்றேன்; பெண்டீர்களுடன் கூடியிருக்கின்றேன். ஆதலின் எவர்கள் என்னுடைய பழக்க வழக்க நடை பாவனைகளைப் பின்பற்றவில்லையோ அவர்கள் என்னினின்று முள்ளவர்களல்லவெனக் கூறினர்கள்.

அதன்பின் அரும் பெரும் சொற்பெருக்கொன்றாற்றினர்கள். அதன் சாரம்சமாவது:—

உலக விருப்பங்களையும், அதன் சுகானுபோவங்களையும் தங்கள்மீது ஹறாமாக்கிக் கொள்ள இன்னேருக்கு என்ன ஏற்பட்டுவிட்டது. உங்களை கிறிஸ்தவர்களிலுள்ள பாதரிமார்களைப் போல உலகத்தை வெறுத்து விடும்படி நான் கூறவில்லை; என்னுடைய மார்க்கத்தில் மாமிசம் சாப்பிடுவதையும், பெண்டீர்களுடன் கூடிவாழ்வதையும் விட்டுவிட்டு சன்னியாசிகளைப் போல் மூலைபிடித்து உட்கார்ந் திருக்கும்படி கூறப்பட்டிருக்கவில்லை; என்னைப் பின்பற்றியவர்களின் நடவடிக்கையானது, விட்டுவிட்டு நோம்பு நோற்பதும்,ஆண்டவனுடைய பாதையில் உயிரைக் கொண்டும் முதலைக் கொண்டும் தியாகம் புரிவதற்கு முயற்சி செய்வதுமாகும். ஆதலின் மானிடர்காள்! ஆண்டவனுக்கு வணக்கம் புரிவதில் யாரையும் கூட்டாக்கிக் கொள்ளாதீர்கள்; ஹஜ்ஜு, உம்ராவை நிறைவேற்றுங்கள்; தொழுகையை சரிவரத் தொழுது நோம்புபூண்டு ஒவ்வொரு காரியாதிகளையும் நடு நிலைமையோடு நிறைவேற்றி வாருங்கள்; உங்களுக்கு நீங்களே கஷ்டத்தைக் கொடுத்துக் கொள்ளாதீர்கள்; அவ்வாறு செய்வீர்களாயின் ஆண்டவன் உங்கள்மீது சகலகாரியாதிகளையும் கஷ்டமாக்கி வைப்பான்; உங்களுக்கு முன் சென்றுபோனவர்களெல்லாம் தங்கள் மீது பலவாறான கஷ்டங்களைப் போட்டுக் கொண்டதால் அல்லாஹ் தஆலாவும் அவர்கள் மீது கடுமை செய்து விட்டான் என்பதே. இதற்குப்பின் "ஏ நங்நம்பிக்கை கொண்டவர்காள்! ஆண்டவன் உங்களுக்கு ஆகுமாக்கி வைத்திருப்பவைகளை உங்கள் மீது ஹறாமாக்கிக் கொள்ளாதீர்கள்; மேலும் வரம்பைக் கடந்துவிடாதீர்கள்; அவ்வாறு மீறி நடப்பவர்களை ஆண்டவன் உகக்கமாட்டான்; ஆண்டவன் உங்களுக்கு துப்பரவானவும் ஹலாலானவுமாகிய எந்த வஸ்த்துவை அளித்திருக்கின்றானே அதைப் புசியுங்கள். எந்த நாயனை உறுதி கொண்டிருக்கின்றீர்களோ அவனைப்பயப்படுங்கள்" என்னும் திருவாக்கியத்தை அறிவித்தான்.

ஒரு மனிதர் எம்பிரான் நபிகள் திலகம் (ஸல்) அவர்களிடம் வந்து (தீன்) மார்க்கமென்பது யாதாகுமென நான்கு முறை வினவினர். அதற்குத் தாங்கள் ஒவ்வொரு தடவையும் "நற்குண"மாகயிருக்கும் என்றே பதில் கூறினர்கள். எனவே ஒரு நாளன்று உலக ரெட்சகர் காத்த முந்நபியின் (ஸல்) அவர்களினது திருச்முகத்தில் ஒரு பெண்மணியைப்பற்றிய பிரஸ்தாப மேற்பட்டு அவள் சதா காலமும் நோன்பு நோற்கின்றாள்; இரவு முழுதும் விழித்து வணங்குகின்றாள். ஆனால் துற்குணமுடையவளாகயிருப்பதால் அயல் பாகக்காரர்களுக்கு நாவைக்கொண்டு இம்சை கொடுக்கின்றாள் எனக் கூறப்பட்டது. இது கேட்டு எம்பிரான் (ஸல்) அவர்கள் அவளில்யாதொரு நலவுங்கிடையாது; அவள் நரகவாதியாகுமெனத் தெரிவித்துவிட்டு எவன் மானிடர்களுக்கு, தன்கையைக் கொண்டும் வாயைக் கொண்டும் கஷ்டங் கொடுக்காமலிருக்கின்றானே அவன் தான் சரியான முஸ்லிமாகுமென்றும், எவன் கெடுதியை வெறுக்கின்றானேஅவன்தான் தேசத்தை வெறுத்து (ஹிஜ்ரத்) சென்றவனாகுமென்றும் கூறினர்கள். மேலும் ஒருமனிதன் எம்பிரான் (ஸல்) அவர்களிடம் வந்து இஸ்லாத்தின் எச்செய்கை மிகமிக மேலான தாகுமென வினவியதற்கு, பசித்தோருக்குச் சாப்பாடு கொடுப்பதும், அறிந்தோர் அறிமுக மில்லாதோர் யாவருக்கும் ஹிம்சை கொடுக்காதிருப்பது மாகுமெனக் கூறிவிட்டு, எதுவரை மானிடன் தனக்குப் பிரியமானவைகளைத் தமது சோதிரனுக்கும் பிரியமுள்ளதாகக் காணமாட்டானே அதுவரை அவன் உண்மையான மூமினாக ஆயிருக்க முடியாதெனத் தெரிவித்தார்கள். தவிர ஆண்டவன் இல்லாத்தை சற்குணம், நல்வணக்கம் முதலியவைகளைக் கொண்டு மூடிவைத்திருக்கின்றான் என முஆதிப்னுஜபல் அவர்களைத் தொட்டும் ரிவாயத்துச் செய்யப்பட்டிருக்கிறது.

ஹஸ்ரத்ஸஅத் பின் ஹிஷாம் கூறுகின்றார்கள்:- நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள்

திருசமுக மெய்தி எம்பிரான் (ஸல்) அவர்களது சற்குண விஷயமாக வினவியதற்கு, தாங்கள் குர்ஆன் ஓதியிருக்கின்றீர்களா வெனவினவினார்கள். ஆம் ஓதியிருக்கின்றேன் எனக்கூறவே, உலக ரெட்சகர் (ஸல்) அவர்களினது சற்குணம் குர்ஆனாகவே யிருந்தது என அறிவித்தார்கள் "தாங்கள் சற்குணத்தின் மீதே படைக்கப் பட்டிருக்கின்றீர்கள்" என ஆண்டவன் கூறுகின்றான்.

ஹஸ்ரத் முஆதிப்னுஜபல் (ரஹ்) அவர்கள் கூறுகின்றார்கள் :—ஒரு நாள் எம்பிரான் (ஸல்) அவர்கள் நல்லுபதேசம் புரிந்துகொண்டிருக்குங்காலை, என்னை நோக்கி 'முஆதே! அல்லாஹ் தஆலாவுக்கு பயந்து கொள்ளும்; உண்மை பேசுவதற்கும், அறுதி மானத்தை நிறைவேற்றுவதற்கும், அமானத்தைக் கொடுத்து விடுவதற்கும்; சதிபுரியாதிருப்பதற்கும், அயல்பாகக் காரர்களுடன் தக்க முறையில் நடந்துகொள்வதற்கும், அகதிகள் மீது கிருபை புரிவதற்கும், இனிய வார்த்தையாடுவதற்கும், யாவருக்கும் ஸலாம் சொல்வதற்கும் நற்கருமங்கள் புரிவதற்கும், மேலெண்ணங்களை அகற்றுவதற்கும், ஈமானின் மீது உறுதியாக யிருப்பதற்கும், குர்ஆன் ஷரீபை தக்க முறையில் விளங்கிக் கொள்வதற்கும், மறுமையின் விருப்பம் கொள்வதற்கும், கணக்குக் கேள்விகளைப் பயப்படுவதற்கும் முயற்சியுள்ளவராக யிரும்; நீர் கற்றறிந்த படிப்பாளியை தூஷிப்பவராகவும், உலகில் பசாது செய்துகொண்டு அலைபவராகவு மிருக்கவேண்டாம் என நல்லுபதேசம் புரிந்தார்கள்.

ஆகவே, எம்பிரான் (ஸல்) அவர்கள் மானிடர்களுக்கு நல்லொழுக்கங்களைக் கற்றுக் கொடுத்ததுடன் சற்குணம் சத்தொழுக்கம் முதலியவைகளின் பக்கலும் அன்னோரை அழைத்தார்கள். சங்கைவான்களான சஹாபாக்களும் குர்ஆன் ஷரீபின் திருக்கட்டளைகளையும் எம்பிரான் (ஸல்) அவர்களின் அழகிய முன் மாதரிகளையும் சிறமேற்றாங்கி நடந்து வந்ததின் பயனாக தங்களுடைய நிர்ணயங்களைச் சுத்தி செய்து கொண்டதுடன் தங்கள் செய்கைகளையும் ஒழுங்குபடுத்திக் கொண்டதின் காரணமாக ஜெய சீலர்களாகச் சிறந்து விளங்கினார்கள். ஆண்டவன் அவர்களை நோக்கி, "நீங்கள் மானிடர்களில் சிரேஷ்டமானவர்களாகும் என்றும், எவர்களுடைய மனதில் ஆண்டவன் ஈமானை எழுதிவிட்டானோ அவர்களாக யிருக்குமென்றும், தன்னுடைய கிருபையால் அவர்களுக்கு உதவி அளித்திருப்பதாகவும், எவர்கள் ஈமான்கொண்டு நற்கருமங்கள் புரிந்துவந்தார்களோ நிச்சயமாக அவர்கள் நற்கருமங்கள் புரிந்தவர்களாகுமென்றும்; அவர்கள் தான் படைப்புகளிற் சிரேஷ்டமானவர்களாகுமென்றும்; அவர்கள் அல்லாஹ்வின் கூட்டத்தாராகுமென்றும்; எவர்கள் ஆண்டவனின் கூட்டத்தார்களாக யிருக்கின்றார்களோ அவர்கள் ஜெயம் பெற்றவர்களாக யிருக்குமென்றும், ஆண்டவன் அவர்களை நேசிக்கின்றான் இன்னோரும் ஆண்டவனின் கற்பனையைக் கொண்டு பொருந்திக் கொண்டவர்களாக யிருக்கின்றார்கள் என்றும், நீங்கள் எண்ணிக்கையில் கம்மியானவர்களாகயிருந்து சக்தி அற்றவர்களென உங்களைக் கருதும்போது, உங்களை மானிடர்கள் கொன்று விடுவார்களென்னும் பயம் உங்களுக்கு ஏற்பட்டபொழுது உங்களுக்கு சக்தியை அளித்து தக்க வஸ்துக்களிலிருந்து உதவி செய்து உணவையளித்தது யார் என்பதை நினைத்துப் பாருங்கள்" எனக் கூறுகின்றான். (தொடரும்)

இஸ்லாமிய உலகம்

அரேபியா

ஹிஜாவின் அரசரான சுல்தான் இப்னு ஸஊது தம்முடைய நாட்டை சகல துறைகளிலும் சீர்திருத்தி முன்னேற்றமடையச் செய்யவேண்டு மென்பதில் அக்கரைகொண்டிருக்கின்றார். இதுவரை நஜத்ஹிஜாவில் ஜனசங்கியை (சென்ஸஸ்) ஒழுங்காக சட்டமுறைப்படி எடுக்கப்பட்டது கிடையாது. ஆனால் ஜனசங்கியைக் கணக்கெடுப்பதில் சுல்தான் அவர்கள் இப்போது ஈடுபட்டு

தம்முடைய மந்திரிச் சபையுடன் ஆலோசனை செய்து ஜனசங்கியை எடுப்பதற்கான முறைகளையெல்லாம் நிர்ணயித்து அதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

அப்கனிஸ்தான்

பிரதி வருடமும் அப்கனியர்களில் சுமார் 1000 பேர்கள் ஹஜ்ஜுக் கடமையை நிறைவேற்றி வைக்க பரிசுத்த மக்கமாநகருக்குச் செல்லுகின்றனர். இவர்கள் தங்குவதற்கு மக்கமாநகரில் தக்க வசதிகள் இல்லாக் குறையை நீக்குவான் வேண்டி அப்கன் கவர்ன்மெண்டார் ரூ. 3,00,000 செலவில் ஹாஜிகானு ஒன்று கட்ட ஏற்பாடு நடைபெற்றது. மக்கமாநகரில் பெரிய விசாலமான கட்டடம் ஒன்று குறைந்த விலைக்குக் கிடைத்ததால் புதுக்கட்டடம் கட்டுவதற்குப் பதிலாக ரூ. 2,70,000 இக்கட்டடம் வாங்கப்பட்டுள்ளது. இக்கட்டடத்தில் ஒரே சமயத்தில் ஆயிரம் பேர்கள்வரை தங்க வசதிகள் இருக்கின்றன.

* * * *

ஷா நாதிர்கான் அவர்கள் அப்கனியர்களின் கல்வி அபிவிர்த்தியில் அதிக ஊக்கமும் அக்கரையும் கொண்டவராகஇருக்கிறார். அப்கனிஸ்தானத்திற்குச் சர்வ கலாசாலையொன்று ஸ்தாபிப்பதற்கான ஏற்பாடுகளையெல்லாம் செய்யும்படி கல்வியிலாக்கா மந்திரிக்கு ஷா உத்தரவு செய்துள்ளார். இது சம்மந்தமான வேலைகள் அதிக சுறுசுறுப்பாக நடந்துவருகின்றன.

வைத்தியக் கல்லூரியொன்று ஸ்தாபிக்கவும் ஏற்பாடுகள் நடந்துவருகின்றன.

* * * *

சரித்திரம், பூகோளம், விஞ்ஞான சாஸ்திரம் முதலியவை சம்மந்தமான புத்தகங்கள் அன்னிய பாஷைகளிலிருந்து அப்கனிய புஷ்த்து பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சாகி வருகின்றன ஆதலின் அப்கனிஸ்தானத்தில் வெகு சீக்கிரம் கல்வியபிவிருத்தி ஏற்பட்டுவிடுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

துருக்கி

துருக்கியில் தேசிய உணர்ச்சி எல்லாத் துறைகளிலும் தலைசிறந்து விளங்குகின்றது. துருக்கி, துருக்கியர்களுக்கே என்ற கொள்கை வெகு கண்டிப்பாக அவர்களில் கையாளப்பட்டு வருகின்றது. சமீபத்தில் கெய்ரோவிலிருந்து (எகிப்து தேசம்) சில கூலிகள் ஷெல் கம்பெனியால் இஸ்தம்பூல் (துருக்கி) துறைமுகத்தில் வேலை செய்வதற்கென்று அனுப்பப்பட்டார்கள். இக்கூலிகள் இஸ்தம்பூல் துறைமுகத்தில் வேலை செய்ய அனுமதிக்கப் படவில்லை. எகிப்திற்குத் திருப்பியனுப்பட்டனர். துருக்கியிலுள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தை மட்டுப்படுத்தவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்கவும், துருக்கி துருக்கியர்களுக்கே என்றக் கொள்கையை ஸ்தாபிக்கவும் துருக்கி தற்போது பலமுறைகளைக் கையாண்டு வருகின்றது.

இராக் (மெஸ்பொடொமியா)

சர்வதேசசங்கத்தில் இராக்கைச் சேர்த்துக் கொள்ள பிரிட்டிஷ் கவர்ன்மெண்டார் செய்த சிபாரிஷின் மேல் செப்டம்பர் மாதம் ஜினிவாவில் கூடும் சர்வ தேச சங்கக்கூட்டத்தில் இராக்கை மெம்பராகச் சேர்த்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்படும். அச்சமயம் ஜினிவாவில் நடைபெறும் விவாதத்தை கவனிப்பதற்கு ஜினிவா செல்ல விரும்பும் இராக் பார்லிமெண்டு மெம்பர்களுக்குள்ள செலவுகள் பூராவையும் கொடுக்க இராக் கவர்ன்மெண்டார் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

* * *

ஹிஜாஸின் இளவரசர் அமீர்பைஸல் ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்து விட்டு ஈரானுக்குச் சென்றிருந்தார். ஈரானிலிருந்து இராக்குக்கு வந்து சேரவே, இராக் கவர்ன்மெண்டார்மிக்க குதூகலமாக வரவேற்று பல இராஜாங்க விருந்துகள் நடத்திவைத்தனர்.

* * *

மிஸர் (எகிப்து)

எகிப்தில் வாசஞ்செய்யும் அன்னிய நாட்டினர்கள் மீது தலைவரி விதிக்கப்பட்டு வருகிறது. துருக்கி, சைன, பர்ஷியா முதலிய நாடுகளிலெல்லாம் இத்தலைவரி ரத்து செய்யப்பட்டுவரும் நிலைமையில் எகிப்திலும் இத்தலைவரியை ரத்துசெய்து விடவேண்டுமென்பதாக ஒரு பிரேரணை பார்லிமெண்டு சபையில் கொண்டு வரப்பட்டிருக்கின்றது. பார்லிமெண்டு சபையின் அடுத்தக்கூட்டத்தில் இப்பிரச்சினை விவாதத்திற்கு வரக்கூடுமெனத் தெரிகிறது.

* * *

எகிப்தில் புதிய கைத்தொழில்களை ஆரம்பிப்பதுபற்றியுள்ள நிலைமையைப் பரிசிலனை செய்து ரிப்போர்ட் செய்ய ஒருகமிட்டி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இக்கமிட்டி பல விஷயங்களையும் ஆராய்ச்சிசெய்து பரிசிலனை செய்து வருகின்றது. கண்ணாடி கைத் தொழிற்சாலை ஆரம்பிக்கலாமாவென்றும், காகிதம் செய்யும் கைத்தொழிற்சாலையை ஆரம்பிக்கலாமாவென்றும், பரிசிலனை செய்யப்பட்டது. காகிதத் தொழிற்சாலை ஆரம்பிக்க நீலநதியின் ஜலம் ஏற்றனவாகவில்லையாம். கண்ணாடித் தொழிற்சாலை ஆரம்பிக்க பணம் ஏராளமாக வேண்டியிருக்குமாம். வெண்ணெய் தயாரிப்பதற்கு பாற்சாலைகள் ஸ்தாபிக்க ஆலோசனை செய்யப்பட்டுவருகின்றது. எல்லாத்திற்கும் கமிட்டியின் முடிவு எதிர்பார்க்கப்படுகின்றது.

* * *

பிரிட்டனுக்கும், எகிப்துக்குமிடையே மீண்டும் சமரசப்பேச்சுவார்த்தைகள் பிரஸ்தாபிக்கப்பட்டு வருகின்றது. இரு நாடுகளுக்குமிடையே கையெழுத்தாகவிருந்த நேச உடன்படிக்கை கையெழுத்துச் செய்யப் படாமற் போயிருந்தது. மீண்டும் புதிய நிபந்தனைகளின்கீழ் இருந்த நேச உடன்படிக்கையைப் புதுப்பிக்க முயற்சிசெய்யப்பட்டுவருகின்றது ஆங்கிலோ - எகிப்து உடன்படிக்கையைப் பூர்த்தியாக்கி வைக்க பிரிட்டன் விரும்பும்போது தாங்கள் தயாராக விருப்பதாக எகிப்து கவர்ன்மெண்டார் தெரிவித்திருக்கின்றார்கள்.

கெய்ரோவிலிருக்கும் பிரிட்டிஷ் ஸ்தானிகருக்கும், எகிப்து மந்திரிகளுக்குமிடையே முதலில் சம்பாஷணை ஆரம்பித்து விவாத விஷயங்களெல்லாம் தீர்க்கப்பட்ட பின்னர் எகிப்து கவர்ன்மெண்டின் தூதுவக் கூட்டம் லண்டன் சென்று உடன்படிக்கையை அங்கீகாரம் செய்து கையெழுத்துச் செய்யும்.

* * * *

உலகின் இதர நாடுகளெல்லாம் செல்வ நிலைமையாலும் பணக்கஷ்டத்தாலும் பாதிக்கப்பட்டு திண்டாடும் இச்சமயத்தில், எகிப்து எவ்விதப் பணக் கஷ்டத்திற்கு முட்படாமல் சுகமாகக் காலங்கழித்து வருகின்றது. இதற்குக் காரணம் எகிப்தியக் குடிகளில் பெரும்பான்மையோர் விவசாயிகளாயும், சிக்கனமாகவாழ்பவர்களாயும், கஷ்டப்பட்டுஉழைப்பவர்களாயு மிருப்பதேயாம். இக்காரணம் பற்றி உலகத்தின் இதரப்பகுதிகளில் காணப்படும் பணக்கஷ்டம், செல்வ நெருக்கடி முதலியவை எகிப்தியர்களுக்குத் தெரியாதிருக்கிறது.

மனிதனும் செய்நன்றி யறிதலும்

துருக்கி தேசத்திலுள்ள 'முகாவினத்' என்னும் பத்திரிகையானது, வியக்கத்தக்க ஒரு சம்பவத்தை வெளியிட்டிருக்கின்றது. அதாவது :—அனதோலியாவில் 'இர்தோன்' என்ற ஜில்லாவிலுள்ள ஒரு கிராமத்தில் 'ஷஅபான் ஆகா' என்னும் பெயருடைய ஒரு விவசாயி இருந்தார். ஒரு நாளிரவு அவர் தம்முடைய குடிசைக்குள் நித்திரை புரிந்துக்கொண்டிருக்குஞ் சமயம் வாசற் கதவு கடுமையாகத் தட்டப்படுவதின் ஓசை இவரது செவிக்கெட்டியது. அவர் உடனே எழுந்து கதவைத் திறந்து பார்த்தபோது ஒரு கரடி நின்று தமக்கேற்பட்டிருக்கும் கஷ்டத்தை வெளியாக்கும் நோக்கத்தோடு சப்தமிடுவதைக் கண்டார். அதுபொழுது கரடி தன் கால்ப்பக்கல் அடிக்கடி சைக்கினை செய்துகொண்டிருந்தது. அதனால் ஷஅபான் ஆகா, அதன் காலில் ஏதோ தீங்கு நேரிட்டிருக்குமென்று கருதினர். எனவே, தயாள குணசீலரான அத்துர்க்கியானவர் சிறிதும் அச்சமின்றி உடனே அதன் சமீபஞ்சென்று காலைப் பிடித்துப் பார்த்ததில் ஒரு கூறிய கல் அதன் காலில் உறுத்தியிருப்பதைக் கண்டார். உடனே அவர் தன் குடிசைக்குட் சென்று ஒரு ஆயுதத்தைக் கொண்டுவந்து காலிற் தைத்திருந்த கல்லை வெளிப்படுத்தி விட்டார். கரடியின் நோவு நீங்கிற்று. அதுபொழுது அக்கரடியானது நன்றியறிதலை வெளியிடுவான் வேண்டி விவசாயினது கையை நாவால் தடவியது; அவரது பாதங்

களில் தன் முகத்தை வைத்தது. இது பார்த்து விவசாயி அதன் கழுத்தைத் தடவிக்கொடுத்து அன்பு பாராட்டினர். பிறகு கரடி காட்டிற்குச் சென்று விட்டது. ஷஅபான் ஆகாவோ தூங்கச் சென்றுவிட்டார். மறுநாளிரவு ஆங்கு அதிசயிக்கத் தக்க சம்பவமொன்று நிகழ்ந்தது. அதாவது :—

மறுநாளிரவு ஷஅபான் ஆகா கதவைச் சாத்தாமல் தூங்கிக்கொண்டிருந்தார். கரடி காட்டிலிருந்து வந்து அவரை மெதுவாகத் தடவியது. அவர் திடுக்கிட்டெழுந்தார். உடனே கரடி அவரை உள்ளன்போடு மெதுவாக அழைத்துச் சென்றது. அவரும் அதைப் பின்றொடர்ந்து சென்றுர். கடைசியாக இலைகள் அடர்த்தியாக தழைத்துள்ள ஒரு மரக்கிளை கீழே கிடக்குமிடத்திற் போய் நின்று அதை நோக்கி சைக்கினை செய்தது. இதைப் பார்த்து ஷஅபான் ஆகாவுக்குத் தம்மை அறியாமலே புன்சிரிப்பு ஏற்பட்டது. அவர் தாம் சென்ற இரவில் செய்துள்ள நன்றிக்குப் பிரதிகூலமாக கரடி, மரக்கிளை ஒன்றைக் கொய்து வந்திருப்பதாகவும், தம்மையும் இலை தழைகளைத் தின்னும் சிருஷ்டி என்று கரடி மதித்திருப்பதாகவும் எண்ணி அதிகமாக சிரித்தார்.

அப்பால் கரடி கானகஞ் சென்றது. ஷஅபான் ஆகாவும் நித்திரை புரியலானர். மறுநாள் காலையிலெழுந்து அம்மரக்கிளையினருகிற் சென்று அக்கிளையில் பெரிய தேன்கூடு யிருப்பதைப் பார்த்து, கரடி தமக்கு வெறும் இலைதழைகளை மட்டும்சன்மானமளிக்கவில்லை எனக் கருதி அவர் அக்கூட்டைப் பிரித்துத் தேனைச் சேகரித்துப் பார்த்தபோது இரு மணங்கு வரையிலிருந்தது.

மேற் குறிப்பிட்டுள்ள மிருகமானது, தனக்கு உபகாரம்செய்த மனிதருடன் எவ்வாறு நடந்துக் கொண்டதென்பதை சற்றே சிந்தனை செய்து பாருங்கள். அவரது கைகளை சூப்பியது; பாதங்களில் தலையை வைத்தது; அடுத்த நாள் தேன் கொண்டுவந்து கொடுத்தது. இவ்வாருகத்தனது நன்றியறிதலை வெளியிடுவதற்கு தக்க முறையில் தொண்டு புரிந்தது.

இந்நிலைமையில் மானிடவர்க்கத்தாரில், தங்களைப் படைத்த ஆண்டவன்மீது மேற்கூறிய கரடியின் நன்றியறிதலுக்கு நிகராக ஏதேனும் நன்றியறிதலான உணர்ச்சி காணப்படுகிறதா? ஷஅபான் ஆகா அக்கரடிக்குச் செய்த உபகாரம் என்ன? அதன் காலில்பட்டிருந்த கல்லை வெளிப்படுத்தியது தான். பாருங்கள்? இறைவன் நமக்கு நேரிடும் எத்தனையோ இடர்களையும் கஷ்டங்களையும் துன்பங்களையும் போக்குகின்றுன்; அவனது தயாளம் நம்மைவிட்டு ஒரு நிமிஷமேனும் பிரிந்திருக்குமாகில்,நம்வாழ்க்கை அனைத்தும் பாழாகிப் போகும். ஆனல் அவனது தயாளமும் கிருபையும் நம்மை ஒவ்வோர் நிமிஷமும் சூழ்ந்திருக்கிறது. அவனது பரோபகாரமென்னும் மேகமானது எந்த சமயமும் நம் மீது வருஷித்துக் கொண்டிருக்கிறது. நம் தேகத்திலுள்ள ஒவ்வோர் அவயவமும், உயிர் வாழ்க்கைக்கு வேண்டிய மூச்சும், இரவு,பகல், உலகம்,சிருஷ்டி, புத்திரசந்தானம்,உத்தியோகம் முதலிய ஏற்படுவதும் அவனது ஜீவகாருண்யத்தி லுள்ளவைகளாகவே யிருக்கிறது.

எனவே இவ்வளவு சௌகரியங்களையும் அளித்து நம்மைக் காப்பாற்றிவரும் ஆண்டவன்பால் நாம் இவ்வாறு நடந்துக்கொள்கின்றேமா? அவனது சன்னிதானத்திற்கு முன்னல் நம் சிரம் சாய்கின்றதா? நம்முடைய நெற்றியானது அவனுக்கு முன்னல் சஜ்தா செய்வது கொண்டு திகழ்கின்றதா? நாம் அவனிட்ட கட்டளைகளை முறை தவருமல் நிறைவேற்றுகின்றேமா? அந்தோ! இவ்விஞக்களுக்கு சரியான பதில் கொடுப்பவர்கள் வெகு சிலரே காணப்படுவர்.

“ஏ! மானிடனே! சங்கையான நாயன் உன்னைப் படைத்து படைப்பில் மேலாகவும் சமத்துவமாகவும் ஆக்கியிருக்கின்றுன்; தான் நாடிய அழகான ரூபத்தில் உன்னை உண்டு பண்ணி இருக்கிறுன்.”

இவைகளெல்லாம் மகா மகிமை பொருந்திய ஆண்டவனின் கொடைகளாகுமன்றே? இந்நிலைமையில் மனித சமூகமானது தன் நாயனுக்கு நன்றி செலுத்தாமல் அலட்சியமாக இருந்துவருகிறது. மனிதன் விடும் ஒவ்வொரு மூச்சினுடனும் ஆண்டவனது தயாளம் சம்மந்தப்பட்டிருந்தும் மானிடன் அதை பாராதவன்போல் தன் கண்களில் முகமூடியைப் போட்டுக் கொள்கிறுன் ; அவனது உள்ளத்தில் திரை மூடிக்கொண்டிருக்கிறது. உலக ஆசையில் மூழ்கிவிடுகிறுன் ; ஆண்டவ

னது பாதைகளை அறவே மறந்து விடுகிறான். என்னே மானிடனது நன்றிஅறியும் தன்மை?

அன்புற்ற நேயர்காள்! ஒரு மிருகத்தின் காலிலிருந்த ஒரு சிறியகல்லை எடுத்ததற்குப் பிரதி பலனாக இத்துணை, அன்பு, தயாளம், நேசம், நன்றியறிதலான செய்கை எல்லாம் ஏற்படுமானால், சிருஷ்டிகளுக் கெல்லாம் மேலாகிய மானிடன் விஷயத்தில் உலக ரக்ஷகன் செய்துள்ள அளவற்ற உபகாரங்களுக்கும் நன்மைகளுக்கும் பகரமாக எவ்வகைய பிரதி கூலங்கள் வெளியாக வேண்டும் என்பதை யோசித்துப் பாருங்கள்? மானிடன் வருஷக்கணக்காக ஆண்டவனின் அருளையும் அன்பையும் பெற்றிருந்தும் அவனது சந்நிதானத்திற்கு முன்னால் தலைகுனியாமலும், அவனது கட்டளைகளை நிறைவேற்றும் விஷயத்தில் இடுப்புக் கட்டி நிற்காமலும் போவானாகில் அவன் ஒரு மனிதனாவானோ? எனவே, ஆண்டவனது சட்ட திட்டங்களுடனும் அவனது ஷரீஅத்துடனும் நாம் எவ்வாறாக நடந்துக் கொள்கிறோ மென்பதை யோசித்துப் பார்ப்போமாக.

ஆசிரியர் குறிப்பு

"யவ்முந்நபீ" தினக் கோண்டாட்டம்:—இவ்வாண்டு உலகின் பற்பல பாகங்களாகிய அரேபியா, அமெரிக்கா, ஐரோப்பா, சைனா, மலாயா, சிலோன், இந்தியா முதலிய பற்பல பாகங்களிலும் எம்பெருமானார் உலக ரெட்சகர் ஏகத்துவத் தூதர் (ஸல்.) அவர்களினது ஜனன தின வைபவம் வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டதென்பது யாவருமறிந்த விஷயமேயாகும். மௌலானா காஜீ அப்துல் மஜீது சாஹிப் கர்ஷீ அவர்கள் இவ்வியக்கத்தை அகில உலகக் கொண்டாட்டமாகச் செய்துவிட வேண்டுமெனக் கருதி அதற்காக தக்க முயற்சி செய்துவருவதை நாம் மிக மிகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றோம். கடந்த ஆண்டுகளைப் போலல்லாது இவ்வாண்டில் மூன்றுவிதமான பிரசங்கங்களைத் தயாரிக்கும்படி செய்து அதனை பற்பல பாஷைகளிலு மொழி பெயர்த்து உலகமெங்கும் வழங்கும்படி செய்திருக்கின்றார்கள்.

எனவே தென்னாட்டைப் பொருத்த மட்டில் நாம் பத்திரிகை வாயிலாய்க் கோரிக்கொண்டதற்கிணங்க நஞ்சோதரர்கள் இப்புனித தினத்தை தக்க முறையில் சிரத்தையுடன் கொண்டாடியதைத் தெரிந்து நாம் பெரிதும் மகிழ்வெய்துகின்றோம். தவிர நம் சங்கத்தாரால் மொழி பெயர்த்து அச்சிடப்பட்டிருந்த "ஏகத்துவத் தூதர்" என்னும் வீரத் பிரசங்கத்தை ஆங்காங்கு கூட்டப்பெற்ற மகாநாடுகளில் படித்துக் காண்பித்தும், ஏராளமாக வினியோகஞ் செய்தும் எம்பிரான் (ஸல்.) அவர்கள் போதித்த ஏகத்துவக் கொள்கையை யாவரும் தெரிந்துகொள்ளும்படி செய்ததற்காக நாம் மிக மிக நன்றியுள்ளவர்களாக யிருக்கின்றோம்.

இவ்வாண்டு நம் சங்க சார்பாக "ஏகத்துவத் தூதர்" என்னும் நூல் 20000, பிரதிகள்வரை தயாரிக்கப்பட்டிருந்தும் அவைகள் முன்னதாகத் தங்கள் ஆர்டர்களைப் பதிவு செய்துகொண்ட கனவான்களுக்கு மட்டும் அனுப்பிக் கொடுப்பதற்குப் போதியவாக யிருந்தது. இதுவன்றி அதற்குப்பின் சமீபமாக சுமார் 10000 பிரதிகளுக்கு ஆர்டர் அனுப்பி மணியார்டர் ரிஜிஸ்டர் மூலமாய் தொகை அனுப்பிக்கொடுத்த நண்பர்களுக்குப் பிரதிகள் அனுப்ப முடியாது போனமைக்கு மிக மிக வருந்தி அச்சோதரர்கட்கு மன வருத்தத்தைத் தெரிவித்து பற்பல கடிதங்களும் எழுதும்படி நேர்ந்துவிட்டது. ஆதலின் அவர்கள் அடுத்துவரு மாண்டில் முன் ஜாக்கிரதையோடு தங்களுக்குத் தேவையுள்ள பிரதிகளுக்கு முன்னதாகவே ஆர்டர்களைப் பதிவு செய்து பெற்று சிறப்புத்தங்கிய திருநாளை தக்க முறையில் கொண்டாடுவார்களென எதிர்பார்க்கின்றோம்.

ஹிபாஜத்துல் இஸ்லாம்

சந்தா விபரம்

இந்தியா, பர்மா ஸிலோன் முதலிய உள் நாடுகளுக்கு ...	ரூபா 3	0	0
பினங்கு, சிங்கப்பூர், மலாய் முதலிய வெளிநாடுகளுக்கு ...	„ 4	0	0
தனிப் பிரதி ...	„ 0	4	0

ஒரு வருஷத்திற்கு குறைந்து பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

நிபந்தனைகள்

1. சந்தாதாரர்களாகச் சேருகிறவர் முன்பணம் செலுத்தியாவது, வி. பி. யிலாவது பத்திரிகையைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

2. சந்தாதாரர்கள் கடிதம் எழுதும்பொழுதும், மணியார்டர் அனுப்பும்பொழுதும் தங்கள் சந்தா நம்பரை அவசியம் குறிப்பிடவேண்டும். பதிலறிய விரும்புவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

3. ஒரு வருஷத்திற்கு இடையில் சந்தாதாரராகச் சேருவோர் இஷ்டப்பட்டால் முந்திய மாதங்களின் சஞ்சிகைகளையும் கிரயம் கொடுத்துப் பெற்றுக்கொள்ளலாம்.

4. விஷயதானஞ் செய்ய விரும்புங் கனவான்கள் எளிய நடையில் ஒரே பக்கத்தில் மிகத் தெளிவாக எழுதி அனுப்பவேண்டும்.

5. மததூஷணையான விஷயங்களும், வீண் தர்க்கங்களை யுண்டு பண்ணும் வியாசங்களும், ஆளைக்குறித்துத் தாக்கி எழுதும் வியாசங்களும், பத்திரிகையின் நோக்கத்திற்கு மாறுபாடான வியாசங்களும் பிரசுரிக்கப்படமாட்டா.

6. எந்த வியாசத்தையும் நிறுத்திக்கொள்ளவும், திருத்திக்கொள்ளவும், சுருக்கிக்கொள்ளவும் ஆசிரியருக்கு உரிமையுண்டு.

மானேஜர்,

“ஹிபாஜத்துல் இஸ்லாம்” ஆபீஸ்,

48, அங்கப்ப நாய்க்கன் தெரு,

G. T., மதராஸ்.

இஷா அத்துல் ஹஸனாத்

பீதர்ஜமத்தில் பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்

வேலூர் மத்ரஸயே பாக்கியாத்துஸ்ஸாலிஹாத் அராபிக் கலாசாலையின் ஸ்தாபகாரும் ஷம்ஸுல் உலமாவுமாகிய அஃலா ஹஸ்ரத் கிப்லா மர்ஹூம் வ மக்பூர் அல்ஹாஜ் ஷாஹ் அப்துல் வஹ்ஹாப் சாஹிப் கிப்லா, அவர்களினது கட்டளைக்கேற்ப ஷை கலாசாலையின் ஆசிரியரும், கியாதிவாய்ந்த வாயிஜுமாகிய மௌலானா மௌலவீ அல்ஹாஜ் அப்துல் காதிர் பாதுஷா சாஹிப், மர்ஹூம் வ மக்பூர் அவர்களால் உர்துவிலியற்றப் பெற்றுள்ள "அல்பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்" என்னும் அரும் நூலின் மகிமையை இவ்வுலகு நன்கறிந்திருக்கின்றது. ஆனல் அதன் அரும்பெரும் பிரயோசனங்களை உர்து பாஷை மட்டுங் கற்றுள்ள ஒரு சாரார் மட்டும் அடைந்து வருவதைப் பார்த்த, அக் கலாசாலையின் நாஜிர் மௌலானா மௌலவீ அல் ஹாஜ் ஜியாவுத்தீன் முஹம்மத் சாஹிப் கிப்லா அவர்கள், இவ்வரும் நூல் நந்தென்னாட்டில் மிகுதமாயுள்ள முஸ்லிம்களின் பழக்கத்திலுள்ள தமிழில் மொழி பெயர்க்கப்பட்டு அச்சிடப்படுமாயின் அளவற்ற பிரயோசன மேற்படுமெனக் கருதியதாலும், அதனை தமிழில் மொழி பெயர்த்து அச்சிடுமாறு பன்முறையும் பல கனவான்கள் வேண்டிக் கொண்டதற்கிணங்கவும் அதனை மொழி பெயர்த்து அச்சிடப் பட்டிருக்கின்றது.

இவ்வரும் நூலில் நம்மவரின் நித்திய அலுவல்களாகிய உணவு, உடை, கைத்தொழில், வர்த்தகம் முதலிய விஷயங்கள் சம்மந்தமாக நம் சன் மார்க்கம் என்ன சட்ட திட்டங்களை ஏற்படுத்தி யிருக்கிற தென்பதையும், அவைகளிலெது வஸ்த்து சன்மார்க்கத்திற்கு முரண்பட்டிருக்கிறதென்பதையும் நன்கு விளக்கப் பட்டிருக்கிறது. எனவே இஃது நம்மவர்களுக்கு தக்கப் பிரயோசன மளிக்கவல்ல நூல் எனத் தைரியமாய்க் கூறலாம். இதில் 2000-க்கு அதிகமான "மஸ் அலாக்கள்" அடங்கியிருக்கின்றன. இதனை ஒவ்வொருவரும் வாங்கிப் பார்த்து பயனடைவார்களென மிக மிக எதிர் பார்க்கின்றோம்.

கிரயம் கலிக்கோ பைண்டு	ரூ. 1—8—0
அட்டை பைண்டு	ரூ. 1—4—0

கிடைக்குமிடம் :

மானேஜர்;
மத்ரஸா பாக்கியாத்துஸ்ஸாலிஹாத்,
அரபிக் காலேஜ், வேலூர்.

Printed at the Kesari Printing Works & Edited & Published by Moulvi A. R. Abdur Rahim Saheb, Manager, Hifazath-ul-Islam, 48, Angappa Naick St., G.T., Madras.